
கல்கி



ALKI மே 13, 1951 4 அண



நாளுக்கு நாள் அதிக
தெளிவுள்ள ஆரோக்கிய
மான சருமம்
கேடில் கலந்த ரெக்ஸோனு சோப்பை தினமும் குறைந்தபக்ஷம் இருமுறையாவது உபயோகிக்கத்தொடங்குங்கள். உங்கள் சருமம் அதிக ஆரோக்கியத்துடனும், தெளிவாகவும், அழகுவாய்ந்ததாயும் விளங்குவதை காண்பீர்கள்.
Rexona
ரெக்ஸோனு
கேடில் கலந்த சோப் இது ஒன்றே
RP. 73-172-55 TM.

குதூகலமாயிருக்கும் ஒரு குழந்தையின் சித்திரம்



கிளாக்ஸோ கொடுத்து வளர்த்தப்படும் குழந்தைகள் சுறுசுறுப்போடும், ஆரோக்கியமாகவும், சுமுகமாயுமிருக்கின்றன. பிரசித்தி பெற்ற கிளாக்ஸோ லேபரட்டரியில் ஜாக்கிரதையுடன் சமநிலையாகச்செய்யப்பட்டுள்ள பால் உணவு கிளாக்ஸோ. இதில் ஆரோக்கியமான இரத்தத்திற்குத் தேவையான இரும்புசத்தும், திடமான கைகால்களும், பற்களும் வளரச்செய்ய உதவும் விடமின் 'டி'யும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உஷ்ணமான பிரதேசங்களில் புட்டிகளில் விட்டுக்கொடுக்க மிகவும் உகந்தது. அன்றியும், காற்றுப்புகாமல் சீல் செய்த டின்களில் கிடைப்பதால் அதன் குணத்தை இழப்பதில்லை.



Glaxo

கிளாக்ஸோ குழந்தைகளின் பால் உணவு

கிளாக்ஸோ லேபரட்டரீஸ் (இந்தியா) லிட்., பம்பாய் • கல்கத்தா • மதராஸ்

LAS. (B)

உணவு வேளைச் சங்கடங்கள்?



அவற்றை இம்முறையில் ஒழியுங்கள்...

ஆகாரத்திற்குப் பின்னர், உணவு ஜீரணமாகாமல் வயிற்றுக்குள்ளேயே தங்கிப் புளித்துப்போய் ஒவ்வொரு ஆகாரத்திற்குப் பின்னும் தொல்லை அளிக்கிறதா? அப்படியானால் அதனின்றும் நிவிர்த்தியடையும் வழி இது தான். தங்கள் மருந்து வியாபாரியிடமிருந்து "பிஸ்மாக்" வரவழைத்து ஒரு டீஸ்பூன் அளவு (அல்லது 4/5 மாத்திரைகள்) சிறிது ஜலத்தோடு உட்கொள்ளவும். அதனால் வயிற்றிலுள்ள அதிகப்படியான புளிப்பு முறிக்கப்பட்டு வயிற்றின் உட்புற எரிச்சலும் தணிக்கப்படுகிறது. ஒவ்வொருவேளையும் ஆகாரத்திற்குப்பின் "பிஸ்மாக்" சில நாளைக்குச் சாப்பிடுவது அதன் நிவாரண வேலையைத் தொடர்ந்து செய்யச் சாத்தியமாகிறது.

"பிஸ்மாக்" எவ்வாறு வலியிலிருந்து நிவாரணம் தருகிறது.

வயிற்றுக் கோளாறுகளுக்கெல்லாம் முக்கிய காரணமான அதிகப்படியான புளிப்பை "பிஸ்மாக்" முதன்முதலில் முறித்துப் பயனற்றதாகச் செய்கிறது. புளிப்பை முறிக்கும் பொருள்கள் துரிதமாகவே வலியிலிருந்து நிவாரணம் அளித்தபின்னர் 'பிஸ்மாக்'கிலுள்ள மற்றுமுள்ள பொருள்கள் தங்கள் வேலையைத் துவக்குகின்றன. ஒன்று அதிகப்படியான புளிப்பு மேலும் சேருவதைத் தடுப்பது; மற்றொன்று வயிற்றின் உட்பாகத்து எரிச்சலைச் சமனப் படுத்திக் குணமளிப்பது.

'பிஸ்மாக்'

க்ஷணமே அஜீரணத்தைப் போக்குகிறது



மாத்திரைகளாகவும் பவுடராகவும் கிடைக்கும்

இந்தியாவில் தயாரிப்பவர்கள்:

ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்., பம்பாய்-1

பிராஞ்சுகள்: கல்கத்தா – மதராஸ் - டில்லி


புதுமையிலும்
புதுமை!
களவாட
வந்தவனை
காதலிக்கச்
சொல்லுகிறாள்
கன்னி!
ஏவி எம் புரொடக்ஷன்ஸ்
ஓர் இரவு
சென்னையில்
பாரகன் • கிரௌன்
லக்ஷ்மி • திருமகள்
மற்றும்
50 நகரங்களில்
வெற்றிகரமாக நடைபெறுகிறது
கதை, வசனம்:
C.N. அண்ணாதுரை M.A.
AVM
புரொடக்ஷன்ஸ்
டைரக்ஷன்:
P. நீலகண்டன்


பந்தோபஸ்து, சுகம், சிக்கனம், நவீனம்

யாவும் கொண்ட

பயர்ஸ்டோன்

Firestone

சூபர் பலூன்கள்



"சுகமுள்ள இன்பகர
சவாரிக்கு உகந்தவை"

கம் - டிப்பிடு டயர் இது ஒன்றே

மே மாதம் 17வ முதல்

தமிழ் நாட்டில் எல்லா முக்கிய இடங்களிலும் திரையிடப்படும் !



K & K ப்ரொடக்ஷன்ஸ்

ஜீவித நௌகா

தமிழ்

B.S. சரோஜா C.R. ராஜகுமாரி
திக்குறிச்சி சுகுமாரன் நாயர்
மற்றும் பலர்

டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை உள்பட மலேயா & சிலோன் :
நாராயணன் & கம்பெனி, லிமிடெட்
சென்னை

வட, தென் ஆற்காடு, செங்கல்பட்டு
ஸ்வாமி பிக்சர்ஸ், வேலூர்

கோயமுத்தூர் :
காமதேனு பிலிம்ஸ், கோயமுத்தூர்

மதராஸ் : மூர்த்தி பிக்சர்ஸ், சென்னை

திருச்சி—தஞ்சாவூர் : ஜம்பு பிக்சர்ஸ், திருச்சி

பம்பாய் : அல்லைய்ட் ஏஜென்ஸீஸ், பம்பாய்

மைசூர் சமஸ்தானம் :
பிரகாஷ் பிக்சர்ஸ், பெங்களூர்

கேரளம் :
ஸ்ரீ பிலிம் டிஸ்ட்ரிப்யூடிங் கம்பெனி, எர்ணாகுளம்


சேலம் : சேலம் சங்கர் பிலிம்ஸ், சேலம்

உலகெங்கும், வெற்றிபெற்ற மனிதர்கள்

ஜில்லெட்

உபயோகிக்கிறார்கள்...





ஒரு தனவந்தர் ப்ளூ ஜில்லெட்டை விட உயர்ந்ததாக பிளேடை வாங்க முடியாது. ஆயினும் இதன் விலை மிகவும் சரசமாயிருக்கிறது. இந்த புகழ்பெற்ற பிளேடுகள் நீடித்தகாலம் உழைப்பதால் ஒவ்வொரு மனிதனும் சமமான சுகபோகத்தை அனுபவிக்க முடியும். ப்ளூ ஜில்லெட் பிளேடுகளையே வாங்குங்கள். (மின்சாரத்தால் கெட்டியாக்கப்பட்டதும் பிரத்தியேகமாக பதப்படுத்தப்பட்டதுமான எஃகில் தயாரித்தது). உங்கள் நாகரீகமான தோற்றத்தினால் வாழ்க்கையில் வெற்றிபெற்ற மனிதர்களிடையே நீங்களும் இடம் பெறுங்கள்.

ப்ளூ ஜில்லெட் பிளேடுகள்

5 பிளேடுகளுக்கு 14 அணா

பொருள் அடக்கம்

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 10 இதழ் 41 | 1951 மே 13 | கர ஆ சித்திரை 30உ

இப்படியும் நிகழுமோ?	சாஸ்திரி	...	10
நிற்கட்டுமா? போகட்டுமா?	...	...	11
இதோ ஒரு குன்றிமணி!	...	...	13
கெபல்ஸ் பிரசாரம் பலிக்குமா?	...	...	14
கூப்பிடு கிழவரை!	...	...	15
வாழ்க பல்லாண்டு!	...	...	15
தெய்வ தரிசனம்	ரா. கி.	...	17
பொன்னியின் செல்வன்	கல்கி	...	22
அக்கப்போர்	...	...	32
கண்கள்	கே.டி. முகம்மத்—எஸ்.வி.எஸ்.	...	34
பூதம் காத்த சுரங்கம் (பாப்பா மலர்)	மாலு	...	41
தப்பிப் பிழைத்தது!	விஜயம்	...	44
எலிக்குஞ்சுகளின் யாத்திரை	சாமா	...	45
ரேடியோ வளையல்	கி. ரங்கராஜன்	...	46
ஆத்ம திருப்தி	அக்ஷயம்	...	50
மத்திய கேந்திரம்	ஜெயமணி	...	56
கற்பனையும் காரிகையும்	ரா. வீ.	...	59

அட்டைப்பட விளக்கம்

"சித்திரை வந்து விட்டது! அக்னி நட்சத்திரம் வந்து விட்டது! எந்த வருஷத்தையும் விட இந்த வருஷத்தில் வெய்யில் கொடுமை அதிகம். எப்படித்தான் சகிக்கப் போகிறோமோ, தெரியவில்லை!" என்று வயது முதிர்ந்தவர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

ஆனால் நம்ம கிட்டுவுக்குச் 'சித்திரை' என்றால் என்ன! அக்னி நட்சத்திரம் என்றால் என்ன!—என்று விளங்கவேயில்லை. 'வெய்யிலாவது! மண்ணாங்கட்டியாவது!' என்று சொல்லிக் கொண்டு விளையாடப் புறப்பட்டான். பெட்டியைத் திறந்து நல்ல சட்டையாக எடுத்துப் போட்டுக் கொள்ளலாம் என்று பார்த்தான். குளிருக்கு அடக்கமாகப் போட்டுக் கொள்ள ஏற்பட்ட கம்பளிச் சட்டைதான் அவன் கண்களைக் கவர்ந்தது. அதை எடுத்துப் போட்டுக் கொண்டு விளையாட வந்து விட்டான்.

இந்த இதழ் அட்டையில் கிட்டு கம்பளிச் சட்டையைப் போட்டுக் கொண்டு அடுத்த வீட்டு அம்புஜுவுடன் விளையாடிக் கொண்டிருக்கிறான். கோடை வெய்யிலில் அந்தக் கம்பளிச் சட்டையில் அவன் உடல் புழுங்குகிறது! அதை அவன் உணர்ந்தால்தானே! அவன் சிந்தனை முழுவதும்தான் அம்புஜுவைப் பெட்டியில் வைத்து இழுப்பதில் ஈடுபட்டிருக்கிறதே!

கோடை விடுமுறை விட்டாகி விட்டது. குழந்தைகள் வீட்டிலும் வாசலிலும் ஓடியாடிக் குதித்து கூத்தடிப் படுத்துவார்கள். நமது அட்டைச் சித்திரத்தில் ஒரு சிறுவன் நாற்காலியைக் குதிரையாக நினைத்து லகான் கட்டிச் சவாரி செய்கிறான்! இப்படி எத்தனையோ பாவனைகள் குழந்தைகளின் உள்ளத்தில் எழும். நாற்காலியை நாற்காலியாகவேதான் நம்மால் பார்க்க முடியும். நாற்காலியைக் குதிரையாகவோ, யானையாகவோ, மோட்டாராகவோ பார்க்கும் கற்பனை மனோபாவம் நமக்குக் கிடையாது. அப்படிப்பட்ட கற்பனை கிட்டவில்லையே என்றுதான் உலக மேதாவிகளும் கவிஞர்களும் ஏங்குகிறார்கள். நாம் அவ்விதம் ஏங்காவிட்டாலும், குழந்தைகள் விளையாடுவதைக் கண்டு கடிந்து கொள்ளாமல் ரஸிக்கலாமே!

"ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!"

என்று நம் தேசிய மகா கவி சுப்பிரமண்ய பாரதியாரும் பாடியிருக்கிறார் அல்லவா!

இப்படியும் நிகழுமோ ?



ஜனவரி — பிப்ரவரி
"20 லட்சம் டன் கோதுமை இனாமாகவே தருகிறோம். கவலைப்படாதீர்கள்."
மார்ச்சு
"இல்லை..இல்லை..பரிசாகக் கொடுக்க வில்லை. அந்தத்திருவாங்கூர் கடல் மணலுக்கு மாற்றுப் பண்டமாகத் தருகிறோம். என்ன..சரிதானே?"
ஏப்ரல்
"வாங்கோ வாங்கோ! கோதுமை கட்டாயம் தருகிறோம். ஆனால் கை மேல் பணத்தை வைத்து விடுங்கள்... என்ன?"
மே
"ஆ! என்ன காரியம் செய்தீர்கள்? கொஞ்சம் வாயைப் பொத்திக் கொண்டிருக்கப் படாதோ!
'பில்' பாஸாவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கும் போது இப்படி ஒரு பிரசங்கம் செய்து தொலைத்தீர்களே?"
ஜூன்
"அப்பாடா! ஒரு மாதிரி உங்கள் 'பில்லை' எங்கள் சட்டசபை அங்கீகரித்து விட்டது! வாங்கிக் கொள்ளுங்கள்!"
ஜூலை
"அது சரி! கொடுப்பதாகச் சொன்ன இருபது லட்சம் டன் கோதுமை எங்கே?"
"ஓ! அதுவா! அதற்கு அடுத்த வருஷ அறுவடை வரை பொறுத்திருங்கள்"

கல்கி

'நிற்கட்டுமா? போகட்டுமா?'

இந்த ஒற்றுமை என்கிற பிராணி இருக்கிறதே, அது ஒரு விநோதமான பிராணி. அது பறவையா அல்லது மிருகமா என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை. அதற்குச் சிறகுகள் உண்டு என்று தோன்றுகிறது. ஆனால் சிறகுகளை மறைத்து வைத்துக்கொண்டிருக்கிறது. அதைப் பிடிக்கப் போகிறவர்கள் அருகில் வருகிற வரையில் காத்திருக்கிறது. அருகில் வந்தவுடனே சிறகுகளை விரித்துச் சடபட வென்று அடித்துக்கொண்டு பறக்கிறது. பறந்து போய்க் கூரையின்மேல் உட்கார்ந்து கொள்கிறது. உட்கார்ந்து கொண்டு "நிற்கட்டுமா? போகட்டுமா?" என்று கூவுகிறது.

பாரத நாட்டின் சுதந்திரப் போரை நடத்தி விடுதலை கொண்டு வந்த காங்கிரஸ் மகாசபையில் சில காலமாக ஒற்றுமைப் பிராணியைப் பிடிக்கும் முயற்சி தீவிரமாக நடந்து வருகிறது. ஆனால் அந்தப் பிராணியோ இலகுவில் அகப்பட்டு விடும் என்று தோன்றவில்லை. அதைத் தொடர்ந்து போகப் போக அதுவும் தாவித் தாவிப் போய்க் கொண்டிருக்கிறது. சில சமயம் இறகுகளை அடித்துக் கொண்டு பறந்து கோபுரத்தின் உச்சியில் போய் உட்கார்ந்து கொள்கிறது. காங்கிரஸைச் சேர்ந்த ஒரு சில புண்ணியவான்கள் அவ்வப்போது அதைப் பயமுறுத்தி விரட்டும் கைங்கர்யத்தையும் செய்து வருகிறார்கள்.

உத்தரப் பிரதேசத்தில் ஒரு கோஷ்டியார் காங்கிரஸிலிருந்து முன்னம் பிரிந்து போனார்கள். வங்காளத்தில் டாக்டர் பி. ஸி. கோஷ் கோஷ்டியார் சமீபத்தில் பிரிந்து சென்றார்கள். ஆந்திர மாகாணத்தில் ஸ்ரீ பிரகாசம்—ரங்கா கூட்டம் சென்ற மாதத்தில் பிரிந்து சென்றது.

இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் விட அதிகமான கவலை அளித்துக் கொண்டிருந்தது காங்கிரஸுக்குள்ளேயே ஏற்பட்டிருந்த ஜனநாயக முன்னணி தான். இந்த முன்னணியின் இரண்டு முக்கிய தலைவர்களான ஆசாரிய கிருபளானியும் ஜனுப் கித்வாயும் பண்டித ஜவாஹர்லால் நேருவின் அபிமானத்தையும் நன்மதிப்பையும் பெற்றவர்கள். ஆசாரிய கிருபளானி காங்கிரஸ் அக்கிராசன பதவி வகித்தவர்; சிறந்த அறிவாளி. ஜனுப் கித்வாய் நிர்மாண வேலைத் திறமைக்குப் பெயர் போனவர். உத்தரப் பிரதேசத்தில் (அதாவது பழைய ஐக்ய மாகாணத்தில்) சென்ற தேர்தலில் காங்கிரஸின் வெற்றிக்கு முக்கிய காரணமாயிருந்தவர் ஜனுப் கித்வாய் என்று சொல்லுகிறார்கள். இவர்களுடைய ஒழுக்கத்தைப் பற்றியோ நோக்கத்தைப் பற்றியோ அப்பழுக்குச் சொல்வதற்கில்லை. சுயநலக் கலப்பற்ற தேசபக்தர்கள். 1917-ல் நடந்த சம்பாரான் போராட்டத்திலிருந்து ஆசாரிய கிருபளானி காந்தி மகானுடைய சத்தியப் படையில் சேர்ந்து போராடி வந்த வீரர். ஜனுப் கித்வாயும் பழம்பெரும் தேசபக்தர்தான். இவர்களை ஆதரிப்பவர்கள் பலர் காங்கிரஸ் ஸ்தாபனத்துக்குள்ளே உண்டு. ஆகையினாலேயே இவர்களுடைய போக்கு எப்படியிருக்கும் என்பதைப் பற்றிக் கவலை அதிகம் ஏற்பட்டிருந்தது.

சென்ற ஆண்டில் காங்கிரஸ் அக்கிராசன பதவிக்குப் போட்டி எழுந்த போது, பாபு புருஷோத்தம்தாஸ் டாண்டன் அதிகார வர்க்க காங்கிரஸ் கோஷ்டியின் சார்பாக நின்றார் என்று கருதப்பட்டது. காங்கிரஸைத் தூய்மைப் படுத்த விரும்பிய கூட்டத்தாரின் சார்பில் ஆசாரிய கிருபளானி நின்றதாகச் சொன்னார்கள். டாண்டனை ஸர்தார் படேலும் கிருபளானியை ஜவாஹர்லால் நேருவும் ஆதரித்ததாக ஒரு வதந்தி பரவியது. முடிவில், அதிகார வர்க்கக் காங்கிரஸின் பிரதிநிதி டாண்டன் சில அதிக வோட்டுக்களினால் வென்றார். இதைப் பண்டித ஜவாஹர்லால் நேரு விரும்பவில்லையென்றும் சொன்னார்கள்.

ஆனால் ஜவாஹர்லால் நேரு இதைப் பற்றி அபிப்பிராயம் எதுவும் வெளியிடவில்லை. நாஸிக் காங்கிரஸில் ஜவாஹர்லால்ஜி கொண்டு வந்த தீர்மானங்கள் எல்லாம் அப்படி அப்படியே நிறைவேறின. சர்தார் படேல் வாயைத் திறக்கவில்லை. "தீர்மானங்களெல்லாம் உங்களுக்கு; காங்கிரஸ் ஸ்தாபனம் எங்களுக்கு" என்று சர்தார் படேல் சும்மா இருந்ததாகக் கூறப்பட்டது.

இதில் ஓரளவு உண்மை உண்டு என்பது போகப் போக வெளியாயிற்று. அக்கிராசனர் டாண்டன் அமைத்த காரியக் கமிட்டியில் மாகாணக் காங்கிரஸ் தலைவர்களே அதிகமாக இடம் பெற்றார்கள். அதிகார வர்க்கக் காங்கிரஸ் எல்லா மாகாணங்களிலும் பலம் பெற்றது. இதன் காரணமாக அங்கங்கே காங்கிரஸிலிருந்து வெளியேறும் விழாக்களும் வெளியேற்றும் விழாக்களும் நடைபெறலாயின.

ஆனால் பண்டித ஜவாஹர்லால் நேரு காங்கிரஸின் பலத்தை எந்த விதத்திலும் குறைக்க விரும்பவில்லை; காங்கிரஸின் ஒற்றுமையைக் குலைக்கவும் விரும்பவில்லை. குற்றங் குறைகளைப் போக்கிக் காங்கிரஸின் தூய்மையையும் வலிமையையும் நிலைநாட்டவே விரும்பினார்.

ராஷ்டிரபதி டாண்டனும் தமது ஆட்சியின்கீழ் காங்கிரஸ் சீர்குலைவதை விரும்பவில்லை. ஸ்தாபனத்தைத் தூய்மைப்படுத்தவும் ஒற்றுமையை நிலை நாட்டவும் விரும்பினார். மத்திய ஸ்தாபனத்தில் கிருபளானியும் கித்வாயும் ஒத்துழைக்க முன்வந்தால், மாகாணங்களின் நிலைமையை எளிதில் சீர்ப்படுத்தி விடலாம் என்றே அனைவரும் எண்ணினார்கள். எனவே, கிருபளானி கித்வாயைச் சரிக்கட்டப் பெருமுயற்சி நடந்தது. ஆமதாபாத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் ஒற்றுமைத் தீர்மானம் நிறைவேறியது. இதன் பயனாக ஒற்றுமை ஏற்பட்டுவிடலாம் என்று நினைத்தோம். நினைத்தபடி நடைபெறவில்லை. "நிற்கட்டுமா? போகட்டுமா?" என்றுதான் ஒற்றுமைப் பிராணி கேட்டுக் கொண்டிருந்தது.

கடைசியாக, புதுடில்லியில் கூடிய அ. இ. கா. கமிட்டி கூட்டத்தில் ஏதேனும் நல்ல முடிவு நிச்சயமாக ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். கூட்டத்துக்கு முதல் நாள் ஜனநாயக முன்னணியைக் கலைத்துப் போட்டதாகச் செய்தி வந்ததும் மக்களின் ஆவல் அதிகமாகி நம்பிக்கையும் வலுப்பட்டது. ஆனால் இம்முறையும் முடிவில் ஏமாற்றந்தான்.

மத்திய தேர்தல் கமிட்டி அங்கத்தினர் ஐந்து பேரையும் ஜவாஹர்லால்ஜி அல்லது ஆஸாத் பிரேரணை செய்திருந்தால், அவர்களில் கிருபளானியும் கித்வாயும் இருந்திருந்தால், ஒற்றுமை ஏற்பட்டதற்கு அறிகுறியாயிருந்திருக்கும்.

அவ்விதம் நடைபெறவில்லை. பம்பாய் மாகாணக் கமிட்டி தலைவர் ஸ்ரீ பாடில் ஐந்து பெயர்களைப் பிரேரணை செய்தார். அவர்கள் ஐவரும் காங்கிரஸ் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே.

கித்வாயும் கிருபளானியும் மேற்கொண்டு தங்கள் நிலை இன்னதென்பதை இன்னும் வெளியிடவில்லை.

ஆகவே ஒற்றுமை என்னும் சிறகு படைத்த பிராணி "நிற்கட்டுமா! போகட்டுமா!" என்றுதான் இன்னமும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

*   *   *   *

ஒற்றுமை முயற்சி இதுவரையில் பலன் தராமல் போனதற்குக் காரணங்கள் பல இருக்கின்றன. அவற்றில் முக்கியமானது, ஜவாஹர்லால்—டாண்டன் முயற்சிகளுக்கு மாகாணங்களில் போதிய ஒத்துழைப்பு இல்லாமலிருப்பதுதான். மாகாணங்களில் காங்கிரஸ் ஸ்தாபனங்களைக் கைப்பற்றிக் கொண்டிருப்பவர்கள் ஒற்றுமையைப் பற்றிக் கவலைப்படவில்லை; அதிகாரத்திலேயே கண்ணாயிருக்கிறார்கள். மற்றவர்கள் காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடப்பதற்கு வேண்டிய பொறுமை அற்றுப் போய்விட்டார்கள். பிரிந்து போனாலன்றித் தங்களுக்கு அரசியலில் இடமில்லை என்ற மனோநிலைக்கு வந்து விட்டார்கள். பொதுத் தேர்தல் சமீபித்திருப்பதால் இரண்டு பக்கங்களிலும் உணர்ச்சி விருவிருப்பு அதிகமாகி விட்டது. பலாபலன்களைப் பற்றி ஆழ்ந்து யோசிக்கும் சக்தி போய் விட்டது.

*   *   *   *

அகில இந்திய நிலைமை எப்படியானாலும், மற்ற மாகாணங்களின் போக்கு எவ்விதமிருந்தாலும், தமிழ் நாட்டில் காங்கிரஸிலிருந்து வெளியேறும்

முயற்சி எதுவும் நடைபெறாது என்று நம்புகிறோம்; அதற்கு இப்பொழுது அவசியமில்லை என்றும் கருதுகிறோம்.

குற்றங் குறைகளைப் பரஸ்பரம் எடுத்துச் சொல்லித் தீர்த்துக் கொள்ளலாம். அல்லது போராடியும் தீர்த்துக் கொள்ளலாம். உடனே இம் முயற்சிகள் பலன் அளிக்கா விட்டாலும் அதற்காக யாரும் ஏமாற்றம் அடையவேண்டியதில்லை. உண்மை வெல்லும் என்ற நம்பிக்கையுடன் பிரயத்தனம் செய்து வந்தால் பலன் கிட்டாமற் போகாது.

காங்கிரஸைக் காட்டிலும் தேச விடுதலைக்குப் பாடுபட்ட ஸ்தாபனம் வேறு ஒன்றுமில்லை. காங்கிரஸைக் காட்டிலும் நல்ல முறையில் ஆட்சி நடத்தக் கூடிய ஸ்தாபனமும் தற்சமயம் இந்த மாகாணத்தில் இல்லை. அப்படி ஒரு ஸ்தாபனம் ஏற்படும் வரையில் காங்கிரஸை ஆதரித்து நிற்பதுதான் முறையாகும்.

இதோ ஒரு குன்றிமணி!

அழகான குன்றிமணி ஒன்று இருந்தது. அஜந்தா சித்திரக்காரர்கள் தீட்டிய வர்ணத்தைப்போல் அழியாத வர்ண வேறுபாடுகளுடன் ஜொலித்தது. அதைப் பார்த்தாலே பசி தீரும் என்று சொல்லும்படி இனிய தோற்றம் கொண்டிருந்தது.

அந்தக் குன்றிமணி அடக்கம் உடையது. செயற்கை வர்ணங்களைப் பூசிக் கொண்டு வெளி வந்த பற்பல நவநாகரிக மணிகளைக் கண்டு ஒதுங்கி நின்றது. அதன் எதிரே ஏதேதோ பொருள்கள் சேர்ந்தன. கடைசியில் அதை மறைத்துக் கொண்டு ஒரு பெரிய குப்பை மேடு எழுந்து விட்டது. குன்றிமணி இருந்த இடம் தெரியவில்லை. குன்றிமணி ஒன்று இருந்தது என்பதையே அனைவரும் மறந்து விட்டார்கள். அதைப் பற்றி அந்தக் குன்றிமணி வருத்தப்பட்டதோ என்றால், கிடையாது. 'நம் அதிர்ஷ்டம் அவ்வளவுதான்' என்று எண்ணி ஒதுங்கியே நின்றது. 'வேறு யாரும் நம்மைக் கவனியா விட்டால் போகட்டும், நம்மைப் படைத்த இறைவன் ஒருவன் இருக்கிறான் அல்லவா! அவனுடைய தண்ணருள் ஒன்றே போதும்!' என்று எண்ணி அக் குன்றிமணி இருந்து விட்டது.

அந்தக் குன்றிமணியை ஒத்தவர் அறிவாளியும் சிந்தனையாளரும் நூலாசிரியருமான ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி அவர்கள். சோழ நாட்டின் பழம் பெரும் தலைநகரான காவேரிப் பூம்பட்டினத்தில் பிறந்தவர். இளமையில் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் மாணவர்களின் திலகமாயிருந்து புகழுடன் பரீட்சைகளில் தேறியவர். எம்.ஏ., பி.எல்., பட்டம் பெற்று வக்கீல் தொழில் செய்யப் புகுந்தார். அந்தத் தொழிலில் மனம் பற்றுக் கொள்ளவில்லை. கலைத்தேவி தனக்குத் தொண்டு செய்யும்படி அவரை அழைத்தாள். எழுதும் தொழிலில் புகுந்தார். ஆங்கிலத்தில் இனிய கட்டுரைகள் பல எழுதினார்; கதைகள் எழுதினார்; நீண்ட நாவல்களும் எழுதினார். அவை இலக்கிய ரசிகர்களின் உள்ளங்களை வெகுவாகக் கொள்ளை கொண்டன. ரசிகர்கள் ஸ்ரீ வேங்கடரமணியைப் பெரிதும் பாராட்டினார்கள்.

அவருடைய ஆங்கில நூல்களில் "முருகன் ஓர் உழவன்" என்னும் பெருங்கதையை ஸ்ரீமதி சாவித்திரி அம்மாள் அழகிய தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார். அதைப் பார்த்ததும் தாமே தமிழில் எழுதலாமே என்று ஸ்ரீ வேங்கட ரமணிக்குத் தோன்றியது. "தேச பக்தன் கந்தன்" என்னும் அழகிய நவீனத்தைத் தமிழிலேயே எழுதினார். கவிதைக் கலை பொருந்திய இனிய தமிழ் நடையில் எழுதினார். அதுவும் சீக்கிரம் ரசிகர்களின் உள்ளங்களைக் கவர்ந்தது.

அதற்குப் பிறகு ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி "பாரத மணி" என்னும் தமிழ் மாதப் பத்திரிகையைத் தொடங்கி நடத்தினார். பத்திரிகை நடத்துவதில் பலரும் அடைந்த அனுபவங்களை அவரும் அடைந்தார். ஆர்ப்பாட்ட படாடோபங்கள் நிறைந்த உலகத்தில் அடக்கமுள்ள ஸ்ரீ வேங்கடரமணி இடித்துப் பிடித்துக் கொண்டு முன்னால் வர முடியவில்லை. பேரிகை முழக்கங்களுக்கு மத்தியில் மெல்லிசையின் சத்தம் கேட்கவில்லை. பாரதமணி இலை மறை பூவாகவே இருந்து வந்தது. கடைசியில் ஒரு நாள் உதிர்ந்து விழுந்து விட்டது. ஸ்ரீ வேங்கடரமணியின் கையிலிருந்த பொருளும் அதற்குள் மறைந்து விட்டது.


ஸ்ரீ கே. எஸ். வேங்கட ரமணி

சில காலம் ஸ்ரீ வேங்கடரமணி என்று ஒருவர் இருந்தார், அவர் சிறந்த இலக்கியத் தொண்டு புரிந்தார் என்பதே எல்லாருக்கும் மறந்துபோயிருந்தது. இப்போது அதை நினை

ஊட்டச் சில அன்பர்கள் முன் வந்திருக்கிறார்கள். மறைந்திருந்த குன்றிமணியை நம் முன்னால் கொண்டு வந்து நிறுத்தி யிருக்கிறார்கள்.

ஆசிரியர் கே. என். வேங்கடரமணி அவர்களுக்கு இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் அறுபது ஆண்டு பூர்த்தியாகிறது. அந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்கு ஒரு பாராட்டு அளிக்க வேண்டும் என்று இலக்கிய அன்பர்கள் சிலர் தீர்மானித்திருக்கிறார்கள். வெறும் பாராட்டுதல் மட்டும் போதுமா! வறுமையின் கொடுமையிலிருந்து அவரை ஓரளவேனும் விடுவிக்கவும் விரும்புகிறார்கள். அதற்காக நிதி வசூல் செய்து அவரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று விரும்பிப் பிரயத்தனம் தொடங்கி யிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் பிறந்த ரஸிகர்களில் சிறந்த ஒருவரான ஸ்ரீ டி. பி. ராமஸ்வாமி ஐயர் இத்துறையில் வழிகாட்ட முன் வந்திருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். ஆயிரம் ரூபாய் நன்கொடையுடன் நிதியை அவர் ஆரம்பித்து வைத்திருக்கிறார். உண்மையான இலக்கியப் பற்றுள்ளவர்கள் அனைவரும் இந்தச் சிறந்த பணிக்கு உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அவரவர்களுடைய சக்திக்கு உகந்த அளவில் நன்கொடை அனுப்பக் கோருகிறோம். ஆயிரம் ரூபாயும் அனுப்பலாம்; ஐந்து ரூபாயும் அனுப்பலாம்.

தமிழ்நாட்டின் மற்றொரு சிறந்த இலக்கிய ரஸிகரான ஸ்ரீ கி. சந்திரசேகரன் இந்தத் திருப்பணியின் பொறுப்பை ஏற்றிருக்கிறார். ஸ்ரீ வேங்கடரமணி ஷஷ்டியப்தபூர்த்திக் கமிட்டியின் காரியதரிசியாக அமைந்திருக்கிறார். நிதிக்குப் பணம் அனுப்புவோர் பின் வரும் விலாசத்துக்கு அனுப்பக் கோருகிறோம்: ஸ்ரீ கி. சந்திரசேகரன்; 'ஆசிரமம்,' லஸ், மயிலாப்பூர், சென்னை.

கெபல்ஸ் பிரசாரம் பலிக்குமா?

பச்சைப் புளுகு இழிவானது. ஆனால் பிரசாரப் புளுகு இருக்கிறதே, அது மகா பயங்கரமானது.

பச்சைப் புளுகின் சொரூபத்தைப் பொது ஜனங்கள் அறிந்து கொள்வார்கள். பிரசாரப் புளுகோவெனில், தன் சொரூபத்தை முற்றிலும் மறைத்துக் கொண்டு விடுகிறது. ஆகையால் உண்மை பொய்யாகவும் பொய் உண்மையாகவும் தோன்றும்படி செய்து விடுகிறது.

சென்ற உலக மகா யுத்தத்தின்போது ஹிட்லரின் சகாக்களில் ஒருவரான கெபல்ஸ் இதை நன்கு கையாண்டு வந்தார். பொய்ப் பிரசாரத்தை ஓர் அருங்கலையாகவே ஆக்கிவிட்டிருந்தார். அவர் கிளப்பிவிட்ட பொய்கள் பல உலகெங்கும் உலாவி வந்தன. சில காலம் அவற்றை உலக மக்களில் பெரும்பாலோர் உண்மை என்றே நம்பி வந்தார்கள். முடிவில், அவருடைய பிரசாரம் வெற்றி பெறவில்லை.

இப்போது அந்த கெபல்ஸ் ஸ்தானத்தை வேறு சிலர் உலக அரங்கத்தில் வகித்து வருகிறார்கள். அவர்களில் முக்கியமான ஒருவர் பாகிஸ்தான் அயல்நாட்டு மந்திரியான ஸர் ஜபருல்லா கான்.

பாரதநாட்டில் முஸ்லிம்கள் மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டிருப்பதாகப் பாகிஸ்தானிகள் தங்கள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் அடிக்கடி பிரசாரம் செய்து வருகிறார்கள். சில தினங்களுக்கு முன் ஐக்கிய நாடுகள் சபையில் காஷ்மீர் விஷயமாக விவாதம் நடந்தது அல்லவா! அப்போது இந்திய முஸ்லிம்களைப் பற்றிய பேச்சு அங்கு எழவேண்டிய அவசியமே இல்லை. அப்படி யிருந்தும் சர் ஜபருல்லாகான், இந்தியாவில் முஸ்லிம்கள் எவ்வித உரிமையுமின்றிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதாகச் சொல்லி ஒரு குடம் கண்ணீர் வடித்தார்.

இது மிகவும் அநீதியான முழுப் பொய்யை அடிப்படையாகக் கொண்ட குற்றச்சாட்டு.

இந்தியாவில் தலைமை சர்க்காரிலும் மாகாண சர்க்கார்களிலும் பல முஸ்லிம்கள் மந்திரிகளாக இருக்கிறார்கள். முஸ்லிம்கள் உயர்தர நீதி மன்றங்களில் நீதிபதிகளாகவும் வெளிநாடுகளில் இந்திய ஸ்தானிகர்களாகவும், உயர்தர இராணுவ அதிகாரிகளாகவும் பதவி வகிக்கிறார்கள். இந்தியப் பார்லிமெண்டில் ஏராளமான முஸ்லிம்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். ஆனால் பாகிஸ்தானிலோ உயர்தரப் பதவிகளில் ஹிந்துக்கள் யாருமே இல்லை.

உண்மை இவ்விதமிருந்தும், பாகிஸ்தான் அரசியல்வாதிகளின் பிரசாரப் புளுகு நேர் மாறான நிலைமையை உலகத்துக்குச் சித்திரித்துக் காட்டுகிறது.

• • •

இந்தச் சந்தர்ப்பத்தில் கல்கத்தாவில் சென்ற வாரம் கூடிய அகில இந்திய முஸ்லிம்கள் மகாநாடு உலகத்துக்கு உண்மையை எடுத்துக் கூறியிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். அந்த மகாநாட்டுக்குத் தலைமை வகித்த ஹுமாயூன் கபீர் பாகிஸ்தானின் பிரசாரப் புளுகுக்குப் பலமான அடி கொடுத்தார். சில காலத்துக்கு முன்பு கராச்சியில் கூடிய உலக முஸ்லிம்கள் மகா நாட்டின் வேஷத்தைக் கலைத்து அதன் சொரூபத்தை அம்பலப் படுத்தினார். ஜவாஹர்லாலின் தலைமையில் இந்தியாவின் நாலு கோடி முஸ்லிம்களுக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது என்று உலகம் அறியப் பிரகடனம் செய்தார். இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் சகல உரிமைகளையும் அநுபவித்து வருவதைச் சுட்டிக் காட்டினார்.

காஷ்மீர் விஷயமாக இந்திய சர்க்கார் அநுஷ்டித்து வரும் கொள்கையை ஆதரித்தும் அகில இந்திய முஸ்லிம்கள் மகாநாட்டில் தீர்மானம் நிறைவேறியது. மதத்தை அடிப்படையாகக் கொண்டு காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்க முயல்வது பேராபத்தாக முடியும் என்று மேற்படி மகாநாட்டில் எச்சரித்தனர்.

நாற்பது லட்சம் காஷ்மீர் முஸ்லிம்களின் மனோநிலையைச் சில தினங்களுக்கு முன் ஸ்ரீநகரில் நடந்த காஷ்மீர் தேசிய முஸ்லிம்களின் மகாநாடு பிரதிபலித்தது. இந்தியாவில் உள்ள

நாலு கோடி முஸ்லிம்களின் மனோ நிலையை இப்போது கல்கத்தாவில் நடந்த அகில இந்திய முஸ்லிம்களின் மகாநாடு பிரதிபலித்திருக்கிறது. இந்த நாலரைக் கோடி முஸ்லிம்களின் ஏகோபித்த உண்மைக் கருத்து வெல்லுமா! அல்லது ஸர் ஜபருல்லாகான் முதலிய பாகிஸ்தான் தலைவர்கள் செய்துவரும் பொய்ப் பிரசாரம் பலிக்குமா!—எதற்கு அதிக வலிமை இருக்கும்!

கூப்பிடு கிழவரை!

"நடக்கிறதெல்லாம் நடக்கட்டும்; கிழவரைக் கூப்பிட்டு மணையிலே வை!" என்று ஒரு பழமொழி உண்டு.

சமீபத்தில் நடந்த ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களின் கூட்டம் மேற்படி பழமொழியை நமக்கு நினைவூட்டுகிறது.

ஜஸ்டிஸ் கட்சியை மீண்டும் உயிர்ப்பிப்பது என்று அத் தலைவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். பொதுத் தேர்தலில் போட்டி யிடுவது என்றும் முடிவு செய்திருக்கிறார்கள்!

அதாவது அரைக்கால் கலியாணம் ஆகிவிட்டது! கிழவரைக் கூப்பிட்டு மணையிலே வைத்தாகிவிட்டது! இனிமேல் கலியாணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டியதுதான்! பெண்ணைத் தேட வேண்டியதுதான்! பந்தல் போட வேண்டியதுதான்! மேள தாளங்களை அமர்த்த வேண்டியதுதான்! அழைப்பு அச்சடித்தல் இருக்கவே இருக்கிறது! இவையெல்லாம் என்ன பிரமாதம்! கிழவர் மணையில் உட்கார்ந்து விட்டார் என்றால், மற்ற சாதனங்கள் கதறிக்கொண்டு ஓடி வருகின்றன!

உயிர்ப்பிக்கப்பட்ட ஜஸ்டிஸ் கட்சியின் தலைவராக ஸ்ரீ பி. டி. ராஜன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இதைப் பற்றி நமக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சி; இன்னொரு பக்கத்தில் கவலை.


இந்த வருஷத்தின் ஆரம்பத்தில் ஸ்ரீ பி. டி. ராஜன் தமிழ் நாட்டுக்கு ஓர் அரும்பெரும் தொண்டு செய்தார். மலையாள நாட்டிலிருந்து ஸ்ரீ ஐயப்பன் என்னும் தெய்வத்தை இறக்கிக் கொண்டுவந்தார். தமிழ்நாடெங்கும் எழுந்தருளச் செய்தார். "ஸ்வாமி! சரணம்! ஐயப்பா!" என்ற கோஷம் எங்கெங்கும் ஒலித்தது. ஸ்ரீ ஐயப்பன் தமிழ் நாட்டில் ஊர்வலம் வந்து சென்ற பிறகு பல இடங்களில் நல்ல மழை பெய்தது. அனைவரும் ஐயப்பனுடைய அருள் மழை என்றே கருதி மகிழ்ந்தார்கள். பக்தி பரவசமடைந்தார்கள். ஆஸ்திக மகாஜனங்கள் ஸ்ரீ பி. டி. ராஜனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

இப்போது ஸ்ரீ பி. டி. ராஜன் ஜஸ்டிஸ் கட்சியின் தலைவராக இருந்து பொதுத் தேர்தலில் போட்டியிடப் போகிறாரே! தேர்தலில் அவருடைய கட்சி வெற்றிபெறாவிட்டால்,......

நல்லது; அதனால் விளையக்கூடிய அபகீர்த்தி ஸ்ரீ ஐயப்ப ஸ்வாமியை அடையாமலிருக்க வேண்டுமே என்றுதான் கவலைப்படுகிறோம்.

ஸ்வாமி! சரணம்! ஐயப்பா!

வாழ்க பல்லாண்டு!



தூத்துக்குடி தேச பக்திக்கும் தியாகத்துக்கும் பெயர் போனது. அந்த நகர் தந்த தேச பக்தர்களில் திரு பெ. கந்தசாமிப் பிள்ளை அருமையான ஒரு தேச பக்தர். கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார், தேசிய மகாகவி பாரதியார், ஸ்ரீ சுப்பிரமண்ய சிவம் போன்ற தேச பக்த வீரர்களின் பரம்பரையில் வந்தவர். எவ்விதப் பதவியையும் சுயலாபத்தையும் எதிர்பாராமல் தேசத் தொண்டு புரிந்து வந்தவர். வாழ்க்கையின் பல வேறு இடுக்கண்களையும் சகித்துக் கொண்டு தேசிய ஆர்வம் குன்றாதிருப்பவர்; நேர்மை தவறாதிருப்பவர்; தூத்துக்குடியில் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் தூய்மை குன்றாதிருப்பதற்குப் பெரிதும் காரணமாயிருப்பவர். அத்தகைய தேசபக்த வீரருக்கு இம் மாதம் 1உ அறுபது ஆண்டு பூர்த்தியாயிற்று என்பதை அறிந்து மகிழ்கிறோம். தூத்துக்குடி நகரவாசிகளும் தேசத் தொண்டர்களும் அவருடைய அறுபதாம் ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள் என்பதை அறிந்து மேலும் மகிழ்கிறோம். எளிய வாழ்வையே பூஷணமாகக் கொண்ட தேச பக்தர் கந்தசாமிப் பிள்ளை அவர்களுக்கு முதுமைப் பிராயத்தில் வாழ்க்கையைப் பற்றிய கவலையில்லாமல் செய்வது தமிழ் மக்களின் கடமையாகும். ஸ்ரீ கந்தசாமிப் பிள்ளை பல்லாண்டு வாழ்ந்து தூய்மைக்கும் நேர்மைக்கும் எடுத்துக் காட்டாக விளங்கி வருவாராக.



அதிக

மலர்ச்சியைத்தருவது...

ஹிமாலயா புக்கெ

டாய்லட், டால்கம் பௌடர்களின்

இளமையான பரிமளம்



நேர்த்தியான ஹிமாலயா புக்கெ பௌடர்கள் உங்கள் அழகு பராமரிப்பிற்கு உத்தமமானவை. அவை வேர்வையை உறிஞ்சுகின்றன, சருமத்திற்கு குளுமையும் ஆறுதலும் அளிக்கின்றன. அவைகளின் மனதை மயக்கும் பரிமளம் வெகுநேரம் நீடித்திருக்கிறது.

நேர்த்தியான இரு **இராஸ்மிக்** தயாரிப்புகள்

HBP. 2-172-55 TM

இராஸ்மிக் கம்., லிட்., லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தவை

தெய்வ தரிசனம்

ரா.கி.

1

"கடவுளைக் கண்டதுண்டா?" என்ற கேள்வியைப் பலர் கேட்டதுண்டு. ஸ்ரீ விவேகானந்தர் அவ்விதம் கேட்டதற்குப் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் "ஆம்; கடவுளை நான் கண்டிருக்கிறேன்; உனக்கும் காட்ட முடியும்!" என்று கூறிய பதில் பிரசித்தமானது.

ஒரு மாதத்துக்கு முன்னால் என்னை யாராவது "நீர் தெய்வத்தைக் கண்டதுண்டா?" என்று கேட்டிருந்தால், "இல்லை, ஐயா! மன்னிக்கவும்!" என்று சொல்லியிருப்பேன். இன்று யாராவது அவ்விதம் என்னைக் கேட்டால், "ஆம்; தெய்வத்தைக் கண்டேன். ஏப்ரல் 29-ந் தேதியிலிருந்து மூன்று தினங்கள் யாழ்ப்பாண நகரத்தில் தெய்வத்தைக் கண்டேன். தாங்களும் வந்திருந்தால் தரிசித்திருக்கலாம்!" என்று பதில் சொல்லுவேன்.

நான் கண்ட தெய்வம் தமிழ்த் தெய்வந்தான். பக்தி ஆவேசம் கொண்ட அறுபதினாயிரம் மக்களின் மத்தியில் தமிழ்த் தெய்வம் கொலு வீற்றிருக்கக் கண்டேன். அந்தக் காட்சியை நான் என்றும் மறக்க முடியாது. மீண்டுமொரு முறை அவ்வாறு தமிழ்த் தெய்வத்தைத் தரிசிக்க முடியாவிட்டாலும், வாழுநாள் முழுதும் நினைத்து நினைத்து இன்புறுவதற்கும் பெருமை அடைவதற்கும் அதுவே போதும்.

* * *

"சமய கோடிகளெலாம் தன் தெய்வம் என் தெய்வம் என்று—எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றதெது?" என்று தாயுமானவர் என்னும் பெரியார் பாடியிருக்கிறார். அவர் எந்தத் தெய்வத்தைக் குறித்து இவ்விதம் கூறினார்? தமிழ்த் தெய்வத்தைப் பற்றித்தான் அவர் சொல்லியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. சொல்லியிருந்தால் மிகப் பொருத்தமாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆதிகாலிலிருந்து தமிழகத்தில் குடிபுகுந்த சமயங்களெல்லாம் தமிழ்த் தெய்வத்துக்குத் தங்கள் பாத காணிக்கையைச் செலுத்திப் போற்றியிருக்கின்றன. 'தன் தெய்வம் என் தெய்வம்' என்று போட்டியும் இட்டிருக்கின்றன. சமயப் பிரசாரம் செய்ய இங்கு வந்த பெரியார்கள் பலர் விரைவிலேயே வந்த காரியத்தை மறந்து தமிழ்த் தெய்வத்தின் வழிபாட்டில் இறங்கியிருக்கிறார்கள். முருகனைத் தெய்வமாகக் கொண்ட பழந்தமிழர்கள் தமிழ்த் தெய்வத்தைப் போற்றி மகிழ்ந்திருக்கிறார்கள். தமிழகத்தில் ஒரு சமயம் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்த சமணர்களும் புத்தர்களும் தமிழ்த் தெய்வத்துக்குப் பாமாலை பல சூட்டி மகிழ்ந்தார்கள்; காவிய அணிகளினால் அலங்கரித்து இன்புற்றார்கள். சைவர்களும் வைஷ்ணவர்களும் தத்தம் தெய்வங்களைப் பற்றிப் பாடியபோது தமிழ்த் தெய்வத்தையும் சேர்த்தே பாடினார்கள். பிற்காலத்தில் நம் நாட்டைத் தேடிவந்த முஸ்லிம்களும் கிறிஸ்துவர்களும் தமிழ்த் தெய்வத்தைப் பணிந்தேற்றிக் காவிய மாலைகள் புனைந்திருக்கிறார்கள். தமிழ் மொழியைத் தவிர வேறு எந்த மொழியேனும் இவ்வாறு பல்வேறு சமயத்தவர்களால் கொண்டாடப் பட்டிருக்கிறதா? சந்தேகந்தான். எனவே, தாயுமானவரின் அருள் வாக்கில் குறிப்பிட்ட தெய்வம் ஏன் தமிழ்த் தெய்வமாக இருக்கக் கூடாது? அல்லது நாம் ஏன் அவ்விதம் வைத்துக்கொள்ளக் கூடாது?—யாழ்ப்பாணத் தமிழ்த் திருவிழாவில் பூஜ்யர் தனிநாயகம் என்னும் பாதிரியார் இனிய தமிழில் சொற்பொழிவு ஆற்றி வந்தபோது, எனக்கு மேற்கண்டவாறு தோன்றியது. இந்தப் பாதிரியார் யாழ்ப்பாணத்தவர். தூத்துக்குடியில் வசிக்கிறார். உலகமெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்து, எங்கெங்கும் தமிழின் பெருமையை எடுத்துச் சொல்லிவிட்டுத் திரும்பியிருக்கிறார். அடடா! எவ்வளவு அழகாக ஒவ்வொரு சொல்லையும் நிறுத்து அமைத்து, அழகிய தமிழ் நூல் எடுத்துக் காட்டுகளுடன், அவர் சொற்பொழிவு ஆற்றினார்!

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!"

என்று அவர் சொற்பொழிவை முடித்த பாணி எவ்வளவு நன்றாயிருந்தது?......

[என்ன? நேயர்கள் என்ன சொன்னீர்கள்? இதோ, விமானப் பிரயாணத்தின் போது காதில் வைத்து அடைத்திருந்த பஞ்சை எடுத்து விட்டேன். இப்போது



தமிழ் விழாவை இலங்கைக்கு அழைத்த கல்வி மந்திரி கனகரத்தினம்

நீங்கள் சொல்வது காதில் விழுகிறது. "திடுதிப்பென்று இடை நடுவில் தொடங்குகிறீரே? கதையை ஆரம்பத்திலிருந்தே தொடங்குக!" என்று கட்டளையிடுகிறீர்கள். சரிதானே?]

முதலும் நடுவும் முடிவும் இல்லாத தெய்வத்தைப் பற்றியல்லவா பேசுகிறோம்? அதனால் எங்கே தொடங்கினால் என்ன என்று நினைத்தேன்......சரி, சரி, முதலிலிருந்தே ஆரம்பித்து விடுகிறேன்.

முதலிலிருந்து தொடங்குவது என்றால் சென்ற ஆண்டில் கோயமுத்தூரில் நடந்த தமிழ் விழாவிலிருந்து தொடங்க வேண்டும். அந்த விழாவின் போதுதான் "அடுத்த விழாவை எங்கள் ஈழநாட்டில் நடத்துங்கள்" என்று திரு கே. கனகரத்தினம் அழைத்தார். அவ்விதம் அழைத்தபோது திரு கனகரத்தினத்தின் மனதில் என்ன இருந்ததோ, தெரியாது. "நாம் சும்மா அழைத்து வைப்போம். இவர்கள் எங்கே ஒப்புக் கொள்ளப் போகிறார்கள்?" என்று எண்ணியிருக்கலாம். அல்லது "நமது தூய யாழ்ப்பாணத் தமிழ் இந்தக் கொச்சைத் தமிழ் பேசுவோருக்கு எங்கே விளங்கப் போகிறது?" என்று நினைத்திருக்கலாம். அல்லது "இவர்கள் நமது அழைப்பை ஒப்புக் கொள்வதற்கு ஒரு கடலும் இரண்டு கவர்ன்மெண்டுகளும் குறுக்கே நிற்கின்றன அல்லவா?" என்பதை எண்ணியும் தைரியம் அடைந்திருக்கலாம். எப்படியோ, தமிழ் விழா மேடைமீது வந்து அவர் நின்று அடுத்த தமிழ் விழாவை இலங்கையில் நடத்தும்படி அழைத்துப் போட்டார்!

"கஞ்சி வாதப்பா!" என்றதும், "எங்கே வாது, அப்பா?" என்று கையில் கப்பரையுடன் எழுந்தானே, அந்தக் கதையாக, தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரும் அவருடைய அழைப்பை ஒப்புக் கொண்டு விட்டார்கள். ஒப்புக்கொண்டு, திருவிழா நடத்துவதற்குரிய பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்து வருவதற்காக, தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் காரியதரிசிகளையும் அது அனுப்பி வைத்தார்கள்.

காரியதரிசிகள் எட்டு மாதத்துக்கு முன்னால் இதற்காக யாழ்ப்பாணம் சென்றிருந்த போது, அங்கிருந்த சூழ்நிலை அவ்வளவு உற்சாக மளிப்பதாக இல்லை. யாழ்ப்பாணத்தில் பூர்வாங்கக் கூட்டம் ஒன்று நடந்தது. திரு கே. கனகரத்தினம் கையொப்பமிட்டு அழைப்பு அனுப்பிக் கூட்டத்தைக் கூட்டினார். அது சம்பந்தமாகவே சில புகார்கள் எழுந்து விட்டன. "இன்னின்னாருக்கு அழைப்புப் போகவில்லை. இது எப்படிப் பிரதிநிதித்துவம் வாய்ந்த கூட்டமாகும்? இன்னும் பலருக்கும் அழைப்பு அனுப்பிப் பெரிய கூட்டமாகக் கூட்டி முடிவு செய்ய வேண்டும்" என்று சிலர் சொன்னார்கள். இன்னும் சில நண்பர்கள் திருவாரூரில் நடந்த தமிழ்த் திருவிழாவுக்கு வந்திருந்தவர்கள். திருவாரூர் விழா அவர்களை மலைக்கச் செய்திருந்தது. "அந்த மாதிரியெல்லாம் நம்மால் எப்படி நடத்த முடியும்? அதற்கு வேண்டிய சாதனங்கள் எங்கே? பணம் எங்கே? குறைந்த பட்சம் முப்பதினாயிரம் ரூபாய் வேண்டியிருக்குமே? எங்கே போகிறது?" என்று சொல்லி வந்திருந்தவர்களைப் பயப்படுத்தினார்கள்.

இவற்றுக்கெல்லாம் ஸ்ரீ ஞானும் காணும் பதில் சொல்லித் தைரியமும் சொல்ல வேண்டியதா யிருந்தது.

"பணம் பிரதானம் அன்று; அன்பும் ஆர்வமுந்தான் முக்கியம். அவை இந்நாட்டில் வேண்டிய அளவு இருக்கின்றன. திருவாரூரில் நடந்தது போல் அவ்வளவு பிரமாதமாக நீங்கள் நடத்த வேண்டியதில்லை.

திருவாரூரில் மிகப்பெரிய தேர் இருக்கிறது. அதனால் வேறு ஊர்களில் தேர் விடாமல் இருக்க முடியுமா? உங்கள் ஊருக்குத் தகுந்தாற்போல், நீங்கள் விழா நடத்துங்கள்!" என்று கூறினேன்.

மகாநாட்டை அழைத்த திரு கனகரத்தினத்தின் முகமோ சோர்ந்து வாட்டமுற்றிருந்தது. ஆனால் அவர் தைரியத்தைக் கைவிட்டு விடவில்லை. "மலையைத் தூக்குவதற்குத் தயார்!" என்றுதான் இன்னமும் கூறினார். ஆனால் ஒரு நிபந்தனை விதித்தார். "மலையின் ஒரு பக்கத்தைத் திரு எஸ். நடேசன் பிடிக்கட்டும்; நான் இன்னொரு பக்கத்தைப் பிடித்துத் தூக்கி விடுகிறேன்!" என்றார். "பின்னால் எல்லாரையும் கூட்டிப் பெரிய வரவேற்புச் சபை அமைப்போம். இன்றைக்கு நல்ல நாளில் துவங்கி விடுவோம்!" என்றார். கடைசியில் அங்கே வந்திருந்தவர்கள் அனைவரையும் அங்கத்தினராகக் கொண்ட ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. திரு நடேசன் அதன் தலைவராகவும் திரு கனகரத்தினம் உபதலைவராகவும் நியமிக்கப்பட்டார்கள். வந்திருந்தவர்களை அதைரியப்படுத்திப் பேசிய ஸ்ரீ அம்பிகைபாகனும், அதுவரை ஒரு வார்த்தையுமே பேசாத திரு க. நவரத்தினமும் காரியதரிசிகளாக நியமனம் பெற்றார்கள்.

இந்தக் கூட்டத்தின் முடிவில் நடந்த ஒரு சிறிய நிகழ்ச்சி எங்களுக்கு ஓரளவு தைரியம் அளித்து, நம்பிக்கையும் ஊட்டுவதா யிருந்தது. கூட்டம் தொடங்கியதிலிருந்து மௌன விரதம் கொண்டிருந்த திரு க. நவரத்தினம்; கூட்டம் கலையத் தொடங்கியதும் சட்டென்று எழுந்து நின்றார். "இங்குள்ளவர் ஒவ்வொருவரும் தலைக்குப் பத்து ரூபாய் கொடுத்து விட்டுப் போக வேண்டும். வேலை தொடங்குவதற்குப் பணம் வேண்டும் அல்லவா?" என்றார். அவ்விதமே பலர் பணம் கொடுத்தார்கள். சிலர் கையொப்ப மிட்டார்கள்.

"காரியதரிசி சரியானபடி அமைந்து விட்டார்; ஆகையால் விழாவும் நன்றாக நடைபெறலாம்" என்ற நம்பிக்கை அப்போதுதான் எனக்கு ஏற்பட்டது.

மே மாதம் முதல் தேதி மாலை பரமேசுவரக் கல்லூரி மைதானம் ஒரே ஜன சமுத்திரமாகக் காட்சி அளித்தபோது, நாலாவது தமிழ்த் திருவிழா கோலாகல ஆரவாரங்களுடன் முடியும் தறுவாயிலிருந்தபோது, மேலே கூறிய பூர்வாங்கக் கூட்டத்தின் ஞாபகம் எனக்கு வந்தது. மேடையில் வீற்றிருந்தவர்களின் திருமுகங்களைப் பார்த்தேன். யாழ்ப்பாணத்தார் ஒவ்வொருவருடைய முகத்திலும் பெருமிதமும் எக்களிப்பும் தாண்டவமாடின. திரு எஸ். நடேசன் அவர்கள் அப்போதுதான் தலையிலிருந்து மலையை இறக்கி வைத்தவர் போலக் காணப்பட்டார். ஐந்தாறு நாளாகக் கவலை தேங்கியிருந்த முகத்தில் இப்போது களை ததும்பிற்று. திரு கனகரத்தினத்தின் உள்ளத்திலிருந்து குதூகலம் பொங்கி வழிந்ததென்பது நன்கு தெரிந்தது. அதுவரையில் அம்மேடையில் பின்னாலேயே இருந்தவர் இப்போது முன் வந்திருந்தார். புகைப்படக்காரர்களுக்குப் பயந்து ஒதுங்கிக் கொண்டிருந்தவர் இன்றைக்குப் படம் பிடிப்பதற்கும் முன்னால் வந்து நின்றார். தமிழ்விழாவை இலங்கைக்கு அழைத்த போது திரு கே. கனகரத்தினம் பார்லிமெண்டரி காரியதரிசியா யிருந்தார். தமிழ் விழாவின்போது தாற்காலிகக் கல்வி மந்திரி பதவி வகித்தார். இனி, அரசியல் துறையில் அவர் வேறு எந்த எந்தப் பெரிய பதவிக்கு வந்தாலும், இந்தத் தமிழ்விழாவை வெற்றிகரமாக நடத்திக் கொடுத்ததில் ஏற்பட்ட ஆனந்தம் வேறு எதிலும் அவருக்கு உண்டாக்கக் கூடும் என்று எனக்குத் தோன்றவில்லை.

டாக்டர் குருசாமி, திரு காராளசிங்கம், முதலியார் சின்னத்தம்பி, அருணம்பலம், இராஜ அரியரத்தினம் ஆகியவர்கள் ஆனந்த



காரியதரிசி நவரத்தினம்

பூரிதமான முகங்களுடனே காணப்பட்டார்கள். திரு அம்பிகைபாகன் இந்த உலகத்தில் இருப்பவராகவே தோன்றவில்லை. களைப்பினாலும் களிப்பினாலும் அவருடைய கண்கள் பஞ்சடைந்து போயிருந்தன.

விழா முடிவதற்குக் கொஞ்ச நேரந்தான் பாக்கியிருந்த சமயத்தில், மேடைக்குப் பின்னால் தென்னங்கீற்றுத் தட்டிக்கு அருகில் ஒருவர் சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். ஸ்ரீ அம்பிகை பாகனுக்கு அந்தத் திக்கைச் சுட்டிக் காட்டினேன். அவர் பார்த்துவிட்டுச் சும்மா இருந்தார்.

"என்ன ஐயா, சும்மா இருக்கிறீர்களே?" என்றேன்.

"அதனால் என்ன?" என்றார் அம்பிகை பாகன்.

"அதோ ஒருவர் சுருட்டுக் குடிக்கிறாரே!"

"அதனால் என்ன?"

"கீற்றுக்குப் பக்கத்தில் நிற்கிறாரே?"

"அதனால் என்ன?"

"கீற்றில் தீப்பிடித்துக் கொண்டால்?"

"அதனால் என்ன?"

"பந்தலுக்கு ஆபத்து வருமே?"

"அதனால் என்ன?"

விழா முடியும் சமயம் நெருங்கிவிட்டபடியால் இனி எது எப்படிப் போனால் என்ன என்ற நிலையில் ஸ்ரீ அம்பிகைபாகன் இருந்தார். அவரிடம் சொல்லிப் பயனில்லையென்று நான் முடிவு செய்த சமயத்தில் இன்னொருவர் எழுந்து சுருட்டுப் பிடித்தவரை நோக்கிப் போவதைக் கண்டேன். "நல்லவேளை! இவர் போய் அவர் சுருட்டுப் பிடிப்பதை நிறுத்தி விடுவார்!" என்று எண்ணித் தைரியம் அடைந்தேன். அடுத்த நிமிஷத்தில், ஒருவர் சுருட்டுப் பிடித்துக் கொண்டு நின்ற இடத்தில் இரண்டு பேர் சுருட்டுப் பிடித்துக் கொண்டு நின்றார்கள்! "நிலைமை நம்மை மீறிப் போய்விட்டது! கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!" என்று எண்ணிக் கொண்டேன். கடவுள் காப்பாற்றினார். தமிழ்த் தெய்வம் தண்ணருள் புரிந்தது. எல்லாம் சுபமாகவே முடிந்தது.

காரியதரிசி ஸ்ரீ கனகரத்தினம் அவர்களை மூன்று நாளாகத் தேடிக்கொண்டிருந்தும் அவர் என் கண்ணில் படவில்லை. அவரைப் பார்த்துக் கையைப் பிடித்துக் குலுக்கி ஒரு "சபாஷ்!" சொல்லுவதற்குத்தான் தேடினேன். ஆள் அகப்படவே இல்லை. ஒருவரிடமும் ஒரு வார்த்தையும் பேசாமல் பம்பரம் போலச் சுற்றிச் சகல காரியங்களையும் நிர்வகித்தவர் அவர்தான் என்று அனைவரும் சொன்னார்கள். விழா நடந்து முடிந்த மறுநாள்தான் அவரைப் பார்க்க முடிந்தது. பார்த்ததும் கையைப் பிடித்துக் கொண்டு "அபாரமாய் விழாவை நடத்தி விட்டீர்கள்!" என்று சொல்லியபடி அவர் முகத்தைப் பார்த்தேன். முகத்தைக் காணவில்லை; ஆளையும் காணவில்லை. சற்றுத் தூரத்தில் அவர் முதுகுதான் தெரிந்தது. "என்னத்திற்காக இப்படி முதுகு காட்டி ஓடுகிறார்?" என்று பக்கத்திலிருந்த நண்பர்களைக் கேட்ட போது, "விழாப் பந்தலைக் கிட்ட இருந்து பிரிப்பதற்காகப் போகிறார்!" என்றார்கள். இப்படி ஒரு கனகரத்தினம் இருக்கிற தைரியத்தினால் அல்லவா அன்று ஸ்ரீ கனகரத்தினம் தமிழ் விழாவை இலங்கைக்கு அழைத்தார் என்று எண்ணிக் கொண்டேன்......

நேயர்கள் மன்னிக்கவேண்டும். இந்தத் தடவை நிச்சயமாக ஆரம்பத்திலிருந்தே தொடங்கி விடுகிறேன்.

தமிழ்த் திருவிழாவை இலங்கையில் நடத்துவது என்று அவ்விடத்து நண்பர்கள் நிச்சயமான முடிவுக்கு வந்த பிறகு. "இங்கு எல்லாம் ஒழுங்கு செய்து விடுகிறோம். விழாவுக்குத் தலைமை வகிப்பதற்கு மட்டும் தக்கவர் ஒருவரை ஒழுங்கு செய்து அனுப்புங்கள்!" என்று எழுதிக் கொண்டிருந்தார்கள். விழாவுக்குத் தலைமை வகிக்கத் தக்கவர் ஒருவரைத் தேடத் தொடங்கினோம். தேடிக் கண்டு பிடித்தோம். "சுதேசமித்திரன்" பத்திராசிரியர் திரு சி. ஆர். சீனிவாசன் தான் அவர். பன்னெடுங்காலத் தமிழ் வளர்ச்சிக்குத் துணை புரிந்து வந்திருப்பது "சுதேசமித்திரன்" பத்திரிகை. பாரதியார் உதவி ஆசிரியராயிருந்து பணி செய்யும் பாக்கியம் பெற்ற பத்திரிகை. அதன் ஆசிரியரைக் காட்டிலும் அதிக தகுதியுடையவர் ஒருவரை எப்படிக் கண்டு பிடிக்க முடியும்? அத்துடன், யாழ்ப்பாணத்தில் நடக்கும் தமிழ்த் திருவிழாவுக்கு ஸ்ரீ சி. ஆர். சீனிவாசன் தலைமை வகிப்பதில் இன்னொரு இனிய பொருத்தமும் உண்டு. யாழ்ப்பாணம் புகையிலைக்குப் பெயர் போனது. யாழ்ப்பாணத் தமிழர்கள் சுருட்டுப் புகையை வெளியில் விட்டுக் கொண்டே தமிழின் சாரத்தை அருந்தி மகிழ்கிறவர்கள். திரு சி. ஆர். சீனிவாசன் அவர்களோ புகையிலையை வாயிலேயே அடக்கி வைத்துக் கொண்டிருப்பவர். புகையிலைச் சாற்றையும் தமிழின் இன்பத்தையும் சேர்த்தே எப்போதும் சுவைத்து ஆனந்திப்பவர்!..

எனவே, திருவிழாத் தலைவராகத் திரு சி. ஆர். சீனிவாசனை ஒழுங்கு செய்வதற்கு யாழ்ப்பாணத் தமிழர்கள் உற்சாகத்துடன் இசைந்ததில் வியப்பில்லைதானே?

அது போலவே, சொல்லின் செல்வராகிய பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள்

இலக்கிய மகாநாட்டின் தலைவராகவும், உலகப் புகழ்பெற்ற டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் விஞ்ஞான மகாநாட்டின் தலைவராகவும் ஒழுங்கு செய்யப் பட்டார்கள். மற்றும் தகுதி வாய்ந்த சொற்பொழிவாளர்கள் பலரும் அழைக்கப் பட்டார்கள்.

இந்தச் செய்திகள் எல்லாம் வெளியாக வெளியாக, தமிழகத்திலுள்ள தமிழ் அன்பர்கள் பலருக்கும் யாழ்ப்பாணத் தமிழ் விழாவுக்குச் சென்று பங்கு பற்ற வேண்டும் என்ற ஆசை உண்டாகி விட்டது.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் காரியதரிசிகளுக்குக் கடிதங்களும் தந்திகளும் வந்து குவிய ஆரம்பித்தன.

"இந்த ஊரிலிருந்து நாங்கள் சுமார் பதினைந்து பேர் யாழ்ப்பாணத்தில் நடக்கும் தமிழ் விழாவுக்கு வர விரும்புகிறோம். அதற்கு வேண்டிய பாஸ்போர்ட், விஸா முதலியவை ஏற்பாடு செய்து அனுப்பவும்."

"நானும் என் நண்பர்கள் எழெட்டுப் பேரும் யாழ்ப்பாணம் வருவதென்று முடிவு செய்து விட்டோம். அதற்குப் பாஸ்போர்ட், விஸா வகையறாக்களை எடுத்து வரவும். வழியில் உங்களுடனே சேர்ந்து கொள்ளுகிறோம்."

இப்படியெல்லாம் பல நண்பர்கள் எழுதினார்கள். விழாவுக்கு இரண்டு நாளைக்கு முன்பு சிலர் பிரயாண வசதிக்கு முயற்சி செய்யத் தொடங்கினார்கள்.

பாஸ்போர்ட், விஸா எடுப்பது அவ்வளவு எளிய காரியமில்லை என்பதை இச்சமயத்தில் நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒருவருக்காக இன்னொருவர் செய்யக்கூடிய காரியமும் அன்று. பிரயாணத் தேதிக்குக் குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்பு பிரயத்தனம் தொடங்க வேண்டும். பாஸ்போர்ட் என்பது இந்த நாட்டிலிருந்து வெளியே போவதற்கு இந்த நாட்டுச் சர்க்கார் கொடுக்கும் அநுமதி. விஸா என்பது எந்த நாட்டுக்குப் போகிறோமோ அந்த நாட்டு அரசாங்கத்தாரின் சம்மதத்தின் பேரில் பெறப்படும் அநுமதி. பிரயாணத்துக்குக் காரணத்தைச் சொல்லி விண்ணப்பம் போட்டுப் பெற வேண்டும். புகைப்படம் எடுத்துப் பாஸ்போர்ட்டில் ஒட்ட வேண்டும். அம்மை ஊசி, காலரா ஊசி போட்டுக் கொண்டதற்கு அத்தாட்சிப் பத்திரங்கள் வேண்டும்.

இவ்வளவு சங்கடங்களுக்கும் உள்ளாகித் தமிழ்நாட்டிலிருந்து எவ்வளவு பேர் யாழ்ப்பாணத் திருவிழாவுக்கு வந்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்? ஏறக்குறைய ஐந்நூறு பேர் வந்திருந்தார்கள்! குடும்பத்தோடு பிரயாணமாகி வந்தவர்களுக்கு மட்டும் லேடி ராமநாதன் பெண்கள் கலாசாலையில் ஜாகை தரப்பட்டிருந்தது. அப்படிக் குடும்பத்தோடு வந்தவர்களே நூற்றைம்பது பேர் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்! சென்னையிலிருந்தும் கோயமுத்தூர் தஞ்சாவூர் ஜில்லாக்களிலிருந்தும் வந்தவர்கள் அதிகம். அப்படிப் பல தொல்லைகளுக்கு உள்ளாகி வந்தவர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்பதில் ஐயமில்லை.

★

யாழ்ப்பாணத் தமிழன்பர்களின் விருப்பத்தின்படி விழாவிற்கு இரண்டு நாள் முன்னதாகவே ஸ்ரீ பெரியசாமித் தூரனும் நானும் அங்கே போய்ச் சேர்ந்தோம். 27உ மாலை பரமேசுவரக் கல்லூரி மைதானத்தில், திருவிழாப் பந்தலுக்கு எதிரில், தமிழ்க் கொடி ஏற்று விழா நடந்தது. தமிழ்க் கொடி மரத்தைச் சுற்றிலும் விழாவில் பணி செய்வதற்கு முன் வந்த இருநூறு தொண்டர்கள் வட்ட வடிவமாக நின்றார்கள். தொண்டர்கள் என்றால் மற்ற இடங்களில் பெரும்பாலும் இளம் பிள்ளைகளாக இருப்பது வழக்கம். இளம் பிள்ளைகள் ஆரம்பத்தில் உற்சாகமாக வேலை செய்வார்கள். போகப் போக அவர்களுடைய உற்சாகம் குறைந்து விடும். சிலர் நடுவில் துப்பாக்கியைப் போட்டு விட்டுப் போய் விடுவார்கள்! இங்கே, தமிழ் விழாவில் தொண்டு செய்ய வந்தவர்களோ பெரும்பாலும் முதிர்ந்த பிராயத்தவர்கள். படித்தவர்கள் என்றும் அறிவாளிகள் என்றும் பார்த்தவுடனே தெரிந்தது. மேலும் விசாரித்த போது அவர்களில் பலர் கலாசாலை ஆசிரியர்கள் என்று அறிந்துகொண்டோம். இத்தகைய அறிவாளிகள் இருநூறு பேர் தமிழ் விழாவில் தொண்டு செய்ய முன்வந்து கொடி மரத்தைச் சுற்றி வட்ட வடிவமாக நின்ற காட்சி ஓர் அற்புதக் காட்சியாயிருந்தது.

மூவேந்தர்களின் சின்னங்களான புலி, மீன், வில் இவற்றுடன் யாழின் சித்திரமும் பொறித்த தமிழ்க் கொடியை வரவேற்பு சபைத் தலைவர் திரு எஸ். நடேசன் உயர்த்தினார். உயர்த்திப் பறக்கவிட்ட பிறகு தமிழின் தொன்மைச் சிறப்பையும் வருங்கால வளர்ச்சியையும் பற்றிச் சில வார்த்தைகளை அழகுறச் சொன்னார். திருகோணமலையைச் சேர்ந்த திரு ராஜகோபால் என்னும் வீரத் தமிழர் தமிழ்த் தெய்வத்தின் புகழைக் கீர்த்தன ரூபத்தில் பாடினார்.

சங்கீதக் கச்சேரிகளில் "களை கட்டியது" என்கிறோமே, அதுபோல, தமிழ்க் கொடியைப் பறக்கவிட்ட உடன், தமிழ்த் திருவிழாவும் களை கட்டிவிட்டது. (தொடரும்)



அத்தியாயம் 2

சேற்றுப் பள்ளம்

காட்டிலும் மேட்டிலும் கல்லிலும் முள்ளிலும் அந்தப் பெண்ணைத் தொடர்ந்து வந்தியத் தேவன் ஓடினான். ஒரு சமயம் அவன் கண்ணுக்குத் தெரிந்தாள். மறு கணத்தில் மறைந்தாள். இனி அவளைப் பிடிக்க முடியாது என்று தோன்றியபோது மறுபடியும் கண்ணுக்குப் புலப்பட்டாள். மாய மாரீசனைத் தொடர்ந்து இராமர் சென்ற கதை வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தது. ஆனால் இவள் மாயமும் அல்ல; மாரீசனும் அல்ல. இவளுடைய கால்களிலே மானின் வேகம் இருக்கிறது என்பது மட்டும் நிச்சயம். அம்மம்மா! என்ன விரைவாக ஓடுகிறாள்? 'எதற்காக இவளைத் தொடர்ந்து ஓடுகிறோம்? இது என்ன பைத்தியக்காரத்தனம்?' என்று எண்ணினான். உடனே அதற்கு ஒரு காரணமும் கற்பித்துக் கொண்டான். கோடிக்கரை நெருங்க நெருங்க, சேந்தன் அமுதன் வர்ணித்த மங்கையின் நினைவு அவனுக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தது. இவள் அந்தப் பூங்குழலியாகத்தான் இருக்க வேண்டும். இவளுடன் சிநேகம் செய்து கொண்டால்



வந்த காரியம் நிறைவேறுவதற்கு அநுகூலமாயிருக்கும். அத்துடன், கலங்கரை விளக்கத்துக்குப் போக வழி கேட்டும் தெரிந்து கொள்ளலாம். தொலைதூரத்தில் வரும்போதே அவர்களுக்குக் கலங்கரை விளக்கின் உச்சி தெரிந்தது. ஆனால் அதை நெருங்குவது எளிதாயில்லை. காட்டுக்குள் புகுந்ததும் கலங்கரை விளக்குத் தெரியவேயில்லை. காட்டுக்குள்ளே சுற்றிச் சுற்றி வருவதாக ஏற்பட்டதே தவிர வழி அகப்படவில்லை. இந்தச் சமயத்திலேதான் குழகர் கோவிலின் மதிள் சுவரின் மேல் பூங்குழலியை வந்தியத்தேவன் கண்டான். அவளைப் பிடித்து வழி கேட்கலாம் என்று பார்த்தால், அவள் இப்படி மாய மானைப் போல் பிடிபடாமல் ஓடுகிறாளே? இவளை இப்படியே விட்டு விட்டுத் திரும்ப வேண்டியதுதான்! ஆனால் ஓட்டப் பந்தயத்திலே கூட ஒரு பெண்ணுக்குத் தோற்பது என்றால், அதுவும் மனதுக்கு உகந்ததாயில்லை......

ஆ! அதோ திறந்த வெளி வந்து விட்டது. சற்றுத் தூரத்தில் நீலக் கடல் தெரிகிறது. விரிந்து பரந்து அமைதி குடிகொண்ட அந்தக் கடலின் தோற்றம் என்ன அழகாயிருக்கிறது! அதோ கலங்கரை விளக்கமும் தெரிகிறது. அதன் உச்சியில் இப்போது ஜோதி கொழுந்து விட்டு எரிகிறது. அதன் செந்நிறக் கதிர்கள் நாலா பக்கமும் பரவி விழுந்து விசித்திர ஜால வித்தைகள் புரிகின்றன.

இந்த இடத்தில் இந்தப் பெண்ணைப் பின் தொடர்வதை விட்டு விட்டுக்

கலங்கரை விளக்கை நோக்கிப் போகலாமா? கூடாது! கூடாது! இந்தத் திறந்த வெளியில் இவளை ஓடிப் பிடிப்பது சுலபம். இங்கே அவ்வளவு மணலாகக் கூட இல்லை. கால் மணலில் புதையவில்லை. பூமியில் புல் முளைத்துக் கெட்டிப் பட்டிருக்கிறது. சில இடங்களில் சேறு காய்ந்து பொறுக்குப் படர்ந்திருக்கிறது. இங்கேயெல்லாம் தடங்கலின்றி ஓடலாம். அந்தப் பெண்ணை இலகுவாய்ப் பிடித்து விடலாம்! மேலும் அவள் கடலை நோக்கியல்லவா ஓடுகிறாள்? எவ்வளவு ஓடினாலும் முடிவில் கடலோரத்தில் சென்று அவள் நின்றுதானே ஆகவேண்டும்! ஒருவேளை இந்த விந்தையான பெண் கடலிலேயே முழுகி மறைந்து விடுவாளோ! அடடா! குதிரையிலேயே ஏறி வராமற் போனோமே? அப்படி வந்திருந்தால் இந்தத் திறந்த வெளியில் ஒரு நொடியில் இவளைப் பிடித்து விடலாமே?

அதோ அவள் சற்றுத் தயங்கி நிற்கிறாள். நேரே கடலை நோக்கி ஓடாமல் வலது பக்கமாகத் திரும்பி ஓடுகிறாள்! தன்னிடம் பிடிபடாமல் இருப்பதற்காக வலது புறத்தில் சற்றுத் தூரத்தில் தென்பட்ட காட்டை நோக்கி ஓடுகிறாள். காட்டுக்குள் அவள் புகுந்து விட்டால் நிச்சயமாகப் பிடிக்க முடியாதுதான்! இத்தனை நேரம் ஓடியதும் வீண்! வந்தியத்தேவனுடைய கால்களும் அச்சமயம் கெஞ்ச ஆரம்பித்தன. அவனுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஆரம்பித்து விட்டது......

மீண்டும் அவளுடைய மனதை மாற்றிக் கொண்டு விட்டாள் போலும்! காட்டுக்குள் போகும் எண்ணத்தை விட்டுவிட்டாள் போலும்! பம்பரத்தைப் போல் ஒரு சுற்றுச் சுற்றித் திரும்பி ஓடி வருகிறாள். கலங்கரை விளக்கின் அடிக்குப் போக நினைத்தாள் போலும். ஒரு நாலு பாய்ச்சல் பாய்ந்தால் அவளைப் பிடித்து விடலாம். கைப்பிடியாக அவளைப் பிடித்து, "பெண்ணே! ஏன் இப்படி என்னைக் கண்டு மிரண்டு ஓடுகிறாய்? உனக்கு உன் காதலனிடமிருந்து செய்தி கொண்டு வந்திருக்கிறேன்!" என்று சொன்னால், எத்தனை அதிசயம் அடைவாள்! சேந்தன் அமுதன் அவனிடம்





ஒன்றுஞ் சொல்லி அனுப்பவில்லை என்பது உண்மைதான். அதனால் என்ன? ஏதாவது சொந்தமாகக் கற்பனை செய்து சொன்னால் போகிறது!......

வந்தியத்தேவன் மனதிற்குள் நிர்மானித்தபடி தன் தேகத்தில் மிச்சமிருந்த வலிமையையெல்லாம் உபயோகித்துப் பாய்ந்து ஓடினான். திரும்பி ஓடி வந்து கொண்டிருந்த அவனை நாலே பாய்ச்சலில் பிடித்து விடலாம் என்பதுதான் அவனுடைய உத்தேசம். திடீரென்று "ஐயோ!" என்றான். தனக்கு என்ன நேர்ந்து விட்டது என்பது முதலில் அவனுக்கே தெரியவில்லை. பிறகு புலப்படத் தொடங்கியது. அவனுடைய கால்கள் இரண்டும் சேற்றில் புதைந்து கொண்டிருந்தன. முதலில் பாதங்கள் மட்டும் புதைந்தன. பிறகு கணுக்கால் புதைந்தது. முழங்கால் வரையில் சேறு மேலேறி விட்டது!

அடாடா! இந்த இடம் நம்மை எப்படி ஏமாற்றி விட்டது? மேலே பார்த்தால் நன்றாய்க் காய்ந்து பொறுக்குத் தட்டியிருக்கிறது. உள்ளே சேறு இன்னும் காயவில்லை. என்றுமே முழுமையும் காய முடியாத புதை சேற்றுக் குழிகளைப்பற்றி வந்தியத்தேவன் கேள்விப்பட்டதுண்டு. ஆடு மாடுகள், குதிரைகள், யானைகள் கூட அப்பள்ளங்களில் அகப்பட்டுக் கொண்டால் சிறிது சிறிதாக உள்ளே அமுங்கிக் கொண்டே போய்க் கடைசியில் முழுதுமே முழுகி மறைந்து விடுமாம்! அத்தகைய புதை குழிதானோ இது? அப்படித்தான் தோன்றுகிறது. முழங்காலும் மறைந்து விட்டதே! மேலும் உள்ளே இறங்கிக் கொண்டேயிருப்போமோ? விரைவில் தொடை வரைக்கும் புதைந்துவிடும் போலிருக்கிறதே! யானைகளையும் குதிரைகளையும் விழுங்கி ஏப்பம் விடும் புதை சேறு நம்மைச் சும்மா விட்டுவிடுமா! ஐயோ! இதுவா நமது முடிவு? நாம் கண்ட எத்தனை எத்தனையோ பகற் கனவுகள் எல்லாம் இதிலேயே புதைந்துவிட வேண்டியதுதானோ? இந்த அபாய வேளையில் அந்த விசித்திரமான பெண் வந்து கைகொடுத்துக் காப்பாற்றினால்தான் உண்டு. தப்புவதற்கு வேறு வழியில்லை. ஒரு பெருங் கூச்சல் போட்டுப் பார்க்கலாம். — இவ்விதம் எண்ணிய

வந்தியத்தேவன், "ஐயோ! நான் செத்தேன்! சேற்றில் முழுகிச் சாகிறேன். எனக்குக் கைகொடுத்து உதவிசெய்து காப்பாற்றுவார் யாரும் இல்லையா!" என்று கத்தினான்.

அந்தக் கூக்குரல் பூங்குழலியின் காதில் விழுந்தது. அவனுக்கு நேர் எதிரே சற்றுத் தூரத்தில் ஓடிக் கொண்டிருந்த பூங்குழலி நின்றாள். ஒருகணம் தயங்கினாள். வந்தியத் தேவனுடைய அபாயமான நிலையைப் பார்த்துத் தெரிந்து கொண்டாள்.

மறுகணம் அங்கே பாதி மணலிலும் பாதி சேற்றுக் குழியிலும் கிடந்த படகு ஒன்று அவள் கவனத்தைக் கவர்ந்தது. அக் குழியில் தண்ணீர் நிறைந்து ஆழமான நீரோடையாக இருந்த காலத்தில் அப்படகு உபயோகப்பட்டிருக்க வேண்டும். அதில் இப்போது லாகவமாகக் குதித்து ஏறினாள். துடுப்பை எடுத்து இரண்டு தடவை வலித்தாள். அடாடா! இது என்ன அதிசயம்? அந்தப் படகு நீரில் அன்னப்பறவை செல்வதுபோல் அல்லவா சேற்றின் மேலே விரைவாக மிதந்து செல்கிறது? மிதந்து சென்று புதை சேற்றுக் குழியின் அக்கரையையும் அடைந்துவிட்டது. பூங்குழலி கெட்டித் தரையில் குதித்தாள். கரையில் கால்களை நன்றாய் ஊன்றிக் கொண்டு வந்தியத் தேவனுடைய கைகளைப் பற்றிக் கரையில் இழுத்து விட்டாள். அம்மம்மா! அந்த மெல்லியலாளின் கைகளிலேதான் எவ்வளவு வலிமை! தஞ்சைபுரி கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையருடைய இரும்புக்' கைகளைவிட இவளுடைய கரங்கள் அதிக உறுதியாயிருக்கின்றனவே!

கரை ஏறியதும் வந்தியத்தேவன் கல கல வென்று சிரித்தான். அவனுடைய கால்கள் மட்டும் கொஞ்சம் நடுங்கிக் கொண்டிருந்தன.

"என்னைக் காப்பாற்றிக் கரை சேர்த்துவிட்டதாக உனக்கு எண்ணம் போலிருக்கிறது! நீ வந்திராவிட்டால் நான் கரையேறியிருக்கமாட்டேன் என்று நினைத்தாயோ?" என்றான்.

"பின் எதற்காக அப்படி 'ஐயோ! ஐயோ!' என்று கத்தினாய்?" என்று பூங்குழலி கேட்டாள்.

"உன்னை ஓடாமல் தடுத்து நிறுத்துவதற்காகத்தான்!"

"அப்படியானால் மறுபடியும் உன்னைக் குழியிலேயே தள்ளிவிடுகிறேன். உன் சாமர்த்தியத்தினால் நீயே கரை ஏறிக் கொள்!" என்று பூங்குழலி சொல்லித் தள்ள யத்தனித்தாள்.

"ஐயையோ!" என்று வந்தியத் தேவன் விலகி நின்று கொண்டான்.

"எதற்காக அலறுகிறாய்?"

"உயிருக்காகப் பயப்படவில்லை; சேற்றுக்குத்தான் பயப்படுகிறேன்! ஏற்கெனவே தொடை வரைக்கும் சேறாகி விட்டது!"

பூங்குழலியின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. வந்தியத்தேவனை ஏற இறங்கப் பார்த்தாள்.

"அதோ கடல் இருக்கிறது! போய்ச் சேற்றை அலம்பிச் சுத்தம் செய்து கொள்!" என்றாள்.

"நீ கொஞ்சம் முன்னால் சென்று வழி காட்ட வேண்டும்!" என்றான் வந்தியத்தேவன்.

இருவரும் கடற்கரையை நோக்கி நடந்தார்கள். சேற்றுப் பள்ளத்தைச் சுற்றிக் கொண்டு சென்றார்கள்.

"என்னைக் கண்டதும் எதற்காக அப்படி விழுந்தடித்து ஓடினாய்? என்னைப் பயங்கரப் பேய் பிசாசு என்று எண்ணி விட்டாயா?" என்று வல்லவரையன் கேட்டான்.

"இல்லை; பேய் பிசாசு என்று எண்ணவில்லை. ஆந்தை என்று எண்ணினேன். உன் மூஞ்சி ஆந்தை மூஞ்சி மாதிரியேயிருக்கிறது!" என்று கூறி விட்டுச் சிரித்தாள்.

வந்தியத் தேவனுக்குத் தன் தோற்றத்தைக் குறித்துக் கர்வம் அதிகம். ஆகையால் அவனை ஆந்தை மூஞ்சி என்று சொன்னது அவனுக்கு மிக்க கோபத்தை உண்டாக்கிற்று.

"உன்னுடைய குரங்கு முகத்துக்கு என்னுடைய ஆந்தை முகம் குறைந்து போய்விட்டதாக்கும்!" என்று முணுமுணுத்தான்.

"என்ன சொன்னாய்?"

"ஒன்றுமில்லை. என்னைக் கண்டு எதற்காக அப்படி ஓடினாய் என்று கேட்டேன்."

"நீ எதற்காக அப்படி என்னைத் துரத்திக்கொண்டு வந்தாய்?"

"கலங்கரை விளக்கத்துக்கு வழி கேட்பதற்காக உன்னைத் தூக்கிக் கொண்டு வந்தேன்......"

"அதோ தெரிகிறதே விளக்கு! என்னை வழி கேட்பானேன்?"

"காட்டுக்குள் புகுந்த பிறகு தெரியவில்லை. அதனாலேதான்! நீ எதற்காக என்னைக் கண்டதும் அப்படி ஓட்டம் எடுத்தாய்?"

"ஆண் பிள்ளைகள் மிகப் பொல்லாதவர்கள். ஆண் பிள்ளைகளைக் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை!"

"சேந்தன் அமுதனைக் கூடவா?" என்றான் வல்லவரையன் கொஞ்சம் மெல்லிய குரலில்.

"யாரைச் சொன்னாய்?"

"தஞ்சாவூர் சேந்தன் அமுதனைச் சொன்னேன்."

"அவனைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?"

"அவன் உன் அருமைக் காதலன் என்று தெரியும்."

"என்ன? என்ன?"

"உன் பெயர் பூங்குழலிதானே?"

"என் பெயர் பூங்குழலிதான். சேந்தன் அமுதனைப் பற்றி என்ன சொன்னாய்? அவன் என்......"

"அவன் உன் காதலன் என்றேன்."

பூங்குழலி கலீர் என்று நகைத்தாள். "அப்படி யார் உனக்குச் சொன்னது?" என்றாள்.

"வேறு யார் சொல்வார்கள்? சேந்தன் அமுதன்தான் சொன்னான்."

"தஞ்சாவூர் வெகு தூரத்தில் இருக்கிறது. அதனாலேதான் அப்படிச் சொல்லித் தப்பித்துக் கொண்டான்!"

"இல்லாவிட்டால்......?"

"இங்கே என் முன்னால் சொல்லியிருந்தால் அந்தச் சேற்றுக் குழியில் தூக்கிப் போட்டிருப்பேன்."

"அதனால் என்ன? சேற்றை அலம்பிக்கொள்ளக் கடலில் ஏராளமாய்த் தண்ணீர் இருக்கிறதே?"

"நீ விழுந்த புதை சேற்றுக் குழியில் மாடு, குதிரை எல்லாம் முழுகிச் செத்திருக்கின்றன. யானையைக் கூட அது விழுங்கி விடும்!"

வந்தியத் தேவனுடைய உடம்பு சிலிர்த்தது. அவனை அந்தப் படுகுழி கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே இழுத்துக்கொண்டிருந்தபோது ஏற்பட்ட உணர்ச்சியை நினைத்துக் கொண்டான். இவள் மட்டும் வந்து கரையேற்றி விடாவிட்டால், இத்தனை நேரம்......... அதை நினைத்தபோது அவன் உடம்பெல்லாம் நடுங்கிற்று.

"சேந்தன் அமுதன் என்னைப் பற்றி இன்னும் என்ன சொன்னான்?" என்று பூங்குழலி கேட்டாள்.

"நீ அவனுடைய மாமன் மகள் என்று சொன்னான். உன்னைப்போன்ற அழகி தேவலோகத்திலேகூடக் கிடையாது என்று சொன்னான்......"

"தேவலோகத்துக்கு அவன் நேரிலே போய்ப் பார்த்திருப்பான் போலிருக்கிறது. இன்னும்?......"

"நீ நன்றாகப் பாடுவாய் என்று சொன்னான். நீ பாடினால் கடலுங்கூட இரைச்சல் போடுவதை நிறுத்திவிட்டுப் பாட்டைக் கேட்குமாம்! அது உண்மைதானா?"

"நீயே அதைத் தெரிந்து கொள்! இதோ கடலும் வந்து விட்டது!..."

இருவரும் கடற்கரை ஓரமாக வந்து நின்றார்கள்.

அத்தியாயம் 3

சித்தப் பிரமை

வானத்தில் விண்மீன்கள் கண்ணைச் சிமிட்டிக் கொண்டிருந்தன. பிறைச் சந்திரன் நீலக் கடலில் மிதக்கும் வெள்ளி ஓடத்தைப் போலப் பவனி வந்து கொண்டிருந்தான்.

காற்றின் வேகம் அதிகமாகியிருந்தது. கடல் குமுறியது. வெள்ளலைக் கைகளை நீட்டிக் கரையில் நின்றவர்களைத் தன்பால் இழுக்க முயன்றது.

"ஏன் நிற்கிறாய்? சீக்கிரம் சேற்றைக் கழுவிக் கொள்! வீட்டுக்கு உடனே போக வேண்டும். இல்லாவிட்டால் இன்று எனக்குச் சோறு கிடைக்காது. அண்ணி சோற்றுப் பானையைக் கவிழ்த்து விடுவாள்!" என்றாள் பூங்குழலி.

"இங்கே கடலின் ஆழம் அதிகமா?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"உன்னைப்போல் பயங்கொள்ளியை நான் பார்த்ததேயில்லை. இங்கே வெகு தூரத்துக்கு ஆழமே கிடையாது. அரைக்காத தூரம் கடலில் போனாலும் இடுப்பளவு தண்ணீர்தான் இருக்கும். ஆகையினாலேதான் ஒவ்வொரு நாள் இரவும் கலங்கரை விளக்கு எரிய வேண்டியிருக்கிறது!"

வந்தியத்தேவன் தயங்கித் தயங்கித் தண்ணீரில் இறங்கினான். சேற்றைக் கழுவிக் கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு கரை ஏறினான்.

சற்றுத் தூரத்தில் வைத்தியருடைய மகன் குதிரை மேலேறி வருவதைக் கண்டான். வந்தியத் தேவனுடைய குதிரையும் பக்கத்தில் வந்தது.

"ஐயையோ! குதிரை சேற்றில் இறங்கிவிடப் போகிறதே!" என்றான் வந்தியத் தேவன்.

"இறங்காது; மனிதர்களை விடக் குதிரைகளுக்கு விவேகம் அதிகம்!" என்றாள் பூங்குழலி.

"ஆனால் ஒரு குதிரையின் பேரில் மனிதன் இருக்கிறானே? அவன் என் குதிரையையும் பிடித்து இழுத்துக் கொண்டு வருகிறானே?"

"அது கொஞ்சம் அபாயந்தான்! ஓடிப்போய் எச்சரிக்கை செய்!"

"நில்லு! நில்லு!" என்று கூச்சலிட்டுக் கொண்டே வந்தியத்தேவன் ஓடிப் போய்த் தடுத்து நிறுத்தினான்.

பூங்குழலியும் சற்று நேரத்துக்கெல்லாம் அவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டாள்.

மூவரும் கலங்கரை விளக்கத்தை நோக்கி நடந்தார்கள்.

"நீ குதிரையில் ஏறிக் கொள்ளலாமே?" என்றான் பூங்குழலி.

"இல்லை; உன்னுடன் நடந்தே வருகிறேன்."

பூங்குழலி குதிரையின் அருகில் சென்று அதன் முகத்தைத் தடவிக் கொடுத்தாள். அதனால் மகிழ்ச்சி அடைந்ததைப் போல் குதிரை உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு சற்று இலேசாகக் கனைத்தது.

"உன்னை என் குதிரைக்குப் பிடித்து விட்டது! இது மிக்க நல்லது."



"என்ன விதத்தில் நல்லது?"

"நான் இலங்கைக்குப் போக வேண்டும். இந்தக் குதிரையை உன்னிடம் ஒப்புவித்து விட்டுப் போகலாம் என்று எண்ணுகிறேன். பார்த்துக் கொள்கிறாயா?"

"ஓ! பார்த்துக் கொள்கிறேன். எல்லா மிருகங்களும் என்னிடம் சீக்கிரம் சிநேகமாகிவிடும். மனிதர்களுக்கு மட்டுந்தான் என்னைக் கண்டால் பிடிக்காது......"

"ஏன் அப்படிச் சொல்கிறாய்? சேந்தன் அமுதன் உன் பேரில்......"

"எனக்கும் மிருகங்களின் பேரில் தான் பிரியம்; மனிதர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது!"

"மனிதர்கள் அப்படி என்ன உனக்குச் செய்து விட்டார்கள்?"

"மனிதர்கள் பொல்லாதவர்கள். பொய்யும் புனைசுருட்டுமே அவர்களுக்கு வேலை!......"

"எல்லாரையும் சேர்த்து அப்படிச் சொல்லி விடக்கூடாது. சேந்தன் அமுதன் நல்லவன். இதோ வருகிறானே, வைத்தியர் மகன், — இவன் ரொம்ப நல்லவன்......"



"நீ எப்படி?"

"நானும் நல்லவன் தான். என் பெருமையை நானே சொல்லிக் கொள்ளக் கூடாது அல்லவா?"

"நீங்கள் இருவரும் எதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள்?"

"சக்கரவர்த்திக்கு உடம்பு குணம் இல்லை அல்லவா? அவருடைய நோயைக் குணப்படுத்தச் சில மூலிகைகள் வேண்டியிருக்கின்றன. இந்தக் காட்டில் அபூர்வ மூலிகைகள் இருக்கின்றனவாமே? அதற்காகத் தான் வைத்தியர் மகனும் நானும் வந்திருக்கிறோம்......"

"சற்றுமுன் இலங்கைக்குப் போக வேண்டும் என்று சொன்னாயே?"

"இங்கே கிடைக்காத மூலிகைகளை இலங்கையிலிருந்து கொண்டுவரவேண்டும். இலங்கையில் அனுமார் கொண்டு வந்த சஞ்சீவி பர்வதம் இன்னமும் இருக்கிறதாமே?"

"ஆமாம்; இருக்கிறது. அதனாலே தான் அங்கே ஆயிரக்கணக்கான ஜனங்கள் விஷக் காய்ச்சலில் இப்போது செத்துப் போய்க் கொண்டிருக்கிறார்கள்......"

"அதுவும் அப்படியா? எனக்குத் தெரியாதே? எங்களை அனுப்பிய அரண்மனை வைத்தியருக்கும் அது தெரியாது......"

"ஆண் பிள்ளைகளைப்போல் பொய் சொல்லுகிறவர்களை நான் கண்டதேயில்லை. இரண்டு நாளைக்கு முன் இரண்டு பேர் இங்கே வந்தார்கள். அவர்களும் இப்படித்தான் ஏதோ பொய் சொன்னார்கள். ஆனால் அவர்கள் சொன்னது கொஞ்சம் நம்பக் கூடிய பொய்யாக இருந்தது......"

"அவர்கள் யார்? என்ன பொய் சொன்னார்கள்?"

"அவர்கள் தங்களை யாரோ மந்திரவாதி அனுப்பியதாகச் சொல்லிக் கொண்டார்கள். சக்கரவர்த்திக்கு ரட்சை கட்டுவதற்காகப் புலி நகமும் யானை வால் ரோமமும் வேண்டும் என்றும் அதற்காக இலங்கை போவதாகவும் சொன்னார்கள். அவர்களை அழைத்துக் கொண்டு என் அண்ணன் படகோட்டிக் கொண்டு இலங்கைக்குப் போயிருக்கிறான்......"

"ஓ! ஓ! அதுவும் அப்படியா?" என்றான் வந்தியத்தேவன். அவனுக்கு ரவிதாஸன் என்னும் பயங்கர மந்திரவாதியின் நினைவு வந்தது. இரவில் படுத்திருந்த பாழும் மண்டபத்தில் அடைந்த பயங்கர அனுபவமும் நினைவுக்கு வந்தது. கடவுளே! இந்தமாதிரி காரியங்களிலெல்லாம் ஏன் சிக்கிக் கொண்டோம்? போர்க்களத்தில் நேருக்கு நேர் பகைவனுடன் நின்று போர்புரிய வேண்டும்! அப்போது நம் வீரத்தையும் தீரத்தையும் காட்ட வேண்டும். இந்தமாதிரி தந்திர மந்திர சூழ்ச்சிகளில் எதற்காக அகப்பட்டுக் கொண்டோம்?

நமக்கு முன்னாலேயே இலங்கைக்குப் படகில் சென்றிருப்பவர்கள் யாராயிருக்கக்கூடும்! இந்தப் பெண்ணை எவ்வளவு தூரம் நம்பலாம்? இவளும் ஒருவேளை அந்தச் சதிகாரக் கூட்டத்தில் சேர்ந்தவளாயிருக்கக்கூடுமோ?... இராது, இராது! இவள் கள்ளங்கபடம் அற்ற பெண். இவளை எப்படியாவது சிநேகம் செய்து வைத்துக் கொள்வது நல்லது.

"பூங்குழலி! உன்னிடம் உண்மையைச் சொல்லி விடுகிறேன். சற்று முன், மூலிகை கொண்டுபோக நான் வந்திருப்பதாகச் சொன்னேனே, அது பொய்தான்! மிக முக்கியமான இரகசியமான காரியத்துக்காக நான் இலங்கைக்குப் போகிறேன். அதை உன்னிடம் சொல்ல விரும்புகிறேன்..."

"வேண்டாம்! முக்கியமான இரகசியமான காரியங்களைப் பெண்களிடம் சொல்லக்கூடாது என்று உனக்குத் தெரியாதா? என்னிடம் ஒன்றும் சொல்ல வேண்டாம்......"

"சாதாரணப் பெண்களைப் பற்றித் தான் அப்படிச் சொல்லுவார்கள். உன்னிடம் இரகசியத்தைக் கூறினால் அப்படி ஒன்றும் நேர்ந்து விடாது."

"நான் சாதாரணப் பெண் இல்லையென்று உனக்கு எப்படித் தெரிந்தது? என்னை நீ பார்த்து ஒரு நாழிகை கூட ஆகவில்லையே?"

"பூங்குழலி! உன்னை அந்தக் கோவில் மதிளின்மீது முதன் முதலில் பார்த்த உடனேயே எனக்குப் பிடித்துப் போய்விட்டது. உன்னை ஒன்று கேட்கிறேன். அதற்கு உண்மையாக மறுமொழி சொல்கிறாயா?"

"கேட்டுப் பார்!"

"சேந்தன் அமுதன் உன்னுடைய காதலன் அல்ல என்பது நிஜமா? அவனை நீ மணந்து கொள்ளப் போவதில்லையா?"

"எதற்காகக் கேட்கிறாய்?"

"சேந்தன் அமுதன் என் சிநேகிதன். அவனுக்கு எதிராக ஒன்றும் நான் செய்யக் கூடாது. ஆனால் அவன் உன் காதலன் இல்லையென்றால்,......"

"சொல்லு! ஏன் தயங்குகிறாய்!"

"அந்த ஸ்தானத்துக்கு நான் விண்ணப்பம் போடலாம் என்று பார்க்கிறேன். பூங்குழலி! காதலைப் பற்றி நீ குறைவாகப் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை. உலகத்தில் காதலைக் காட்டிலும் தெய்வீகமான சக்தி வேறு ஒன்றும் கிடையாது. அப்பர், சுந்தரர், சம்பந்தர் எல்லாரும் கடவுளைக் காதலனாகக் கொண்டு பாடியிருக்கிறார்கள். தொல் காப்பியரும், வள்ளுவரும், மற்றும் தமிழ்ப் பெரும் புலவர்களும் காதலைப்பற்றிப் பாடியிருக்கிறார்கள். காளிதாஸன் காதலைப்பற்றிப் பாடியிருக்கிறான். பிருந்தாவனத்தில் கண்ணன் கோபியரின் காதலுக்கு வசப்பட்டான்......"

"ஐயா! நான் ஒன்று சொல்கிறேன். அதை நன்றாய்க் கேட்டு மனதில் வாங்கிக் கொள்ளும்!"

"அது என்ன?"

"எனக்கும் உம்மைக் கண்டால் பிடித்துத்தான் இருக்கிறது. இரண்டு நாளைக்கு முன் வந்தவர்களைப் பார்த்ததும் உண்டான வெறுப்பு உம்மிடம் உண்டாகவில்லை......"

"ஓ! ஓ! நான் யோகசாலிதான்!"

"ஆனால் காதல், கீதல் என்ற பேச்சை மட்டும் எடுக்க வேண்டாம்!"

"ஏன்? ஏன்?"

"சேந்தன் அமுதன் என் காதலன் இல்லை. ஆனால் எனக்கு வேறு காதலர்கள் இருக்கிறார்கள்!......"

"அடடா! அடடா! வேறு காதலர்களா! யார்? எத்தனை பேர்?"

"இரவு நடுநிசியில் நான் வீட்டிலிருந்து எழுந்து செல்வேன். என்னைப் பின் தொடர்ந்து வந்தால் அவர்களை உமக்குக் காட்டுவேன். நீரே பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்!"

இப்படிச் சொல்லிவிட்டுப் பூங்குழலி 'ஹா ஹா ஹா' என்று சிரித்தாள்.

அந்தச் சிரிப்பு வந்தியத் தேவனுடைய நெஞ்சை என்னமோ செய்தது. பாவம்! இந்தப் பெண்ணுக்குச் சித்தப்பிரமை போலும்! நம்முடைய காரியத்துக்கு இவள் மூலமாக எந்த வித உதவியையும் எதிர்பார்ப்பது வீண்! இவளிடம் ஒன்றும் சொல்லாமல் இருப்பதே நலம்.

கலங்கரை விளக்கின் அருகிலிருந்த வீட்டை அவர்கள் நெருங்கினார்கள். வீட்டுக்குள்ளிருந்து ஒரு பெரியவரும் வயது முதிர்ந்த ஸ்திரீயும் வெளியே வந்தனர். பூங்குழலியையும் மற்ற இருவரையும் குதிரைகளையும் பார்த்து விட்டுப் பெரியவர் திகைத்து நின்றார்.

"பூங்குழலி! இவர்கள் யார்? எங்கே இவர்களைப் பிடித்தாய்?" என்று கேட்டார்.

"நான் இவர்களைப் பிடிக்கவில்லை, அப்பா! இவர்கள்தான் என்னைப் பிடித்தார்கள்!" என்றாள் பூங்குழலி.

"எல்லாம் ஒன்றுதான். பொழுது போவதற்கு முன்னால் வீட்டுக்கு வந்து விடு என்று சொன்னால் நீ கேட்பதில்லை. மூன்றாநாள் இரண்டுபேரை அழைத்துக் கொண்டு வந்தாய். இன்றைக்கு இரண்டுபேரை அழைத்து வந்திருக்கிறாய்! இவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள்?"

"சக்கரவர்த்தியின் வைத்தியத்துக்காக மூலிகை கொண்டு போவதற்கு இவர்கள் வந்திருக்கிறார்கள், அப்பா!"

"ஏன் ஐயா! இந்தப் பெண் சொல்வது உண்மைதானா?" என்று அந்தப் பெரியவர் வந்தியத் தேவனைப் பார்த்துக் கேட்டார்.

"ஆம், பெரியவரே! இதோ சீட்டு!" என்று சொல்லி வந்தியத் தேவன் இடையில் கட்டியிருந்த துணிச் சுருளிலிருந்து ஓலை ஒன்றை எடுத்துப் பெரியவரிடம் கொடுத்தான்.

அதே சமயத்தில் இன்னொரு ஓலை தரையில் விழுந்தது. அதை அவசரமாகக் குனிந்து எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டான்.

"பெரிய மூடன் நான்! ஒரு தடவை காரியம் கெட்டும் புத்தி வரவில்லை!" என்று வாய்க்குள் முணு முணுத்துக் கொண்டான்.

பெரியவர் அந்த ஓலையை வாங்கிக் கொண்டார். கலங்கரை விளக்கின் வெளிச்சத்தில் அதைக் கவனமாகப் பார்த்தார். அவர் முகம் மலர்ந்தது. தமது மனையாளை நோக்கி, "இளைய பிராட்டி ஓலை கொடுத்து அனுப்பியிருக்கிறாள். இவர்களுக்கு உணவு அளிக்க வேண்டும். உள்ளே சென்று உன் மருமகளிடம் சொல்லு! சோற்றுப் பானையைக் கவிழ்த்து உருட்டி விடப்போகிறாள்!" என்றார். (தொடரும்)

அங்கப்போர்

"மகாத்மாஜி இன்று உயிருடன் இருந்தால்!"
—ஒரு அரசியல்வாதி

மகாத்மாஜி இன்று உயிருடன் இருந்தால் அவர் இந்த மாதிரி காங்கிரஸ்காரர்களுடன் சேர்ந்து கொண்டுவிட மாட்டார் என்பது மாத்திரம் நிச்சயம்.

★

"குத்தகை சம்பந்தமான தகராறில் கத்திக் குத்து."
—ஒரு செய்தித் தலைப்பு

குத்தகை விஷயத்தில் என்னதான் தகராறுகள் ஏற்பட்டாலும் ஒருவரை மற்றவர் குத்தக் கை ஓங்குவது அவ்வளவு உசிதமில்லை!

★

"பதுக்கும் வசதி அதிகரித்ததே பஞ்சத்திற்குக் காரணம் என்று கூச்பீகார் உள் நாட்டு மந்திரி கூறினார்."
—ஒரு செய்தி

இப்படி, உண்மையை உள்ளபடி எடுத்துச் சொல்லக் கூச்சமடையாத கூச்பீகார் மந்திரியைப் பாராட்ட வேண்டும்.

★

"பொதுத் தேர்தலில் போட்டியிட ஸ்ரீராஜ் போஜ் முடிவு."
—ஒரு செய்தி

ஸ்ரீராஜ் போஜ் தேர்தலில் வெற்றி பெற்றவுடன் நமக்கெல்லாம் ராஜபோஜனம் கிடைக்கும் வழியைக் காட்டுவாரா!

★

"யாழ்ப்பாணத்தில் தமிழ் விழா இனிது நடந்து முடிந்தது."
—இலங்கைச் செய்தி

"யாழ்ப் பாணம் தமிழ் விழாவில் நடந்த பேச்சுகளில் இனிமையும் வீரமும் ஒருங்கே கலந்து மிளிர்ந்திருக்கும் என நம்பலாம்.

"இந்திய ஹோட்டல்காரர் ஒருவர் இங்கு வெள்ளையன் ஒருவனால் தாக்கப்பட்டார்."
—ஜோஹன்ஸ்பர்க் செய்தி

இந்த ஹோட்டல்காரர் தமிழ்நாட்டவராக இருந்தால் ஓட்டிலியினால் பதில் தாக்குதல் நடத்தி இருப்பார்.

★

"காரச்சியில் செக் பிரதிநிதி காணாமல் போய் விட்டார்."
—செய்தி

அவருடன் ஏதாவது செக் காணாமல் போய் விட்டதா என்று பார்க்கவும்!

★

"இந்தியாவுக்கு உணவு அனுப்பும் மசோதா மீதுள்ள விவாதத்தை அமெரிக்க பிரதிநிதித்துவ சபை ஒத்தி வைத்திருக்கிறது."
—வாஷிங்டன் செய்தி

ஒத்தி வைப்பதைவிட ஒரேயடியாகத் தீ வைத்து விடுவதுதானே!

★

"மாதர்களிடையே இன்னமும் பர்தா முறை நீடிப்பதைக் கண்டு வருந்துகிறேன்." —நேரு

தங்கள் பர்த்தாவின் கட்டளைப்படி பர்தா அணியும் ஸ்திரீயை எப்படிக் குறை கூற முடியும்!

★

"பஞ்ச காலத்தில் பட்சண வகைகளா! நேருஜியின் கண்டனம்."
—செய்தித் தலைப்புகள்

பஞ்சகாலத்தில் பஞ்ச பட்சிய பரமான்னம் வைத்துச் சாப்பிடுவது பஞ்ச மகா பாதகங்களில் ஒன்றாகும் என்பது நேருஜியின் எண்ணம் போலும்.

★

"இங்கிலாந்திலுள்ள பள்ளிச் சிறுவர்களுக்கு அயல் நாடுகளைப்பற்றிய அறிவு விருத்தியாக வேண்டும் என்று அறிஞர்கள் சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள்." —லண்டன் செய்தி

ஆனால் நம் நாட்டிலோ சிறுவர்களுக்குச் சொந்த நாட்டைப்பற்றிய அறிவுதான் விருத்தியாக வேண்டும்!

★

"மதுவிலக்குப் போலீஸைத் தாக்கிய வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்."
—மதுரைச் செய்தி

"போலீஸாரைத் தாக்கும்போது எதிரிகள் குடித்து விட்டு சுய ஞாபகம் இல்லாமல் இருந்ததால் அவர்களைக் குற்றம் செய்தவர்களாகக் கருத இடமில்லை" என்ற காரணம் காட்டி அவர்களை மாஜிஸ்திரேட் விடுதலை செய்திருக்க மாட்டார் என்பது நிச்சயம்.

★

"நமது சென்னை மாகாணத்துக்குப் பிராதான்யம் வேண்டும்." —ஒரு பிரசங்கி.

தான்யம்தான் இப்போது நமக்குப் பிராதான்யம் என்பதை இந்தப் பிரசங்கி அறிவாரா!



கண்கள்

கே.டி.முகம்மத்

மொழிபெயர்ப்பு : எஸ். வி. எஸ்.

[அகில உலகச் சிறுகதைப் போட்டிக்காக 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை நடத்திய அகில இந்தியச் சிறு கதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கதை.]

மூலக் கதை : மலையாளம்



கண் பெற்றவர்கள் எல்லாரும் என்னைப் பார்த்தால் சிரிக்கிறார்கள். சிலர் பலத்த குரலில் அட்டகாசச் சிரிப்புச் சிரிக்கிறார்கள். அவர்கள் என்னைப் பற்றி எத்தனையோ வேடிக்கை வேடிக்கையான கதைகள் கூடச் சொல்வார்கள்.

அவர்கள் என்ன சொல்லுகிறார்கள், கழுதைகள் மாதிரி அவர்களைச் சிரிக்கப் பண்ணுவது எது என்பதெல்லாம் எனக்கும் தெரியும்.

அவர்கள் சிரிப்புக்கு ஒரு காரணம், எனக்கும் ஒரு காதலியிருந்தாள் என்பதுதான். காதலியிருந்ததோடு அவன் என்னைக் கல்யாணம் செய்து கொண்டான் என்பதுதான் அவர்கள் சிரிப்புக்கு அதிகப்படியான காரணம்.

நான் எப்படிக் காதலன் ஆனேன், நான் எப்படிக் கல்யாணம் செய்துகொண்டு அவள் கணவனானேன் என்பதெல்லாம் அவர்களுக்கு அதிசயம் விளைக்கும் கதையாக இருக்கிறது. அத்துடன் அவர்களை விழுந்து விழுந்து சிரிக்கவும் தூண்டு



கிறது. இதில் இப்படிச் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது என்று நீங்கள் கேட்டு விட்டீர்களானால் என்னை ஒருமுறை பார்த்துவிட்டு வரச் சொல்வார்கள். இருக்கட்டும், நானும் உங்கள் எதிரில் வந்து நிற்கிறேன். என்னைப் பார்த்துவிட்டு அப்படிச் சிரிப்பு மூட்டும்படி என்னிடம் என்ன விசித்திரமாக இருக்கிறது என்று சொல்லுங்கள். பார்க்கப் போனால் நானும் ஒரு மனிதன்தானே? மனிதப் பிறவிதானே?

நான் ஒரு குள்ள மனிதன். என் நிறமோ கரி; கால்களும் கைகளும் நீளமும் குட்டையுமாக இருக்கும். இந்த என் உருவத்தின் விகாரத்துக்கு மணிமகுடம் வைத்தாற் போலிருக்கிறது என் தலை. என் முகத்தில் இரண்டு ஆழக் குழி விழுந்த கண்கள் இருக்கின்றன; என் மூக்கு சப்பை மூக்கு; வாய் தவளை வாய் போன்று அகன்ற வாய். முறம் போன்ற காதுகள், மிகக் குறுகிய நெற்றி — இவ்வளவு சாமுத்ரிகா லக்ஷணங்கள் போதாதென்று என் பன்னிரண்டாவது வயதில் ஆத்திரத்துடன் தாக்கிய பெரியம்மை என் முகத்தில் தன் வடுக்களைப் பொளிந்து தள்ளி விட்டுப் போயிருக்கிறது. சிறுவனாக இருந்தபோது, ஒரு சமயம் கீழே விழுந்து விட்டேன். அதனால் என் வலது காலில் ஊனம் ஏற்பட்டு நொண்டியானேன்.

ஆமாம், உண்மையிலே நான் ஒரு விகாரக் குன்று என்றுதான் சொல்ல வேண்டும். என்னை யார் முதல் தடவையாகப் பார்த்தாலும் அவர்கள் உள்ளத்தில் ஒரு கருங்குரங்கைக் காண்பது போன்ற உணர்ச்சியை உண்டாக்கி விடுகிறேனும். அப்படித்தான் இருக்கட்டுமே! நான் கேட்கிறேன், மக்கள் கருங்குரங்கைப் பார்த்தால் சிரிக்கிறார்களா, என்ன? இல்லையே! பின் என்னைப் பார்த்து மட்டும் ஏன் சிரிக்கிறார்கள்? தங்களைப் போன்ற ஒரு மனிதன் குரங்கைப் போல் இருப்பதைக்



ராமு:— எங்கப்பா ஒரு போலீஸ்காரர்! தெரியுமா?

சீனு:— எங்கப்பா குதிரை மேலே வருகிற போலீஸ்காரராக்கும்!

ராமு:—அப்படியென்றால் ரொம்பப் பிரமாதமோ!

சீனு:—இல்லையா? எங்கேயாவது அடிதடி என்றால் சீக்கிரம் ஓடிப்போய்த் தப்பிவிடலாமே!

காணும் போதுதான் அப்படிச் சிரிப்பு வருகிறது போலும்!

நான் தெரு வழியாகப் போய்க்கொண்டிருந்தபோது, ஒருவன் தன் தோழனிடம் பின் வருமாறு சொல்லிக் கொண்டு போனான்: "இந்த மனிதன், பிரசித்தி பெற்ற பிரஞ்சு மொழி நாவலாசிரியர் விக்டர் ஹ்யூகோ எழுதிய 'நாட்டர்டாம் நகரத்துக் கூனனை' நினைவூட்டவில்லையா?" இவ்வளவுக்கும் நான் கூனன் அல்ல. இருந்தாலும் அவர்கள் அவ்விதம் பேசிக் கொண்டு போனதற்காக நான் அவர்களை நிறுத்திச் சண்டைக்குப் போகவில்லை. ஆகக்கூடி எனக்கு என்ன வந்தது. நான் அவர்களுக்கு யாரை நினைவூட்டினால் என்ன? எதை நினைவூட்டினால் எனக்கு என்ன? அல்லது அவர்களுக்கு இன்னாரைத்தான் நினைவூட்ட வேண்டும் என்று நான்தான் முடிவுகட்டிக் கூற முடியுமா? எனினும் அவர்கள் சிரிப்பு எனக்கு என்னைப் பற்றி எவ்வளவோ அறிவுறுத்தி விட்டது!

யாராகிலும் ஒரு பெண் வண்ணப் பட்டுச் சேலை கட்டிக் கொண்டு தெருவழியாகச் சென்றாளானால் நான் என்னுள்ளே ஒடுங்கிக் கொள்வேன். ஏனெனில் அவர்கள் என்னைப் பார்த்தார்களானால் முகத்தைப் பளீர் என்று வேறு பக்கம் திருப்பிக் கொள்வார்கள்-துர்ச்சகுனமாகும் ஆந்தையைக் கண்டால் பிராமணர்கள் தங்கள் முகத்தைத் திருப்பிக் கொள்வது போல. ஆம், என்னையும் தங்களைப் போன்ற ஒரு மனிதன் என்று அவர்கள் கருதுவதில்லை. எனக்கும் உணர்ச்சிகள் உண்டு என்பதை அங்கீகரிப்பதில்லை. இந்த அகம்பாவத்தைக் காணும் பொழுது தான் என் பரிதாப நிலை பரிபூரணமாகப் புரிகிறது. உங்களைப் போல்தான் எனக்கும் அழகுணர்ச்சியைக் கடவுள் அளித்திருக்கிறான்; நானும் அழகான பொருள்களைக் கண்டவிடத்து அதன் அழகைக் கண்டு அநுபவிக்கிறேன். ஆனால் நான் அநுபவிப்பது மட்டும் மன்னிக்க முடியாத குற்றமாகக் கருதப்படுகிறது. சுருங்கக் கூறின், உலகம் என்னைப் போன்ற மனிதர்களுக்கு இவ்வுலகில் வாழ உரிமை கிடையாது என்கிறது. எனக்கு இதுவும் நன்றாகத் தெரியும்.

எனக்கு நினைவு தெரிவதற்கு முன்பே என் தகப்பனார் இறந்து விட்டார். ஆகவே, என் கிழத் தாய்தான் என் வீட்டிலிருந்தாள். இந்த என் கோர உருவத்துக்கு எவ்வளவு தூரம் என் முன்னோர்கள் காரணம் என்று எனக்குத் தெரியாது. ஒருவேளை என் தந்தையாக இருக்கலாமோ, அல்லது என் தாயாக இருக்கலாமோ என்று நினைத்தால் இவர்களில் எவர் மீதும் குற்றம் சாட்ட முடியாது அவர்களைக் குற்றம் கூறித்தான் என்ன பயன்? நான் அப்படிப் பிறந்து விட்டேன். ஒருவேளை அவர்கள் நான் பிறப்பேன் என்று எதிர்பார்க்கவில்லையோ என்னவோ! நான் பிறப்பதை அவர்கள் விரும்பவில்லையோ என்னவோ!

எப்படியோ நானும் என் தாயாரும் எங்கள் குலம் அழிந்து நசித்துப் போகாமல் காப்பாற்றி வருகிறோம். நான் இவ்வளவு பரிகாசத்துக்கும் கேலிக்கும் வெறுப்புக்கும் உள்ளாகியும் இன்னும் மறைந்து தொலையவில்லை. என் தாயார் இவ்வளவு வயதாகியும் உயிர் துறக்கவில்லை! இப்படியே எங்கள் பரம்பரையை எத்தனை நாள்தான் காப்பாற்ற முடியும்?

இந்த எங்கள் வம்சச் செடி இன்னும் இரண்டு கிளைகள் விட்டு, என்றென்றும் உயிருடன் வாழ வழி தேட வேண்டாமா? மனிதன் பிறவியிலேயே சமுதாய உணர்ச்சியுள்ளவன். ஆகவே, என் அப்பாவித் தாயாரின் உள்ளத்திலும் குடும்ப உணர்ச்சி மலரத் தொடங்கியது. அதன் விளைவாக அவள் "அப்பா, நீ ஒரு புது மருமகளை நம் வீட்டுக்கு அழைத்து வர வேண்டாமா?" என்று கேட்டாள்.

இந்தக் கேள்வி எனக்கு எவ்வித வியப்பையும் உண்டாக்கவில்லை. என் உள்ளத்தில் உண்டான உணர்ச்சி பாரத்தை அடக்கிக் கொண்டு, "ஓ, அழைத்து வருவோம் அம்மா, கொஞ்ச நாளில்" என்றேன். அதற்குப் பிறகு, அவள் சும்மா இருக்க

வில்லை. எங்கள் வீட்டுக்கு அக்கம்பக்கத்திலுள்ள தலை நரைத்த கிழவிகளுடன் இது சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை தொடங்கினாள். இந்தப் பேச்சு வார்த்தை சில தினங்கள் வரை நீடித்தது. பிறகு நாள் ஆக ஆக, அவள் முகத்தில் துன்பக் களை படரத் தொடங்கியது. ஒவ்வொரு நாளும் அக்கம்பக்கத்தவர்களுடன் பேசி விட்டுத் திரும்பும்போது அவள் முகத்தில் சோகம் ததும்பும். ஆகவே, அவள் நாளடைவில் எனக்கு ஒரு பிரச்னையாகவே ஆகிவிட்டாள். ஒவ்வொரு நாளும், "அம்மா! என்ன விஷயம்? ஏன் ஒரு மாதிரி யிருக்கிறாய்?" என்று கேட்பேன்.

"ஒன்றுமில்லை, அப்பா!" என்பாள்.

'ஒன்றுமில்லை' என்ற அந்த வார்த்தையில் தாயுள்ளத்தின் ஆற்றாமை, ஏக்கம் அவ்வளவும் தொனிக்கும்

இரண்டு வாரங்கள் சென்றன. என் தாயார் எனக்காகப் பெண் தேடிப் போவதை நிறுத்திக் கொண்டாள். இது வரை என்னைப் பார்த்துச் சிரிக்காமலிருந்த ஓரிருவர் இப்போது என்னைப் பார்த்துச் சிரிக்கத் தொடங்கினர். ஒரு நரைத்த கிழவர் என்னைப் பார்த்து ரொம்ப அனுதாபத்துடன், "அப்பாவி மனுஷன்! இவனுடைய அம்மா, இவனுக்கு ஒரு பெண்ணைத் தேடிக் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும் என்று எவ்வளவு சிரமப்பட்டாள். பாவம்! கடவுளே! ஏன் இந்த மாதிரி ஒரு விகார மனிதனை நீதான் படைத்தாயோ!" என்றார்.

நான் இரகசியமாக வாசனைப் பவுடர்கள், சென்டுகள் எல்லாம் பூசிக் கொள்ளத் தொடங்கினேன். நல்ல நல்ல உயர்ந்த ரக ஆடைகள் அணிந்து கொண்டேன். ஆனால் இந்த என் முயற்சிகள் எல்லாம், மக்கள் என்னைப் பார்த்து இன்னும் பலமாகச் சிரிக்கச் செய்தனவே தவிர, வேறு ஒரு பயனும் அளிக்கவில்லை. ஆகவே. நான் நாளுக்கு நாள் இன்னும் விகாரமாகி வருகிறேனோ என்ற சந்தேகம் எழத் தொடங்கியது. கடைசியில், 'குளிப்பதனால் காக்கை வெண்ணிற அன்னமாவதில்லை' என்ற உண்மையை உணர்ந்தேன்.

என் வாழ்க்கைக் கதையை மேலே தொடர்கிறேன். கடைசியில் ஒருவாறு நானும் ஒரு காதலியைக் கண்டுபிடித்தேன். இப்பொழுது உங்களுக்குக்கூட என் காதல் கதையை, நானும் ஒரு மனிதனாக வாழ்ந்த கதையைக் கேட்க ஆவல் உண்டாகிறது அல்லவா?

நான் வெகு நாட்கள் காதலுக்காக ஏங்கினேன். 'நானும் யார்மேலாவது அன்பு செலுத்த முடியாதா! என்னையும் பிறர் யாரும் காதலிக்க மாட்டார்களா?' என்று ஏங்கிக் கொண்டிருந்தேன். இந்தமாதிரி நான் ஏங்கியது இயற்கையே அல்லவா?

என்னுடைய காதல் கதையும் உண்மையிலே மிக ஆச்சரியமாக இருக்கும். உலகமே பார்க்கக் கூசிய, ஏன், பார்த்த மாத்திரத்தில் அருவருப்புக் கொண்ட என் விகாரத்தைச் சற்றும் பொருட்படுத்தாது ஒரு பெண் என்னைக் காதலித்தாள். அதோடு இல்லாமல் என்னையே தன் மனக்கினிய கணவனாக ஏற்று, என்னைக் கல்யாணம் செய்து கொண்டாள் என்றால் வியப்பிலும் வியப்பாக இல்லையா?

தன் வீட்டுக்கு ஒரு மருமகளை அழைத்து வர வேண்டும் என்று என் தாயார் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் வீணாயின. எந்தப் பெண்தான் ஒரு குரங்கு மனிதனைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புவாள்? இந்தத் தோல்வியைத் தாங்க முடியாமல் என் தாய் நோய் வாய்ப் பட்டாள். முதுமைக் கென்று ஏற்பட்ட நோய் நொடிகளுக்குச் சீக்கிரமாகவே உள்ளாகி அதிலிருந்து பின்னர் மீளவே இல்லை என் தாயார்! அவள் ஒவ்வொரு சமயம் ஏக்கத்தினாலும் துக்கத்தினாலும் எரிந்து சாம்பராகும் என் இருதயத்தை, தன் அன்புத் தென்றலினால் குளிர்வித்து வந்தாள். என்வரை இந்த உலகம் அன்பற்று வறண்டு கிடந்தது இப்படிப்பட்ட உலகத்துடன் என்னை, என் அருமைத் தாயார் தன் அன்பென்னும் தங்கக் கம்பியினால் பிணைத்து வைத்திருந்தாள். அவள் எனக்கு உயிர். இந்த என் பயங்கர விகார உருவத்திலும் அவள் ஏதோ ஒரு அழகைக் கண்டாள்! அந்தத் தாயார் என்னைத் தனியே விட்டு ஏகினாள். அதைக் குறித்து



அவர்:—ஏன் ஸார், நம்ம சங்கத்தின் ஆண்டு விழாவில் நண்பர் அண்ணுசாமியைப் பேசச் சொன்னால் என்ன?

இவர்:— ஆகா! பேஷாய்ச் சொல்லலாம். ஆனால்......சபையோருக்கு எங்கே போகிறது?



நான் இப்பொழுது அழப் போவதில்லை. ஏனெனில் இன்னும் கஷ்டங்களைத் தாங்கும் இடம் அவனுக்கில்லை. அவள் சென்றதே நல்லதாயிற்று.

இதற்குப் பிறகுதான் அது நிகழ்ந்தது. ஒருநாள் என் வீட்டு வாசற்படியில் யாரோ ஒரு கனமான தடியைப் பிடித்து நடந்து வரும் சத்தம் கேட்டது. ஆம், தடியின் 'டக் டக்' சத்தம்தான் கேட்டது. அந்தச் சத்தத்துடன் கூடவே ஒரு சிறு பெண்ணின் குரலும் கேட்டது. "ஐயா! ஏழைப் பிச்சைக்காரிக்கு ஏதாகிலும் போடுங்கள் ஐயா!" ஆம், அவள் ஒரு பிச்சைக்காரிதான். "எசமானே, என்னாலே பார்க்க முடியாது. கண்ணில்லாக் கபோதி!" என்று தொடர்ந்து கூறினாள். நான் அவளைப் பார்த்தேன்; பிறகு அவள் கண்களைப் பார்த்தேன். ரொம்பவும் பரிதாபமாக இருந்தது. என்னை மறந்து சிந்தனையில் ஆழ்ந்து விட்டேன். ஏழைப் பெண், பாவம்! இளம் வயதில் கண்ணில்லாமல்...பாவம், எவ்வளவு கஷ்டம்! ஆனால் அவளால் காதால் கேட்க முடியும், கையால், காலால் தொட்டு உணர முடியும். இந்த இரு உணர்ச்சிகளின் உதவியினால்தான் வாழ வேண்டும். இது என்ன வாழ்க்கை!

அவள் பார்ப்பதற்கு அப்படியொன்றும் அழகில்லை. இருந்தாலும் அவளுடைய கடைந்தெடுத்தாற் போலிருந்த உருவம், இளமையின் வசீகரம் பெற்று விளங்கியது. அந்தப் பேதைப் பெண்ணிடம் என் இதயம் பேர் இரக்கம் கொண்டது.

நான் மிக்க மரியாதையுடன், "நீ உள்ளே வா" என்றேன். அவள் வாயிற் கதவுக் காகத் தடவத் தொடங்கினாள். நான் எழுந்திருந்து அவள் கையைப் பிடித்து அழைத்து வந்தேன். ஒரு இள மங்கையின் கரத்தைத் தொடுவது, இதுதான் என் வாழ்க்கையில் முதல் தடவை. ஆகவே, என் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு மென்ன அழைத்து வந்தேன். மறுபடியும் அவள் முகத்தை ஏறெடுத்துப் பார்த்தேன். அவளுக்குக் கண்பார்வை இல்லையென்றாலும், அவளுடைய இளமை அவள் முகத்தில் பொலிந்த அழகை இத்தனை நாளும் காப்பாற்றி வந்திருக்கிறது என்பதை அறிவுறுத்தியது. அவளுடைய விம்மிய மார்பகம் என்னிடமிருந்து வெகு தூரத்தில் இருக்கவில்லை. நான் இதையெல்லாம் நினைப்பதற்கு முன்பே, என் நிலைமையை உணர்வதற்கு முன்பே, என் உடம்பு குளிரில் நடுங்குவதுபோல் நடுங்கத் தொடங்கியது. என் உதடுகள் உலர்ந்து போவதை உணர்ந்தேன், என் கால்களும் கைகளும் புத்துணர்ச்சிப் பெறுவதை உணர்ந்தேன். என் மூச்சும் துரிதப்பட்டது!

"நீ இங்கே உட்கார்!" என்று சொல்லி முற்றத்தின் ஒரு கோடிக்கு அழைத்து வந்தேன். அப்போது அவள் என் கைகள் நடுங்குவதை உணர்ந்தாளோ, என்னவோ? நான் சமைத்திருந்த சாதம் கொஞ்சம் போட்டேன். அது தவிர அவள் கையில் ஒரு ரூபாயையும் கொடுத்தேன்.

அவள் தன் பெயர் லீலா என்று கூறினாள். அவளும் அவளுடைய தாயாரும் பட்டணத்திலிருந்த பெரிய ஆலைக்குப் பக்கத்திலிருந்த குடிசையில் வசிப்பதாகக் கூறினாள். இதையெல்லாம் பேசி விட்டு அவள் வீட்டுக்குப் போகப் புறப்பட்டபோது, நான் அவளை மறுபடியும் எப்போதாவது வரச் சொன்னேன்.

லீலா அடிக்கடி வரத் தொடங்கினாள். பிறகு அவள் நாள்தோறும் வழக்கமாக வரத் தொடங்கி விட்டாள். நாங்கள் உலகத்திலுள்ள எல்லா விஷயங்களைப் பற்றியும் பேசுவோம், இதனால் எனக்குச் சிறிது ஆறுதல் ஏற்பட்டது; என் உள்ளத்தை அழுத்திக் கொண்டிருந்த கவலை பாரமும் குறைந்தாற்போல் தோன்றியது. அவளுடன் பேசும் சில நிமிஷங்கள் என்றென்றும் மறக்க முடியாத இன்ப நினைவுகளாகத் தோன்றி வாழ்க்கையில் புதுருசி யுண்டாக்கவும் செய்தது.

லீலாவின் கண்கள்! அந்தக் கண்களுக்கு மட்டும் பார்வை யிருந்திருந்தால், அவை அவள் முகத்தின் அழகை அதிகரித்துக்

காட்டியிருக்கும். பெண்ணின் கண் நோக்கு மனிதனைப் பைத்தியமாக அடிப்பதில்லையா! இந்த உண்மையைப் பிறர் அனுபவங்களிலிருந்துதான் நான் தெரிந்து கொண்டேன். என்றாலும், அதன் பொருள் என்னவென்பது என்னால் ஒருவாறு உணர்ந்து கொள்ள முடிகிறது. என் பசித்த இதயத்துக்கும் எத்தனையோ தாபங்கள் உண்டு. 'ஆகா! இந்த லீலாவுக்குத்தான் கண்கள் இருந்திருந்தால்.........!' என்று ஒவ்வொரு சமயம் எண்ணுவேன். இதுதான் எவ்வளவு மடத்தனமான எண்ணம் என்பது எனக்குத் தெரியாமற் போகவில்லை. அவளுக்குக் கண்கள் இருந்திருந்தால், அவள் பிச்சைக்காரியாகியிருக்க மாட்டாள். அப்படிப் பிச்சைக்காரியாகவே ஆகியிருந்தாலும், என்னிடமிருந்து நான் இடும் பிச்சையைத் தவிர வேறு எதையும் ஏற்றுக் கொண்டிருக்க மாட்டாள். ஆம், அவள் கண்கள், அவளை என்னிடம் அனுப்பியிருக்க மாட்டா! என்னுடன் அவளை இப்படித் தினந்தோறும் பேச அனுமதித்திருக்காது! இந்தமாதிரியெல்லாம் என் சுய உணர்வின்றி நினைத்தேன். காரணம் நானும் மற்ற மனிதர்களைப் போன்ற ஒருவன்தானே? மற்றவர்களைப் போல் நான் இருப்பது தவறா?

ஊரிலுள்ளவர்கள், நானும் லீலாவும் சந்தித்துப் பேசுவதைக் கவனிக்கத்தான் செய்தார்கள். ஆனால் யாரும் எங்களைக் கண்டு பொறாமைப் படவில்லை. நான் குரங்கு - மனிதனாக இருந்த காரணத்தால் ஏற்கெனவே மக்களின் எள்ளி நகையாடலுக்குப் பாத்திரமாகியிருந்தேன். இப்பொழுது நான் ஒரு குருடியைக் காதலிக்கிறேன் என்ற விஷயம், அவர்கள் கேலிக்கும் சிரிப்புக்கும் இன்னும் கொஞ்சம் காரணமாயிற்று. ஆமாம், 'விகாரத்துக்கும் குருட்டுக்கும் கல்யாணமாம்' என்று அவர்கள் இன்னும் பேசிக் கேலி செய்து சிரித்தார்கள். நிஜமாகவே, இது வேடிக்கையாக இல்லையா?

ஒரு நாள் லீலாவை, "லீலா, என்னைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டேன்.


அதற்கு அவள் அளித்த நாணம் கலந்த புன்முறுவல் எனக்கு எல்லையற்ற இன்பத்தையளித்தது.

"பேசு, லீலா!" என்று நான் வற்புறுத்தினேன்.

"நீங்கள் கெட்ட மனிதர் என்று நான் என்றைக்காவது சொன்னதுண்டா?" என்று அவள் மெல்லிய குரலில் பதில் அளித்தாள். அவள் இதயபூர்வமாகக் கூறுகிறாள் என்பதை உணர்ந்தேன். எனக்கு ரொம்பவும் பெருமிதமளித்தது, அவள் அளித்த பதில். அடுத்தாற்போல், இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும் என்று நான் சற்றும் கருதவில்லை. என் உணர்ச்சிப் பரவசத்தில் "என்னை உனக்குப் பிடிக்கிறதா, லீலா?" என்று கேட்டு விட்டேன். அவள் வெட்கத்தினால் தலையைக் கவிழ்ந்து கொண்டாளே தவிரப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. வாழ்க்கையின் இன்பம் முழுவதும் அந்த ஒரு காட்சியில் மண்டிக் கிடப்பதாகத் தோன்றியது.

லீலா அதற்குப் பிறகு வெகு சீக்கிரமாகவே வீட்டுக்குப் போய் விட்டாள். லீலா! இந்த வறண்ட பாலைவனம் போன்றிருந்த இந்த உலகத்தில், எனக்கும் அன்புடன் கூற ஒரு பெயர் கிடைத்தது. உள்ளத்தில் ஆனந்தம் பொங்க ஆவலுடன் 'எப்போ வருவாளோ?' என்று எதிர்பார்க்க ஒருத்தி கிடைத்தாள்! இது என் அதிர்ஷ்டமன்றோ!

மக்கள், என்னைப் பார்த்துச் சிரிக்கும் அத்தனை பேரும் என் விரோதிகள். 'அவர்கள் ஒருகால், என்னுடைய கோர உருவத்தைப் பற்றியும் விகாரத்தைப் பற்றியும் லீலாவுக்குக் கூறி அவள் மனசைக் கலைத்து விட்டால்.........? அந்தக் கைங்கரியத்தை ஒரு வேளை, அவர்கள் ஏற்கெனவே செய்து விட்டார்களோ, என்னவோ! யார் கண்டது? எனினும் அவளுக்கு இரவு எது, பகல் எது என்பதே சொல்லத் தெரியாமலிருக்கும்போது, உள்ளத்தைக் கவரும் மோகன உருவத்துக்கும், அருவருப்பை அளிக்கும் விகார உருவத்துக்கும் வித்தியாசம் எங்கே தெரியப் போகிறது? அவள் தான் ஒரு பிறவிக் குருடி என்று கூறியிருக்கிறாளே' என்று



"அம்மா, நான் நல்ல பையன்தானே?"

"ஆமாண்டா, கண்ணு! சந்தேகம் என்ன?"

"என்னை நீ நம்புவாயா, அம்மா!"

"நிச்சயம் நம்புவேனடா, தங்கம்! உன்னை நம்பாமல் என்ன?"

"அப்படியென்றால், ஏன் இன்னும் மைசூர்ப்பாகு டப்பாவைத் தூக்கி ரொம்ப உயரத்தில் வைக்கிறாய்?"

ஓரளவு மன ஆறுதல் உற்றேன். இதனால் எல்லாம் அவன் குருடியாகவே பிறந்தது என்னுடைய அதிருஷ்டவசத்தினால்தான் என்று நான் கூறுவதாக எண்ண வேண்டாம். ஆனாலும் அப்படிப் பிறந்தது அவளுடைய துர்ப்பாக்கியம் என்று நிச்சயமாகச் சொல்ல முடியுமா?

லீலா, மறுநாள் வந்தாள். நான் எங்கள் கல்யாணத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன்—அதை எப்படி நிறைவேற்றுவது? நாங்கள் இருவரும் கணவனும் மனைவியும் ஆகிவிட்டோம் என்பதற்குச் சாட்சியாக, கடவுளின் பிரதிநிதியாக வரும் எந்தப் புரோகிதரும் எங்கள் கல்யாணத்தை நடத்தித் தரமாட்டார். ஏனெனில் அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. இந்தக் கடவுளின் பிரதிநிதிகளுக்கு லோகாயதமான குறிக்கோள் ஒன்றிருக்கிறது; ஆனால் அதை அவர்கள் 'ஆத்மீக'மானது என்று திரித்துக் கூறுவார்கள். லீலாவும் நானும் அவர்கள் அபிப்பிராயத்தில் பொருத்தமில்லாதவர்கள். ஆகவே, அவர்கள் இந்த உலகத்தில் ஆண்களைவிடப் பெண்கள் எவ்வளவு அதிகமாயிருந்த போதிலும், லீலாவைத் தவிர எந்தப் பெண்ணும் என்னை மணக்க மாட்டாள் என்று எவ்வளவு பலத்த குரலில் கூறினாலும், அந்தப் புரோகிதர்கள் நாங்கள் கல்யாணம் செய்துகொள்ள உதவ மாட்டார்கள். கடவுளின் பிரதிநிதிகள் என்ற பெயரில் வரும் இந்தப் புரோகிதர்களும் இந்த மாதிரி விஷயங்களில்தான் ஒன்றுபடுவார்கள். நான் சொல்வது விளங்குகிறதா? இல்லையா? ஒருவேளை நான் முஸ்லிம் என்பது உங்களுக்கு இதுவரை தெரியவில்லை போலும். ஆனால் நான் முஸ்லிம் என்பதும் ஒரு விஷயமா? ஒரு பொருட்டாக மதிக்கக் கூடிய விஷயமா என்றுதான் கேட்கிறேன்.

நான் "லீலா, நீ என்னைக் கலியாணம் செய்து கொள்வாயா?" என்று கேட்டேன். அவள் திடுக்கிட்டாள். நான் ஒரு முஸ்லிம் என்ற விஷயம்தான் அவளை அப்படித் தயங்கச் செய்திருக்க வேண்டும். என்ன பதில் சொல்வது என்று யோசிக்கச் செய்திருக்க வேண்டும். "நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று அவள் கடைசியில் கேட்டாள். இந்தக் குருட்டுப் பிச்சைக்காரப் பெண், என்னிடம் அனுதாபப் படுவதற்கும் ஒரு எல்லை இருக்கிறது என்பதை உணர்ந்தேன்.

ஆகவே, என் மனசைத் தேற்றிக் கொண்டு, "லீலா, நானும் ஒரு மனிதப் பிறவிதான் என்று நீ உணர்ந்தாலே போதும். கடவுள் உன்னை என்னிடம் அனுப்பினார். ஜாதி, மத வேறுபாடுகள் எல்லாம் மனிதன் சிருஷ்டித்தவை!" என்று கூறிவிட்டுக் கெஞ்சும் பாவனையில் அவளுடைய துடிக்கும் உதடுகளைப் பார்த்தேன். நீதிபதியின் தீர்ப்பை எதிர் நோக்கும் கொலைக்காரனைப்போல் நின்றேன். ஆம், அவள்தான் தீர்ப்பளிக்க வேண்டும்—நான் வாழவேண்டுமா அல்லது சாக வேண்டுமா என்பதைப் பற்றி. ஆனால் அவள் மௌனம் சாதித்தாள்! அந்த மௌனத்துக்குத்தான் எவ்வளவு அர்த்தம்! நான் மேலே தொடர்ந்து "சொல், லீலா! நான் உன்னைக் காப்பாற்ற விரும்புகிறேன். என்னைச் சந்தோஷமுறச் செய்வதாக வாக்குக் கொடு!" என்றேன்.

கடைசியில் அவள் பேசினாள்: "நான் தங்கள் விருப்பத்துக்குச் சம்மதிக்கிறேன். என்னைப் பற்றி மக்கள் எவ்வளவோ வெறுப்புடன் பேசக் கேட்டிருக்கிறேன்? நான் தெரு வழியாகப் போகும்போது, 'அதோ பார் குரங்கு மனிதனின் காதலி போகிறாள்' என்று பேசக் கேட்டிருக்கிறேன். அவர்கள் உங்களுக்கு அழகில்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் பேச்சுப்படி உங்களுக்கு அழகில்லைதான்......"

அவள் பேசி முடிப்பதற்குள்ளேயே நான் அவசரப்பட்டு, "அவர்கள், கிடக்கிறார்கள். நீ என்ன நினைக்கிறாய், லீலா?" என்றேன்.

அவள் சொன்னாள்: "அவர்கள் அழகு அழகு என்று பேசுகிறார்களே, அது எனக்குப் புரியவில்லை. மேலும் நான் குரங்கை வேறு பார்த்ததில்லை. ஆகவே, அவர்கள் பேச்சை நான் பொருட்படுத்துவதில்லை. நிஜமாகவேதான் கேட்கிறேன். இந்த உலகத்திலேயே நீங்கள்தான் மிகச் சிறந்த 'அழகன்' என்று சொல்லுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். அதனால் எனக்கு என்ன மாறுபட்ட உணர்ச்சி ஏற்பட்டுவிடப் போகிறது? ஒன்றுமில்லை. நான் என் இதயத்தின் மூலம்தான் இந்த உலகத்தை அறிந்து கொண்டிருக்கிறேன். நான் அழகையும், விகாரத்தையும் என் இதயத்தின் மூலமாகத்தான் காண்கிறேன். நீங்களொரு முஸ்லிம்; நான் ஒரு ஹிந்து. நாமிருவரும் கல்யாணம் செய்து கொள்வதில் உங்களுக்கு ஒரு ஆட்சேபமும் இல்லை என்றால் எனக்கும் இல்லை. நான் இது வரை, என்னை அந்தரங்க சுத்தியுடன் நேசிப்பவர்கள் ஒருவருமே இந்த உலகில் இருக்கமாட்டார்கள் என்று நினைத்து வந்தேன்......ஆனால்......?"

"பிறகு என்ன? ஏன் அந்த 'ஆனால்?'" என்று ஆவலுடன் கேட்டேன்.

(அடுத்த இதழில் முடியும்)

பூதம் காத்த சுரங்கம்

மாலு



3. பாம்பு கடித்தது!

பயங்கரமான கொடிய பாம்புகளும் ஆள் விழுங்கி முதலைகளும் வேறு பல விஷ ஜந்துக்களும் நிறைந்த அந்த ஏரியில் வீரசேனன் போட்ட கல் விழுந்தவுடன் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. ஏரியின். மத்தியில் நேரே கோடு போட்டது போல ஒரு சுழல் ஏற்பட்டது. முதலை, மீன், பாம்பு முதலிய ஜந்துக்கள் எல்லாம் இரண்டு பக்கமும் சடசட வென்று சிதறி ஓடின. பெரிய புயல் காற்று அடிப்பது போல 'ஹோ!' என்ற சத்தம் கேட்டது. என்ன ஆச்சரியம்! மறுகணம் அந்த ஏரியின் நடுவிலிருந்து ஒரு பாலம் மெதுவாக மேலே கிளம்பியது.

இது வரையில் உணர்ச்சியின்றி நின்று கொண்டிருந்த வீரசேனனுக்கு அதைப் பார்த்தவுடன் உற்சாகம் உண்டாகியது. அந்த அற்புதக் காட்சியைப் பார்த்துக் கொண்டு மெய் மறந்திருந்தான். அவனுடைய மனதில் எத்தனையோ விதமான எண்ணங்கள் ஒன்றன் பின் ஒன்ருக அலை மோதிக்கொண்டு வந்தன.

"உம்; ஏன் நின்று கொண்டிருக்கிருய்? பாலத்தில் ஏறி என் பின்னுல் சீக்கிரம் வா!" என்று வீரசேனனை அழைத்து வந்த நிழல் உருவம் சொல்லிற்று.

வீரசேனன் மெதுவாக அந்தப் பாலத்தின் மீது காலை ஊன்றிப் பார்த்தான். பிறகு பலமாக அழுத்திப் பார்த்தான். அந்தப் பாலம் இடிரென்று ஏரிக்குள் முழுகி விடுமோ என்று அவனுக்குப் பயமாக இருந்தது. "பாலம் ஒன்றும் ஏரிக்குள் அமுங்கி விடாது. பயப்படாமல் வா!" என்றது அந்த உருவம்.

வீரசேனனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. நாம் நினைக்கிறதை எல்லாம் இந்த உருவம் தெரிந்து கொண்டிருக்கிறதே என்று நினைத்துக் கொண்டே அந்த உருவத்தை அண்ணாந்து ஆச்சரியத்துடன் பார்த்தான்.



"வீரசேனு! என்ன பார்க்கிருய்? நீ நினைப்பதை யெல்லாம் நான் தெரிந்து கொண்டு விடுகிறேனே என்று ஆச்சரியப் படுகிருயா?" என்று கேட்டது அவ்வுருவம்.

வீரசேனனுக்கு இன்னும் ஆச்சரியமாக இருந்தது. அவன் காதுகளையே

அவனால் நம்ப முடியவில்லை. மிகுந்த வியப்புடன் "ஆமாம்!" என்று சொல்லி வைத்தான்.

"நீ நினைக்கிறதை மட்டுமல்ல, என்னோடு யார் பேசினாலும் அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதையும் நான் தெரிந்து கொண்டு விடுவேன். அது கிடக்கட்டும். நீ வா, போகலாம்" என்று சொல்லி அந்த உருவம் ஏரியின் மீது புதிதாகக் கிளம்பி வந்திருந்த பாலத்தில் ஏறிச் சென்றது.

வீரசேனனும் அந்த உருவத்தைப் பின் தொடர்ந்து சென்றான். என்றாலும் அவன் மனத்துக்குள் பயமாகவே இருந்தது. ஒரு சமயம் அவனுக்குப் பாலம் ஆடுவது போல இருந்தது. இன்னொரு சமயம் பாலம் தண்ணீருக்குள் அமுங்குவது போல இருந்தது. பயந்து கொண்டே அடிமேல் அடி வைத்து அப்படியும் இப்படியும் திரும்பாமல் மெதுவாக நடந்தான்.

பாலத்தின் நடுவிற்கு அதாவது ஏரியின் மத்திய பாகத்திற்குச் சென்றதும் சற்றுத் திரும்பி ஏரியைப் பார்த்தான். அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை. ஒரு தரம் கண்களைக் கசக்கிவிட்டுப் பார்த்தான். தன்னைத் தானே நன்றாகக் கிள்ளிக் கொண்டு தனக்கு உணர்ச்சி யிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொண்டு மீண்டும் பார்த்தான். அவன் பார்த்தது உண்மைதான். கொடிய விஷ ஜந்துக்கள் நிறைந்த அந்த ஏரியில் இளம் பெண் ஒருத்தி கையில் தம்புராவைப் போன்ற ஒரு வாத்தியத்தை வைத்துக் கொண்டு, ஒரு சிறிய தெப்பத்தில் உட்கார்ந்திருந்தாள். தெப்பத்துக்குச் சற்றுத் தூரத்தில் சலசல வென்று சத்தம் கேட்டது. அந்தப் பெண் சத்தம் வந்த திசையைத் திரும்பிப் பார்த்தாள்.

வீரசேனனும் பார்த்தான். அடடா! அவன் நினைத்தது சரியாகப் போய் விட்டது. ஒரு திமிங்கிலம் வாயைப் பிளந்துகொண்டு அந்தப் பெண்ணை நோக்கி வந்துகொண்டிருந்தது. அந்தப் பெண் ஒரு கணம் மௌனமாக அதைப் பார்த்தாள். அடுத்த கணம் 'ஐயையோ' என்று அலறிக் கொண்டு அந்தத் தெப்பத்தில் சாய்ந்தாள்.

இந்தக் காட்சியைப் பார்த்த வீரசேனன் தன்னை மறந்தான்! உடனே அந்த ஏரியில் குதித்து நீந்திச் சென்று அந்தப் இளம் பெண்ணைக் காப்பாற்றத் தீர்மானித்தான். திடீரென்று ஏரியில் குதிக்க முயன்றான்.

"வீரசேனா! என்ன காரியம் செய்யத் துணிந்தாய். ஏரியில் குதித்து விடாதே. நீ பார்த்த அந்தக் காட்சி அத்தனையும் உன்னை மயக்கி இந்த ஏரியில் குதித்து நீ சாவதற்காகவே செய்திருக்கும் சூழ்ச்சிகள்





அந்தப் பெண்ணும் திமிங்கிலமும் உண்மையல்ல. வெறும் பொம்மைகள். இந்தப் பாலத்தின் நடுவில் அதற்கு வேண்டிய விசை இருக்கிறது. யாராவது இங்கு வந்து நின்றால் உடனே இதுபோல அந்தப் பொம்மைகள் நடித்துப் பார்ப்பவரை ஏமாற்றும்" என்றது அந்த உருவம்.

வீரசேனன் மிகுந்த ஆச்சரியத்துடன் அந்தக் காட்சியை மீண்டும் பார்த்தான். திமிங்கிலம் தெப்பத்தின் அருகில் வந்து வாயைப் பிளந்தபடி நின்று விட்டது. அந்தப் பெண்ணும் பேசாமல் படுத்திருந்தாள். வீரசேனன் அந்த விநோதக் காட்சியைப் பார்த்துக் கொண்டே சென்றான்.



ஏரியைக் கடந்து சென்றதும் எதிரில் ஒரு அழகான மாளிகை தென்பட்டது. அந்த மாளிகைக்குள் நிழல் உருவம் நுழைந்தது. வீரசேனனும் மாளிகைக்குள் சென்றான். அதற்குள் சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த சோபா, நாற்காலி, கட்டில் எல்லாம் இருந்தன. சுவரில் விதம் விதமான சித்திரங்கள் எழுதியிருந்தன. வீரசேனன் அந்த அழகிய சித்திரங்களைப் பார்த்துக் கொண்டே சென்றான். நாற்காலியின் மீது உட்கார்ந்து பார்த்தான். சோபாவில் சாய்ந்து பார்த்தான். கடைசியில் கட்டிலில் "அப்பாடா!" என்று காலை நீட்டிப் படுத்தான்.

அப்பொழுது எங்கிருந்தோ நல்ல சாப்பாட்டின் சுகமான வாசனை வந்து அவன் மூக்கைத் துளைத்தது. உடனே அவனுக்குப் பசி எடுக்க ஆரம்பித்து விட்டது. சட்டென்று எழுந்திருந்து விடுவிடென்று உள்ளே சென்றான். அங்கிருந்த மேஜைமீது ஒரு தட்டில் லட்டு, ஜாங்கிரி, ஜிலேபி முதலிய தித்திப்புப் பண்டங்கள் இருந்தன. இன்னொரு தட்டில் சாப்பாடு பரிமாறித் தயாராக வைத்திருந்தது. வேறொரு தட்டில் மாம்பழம், பலாப் பழம், வாழைப் பழம் முதலிய பழ வகைகள் குவித்து வைத்திருந்தன. அதைப் பார்த்த வீரசேனனுக்கு நாக்கில் ஜலம் ஊற ஆரம்பித்து விட்டது. அவசரம் அவசரமாக லட்டு தட்டு இருக்கும் மேஜைக்குச் சென்றான். ஆவலோடு ஒரு லட்டு உருண்டையை எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தான்.

"வீரசேனா! அதை வாயில் போட்டு விடாதே. இங்கு இருப்பவை எல்லாம் விஷம் நிறைந்தவை. இதைச் சாப்பிட்டால் நீ சாகவேண்டியதுதான்!" என்று கூறியது அந்த உருவம்.

வீரசேனன் கையிலிருந்த லட்டு உருண்டையைத் தட்டில் போட்டு விட்டு எழுந்தான். அந்த உருவம் "என் பின்னால் வா" என்று அதிகாரத்துடன் சொல்லி முன்னால் நடந்தது. வீரசேனன் வாய் பேசாமல் அந்த

தப்பிப் பிழைத்தது!

அந்த ஆட்டுக் குட்டிக்கு நகர வாழ்க்கை வெறுத்துப் போய் விட்டது. ஒரு நாள் அது தன் இச்சைப்படி ஓடிக் காட்டுக்குள் புகுந்து விட்டது.



அங்கே ஆட்டுக்குட்டி ஒரு குருவியைச் சந்தித்து. "குருவி, உன் ஆகாரம் என்ன?" என்று கேட்டது.

"அதுவா? ஈ, புழு, பூச்சி, இன்னும் காட்டுத் தானியங்கள் எல்லாம் என் ஆகாரந்தான்!" என்றது குருவி.

உடனே ஆட்டுக் குட்டி அங்கிருந்து நகர்ந்தது. செடியும் கொடியும் அடர்ந்த புதர்களைக் கண்டதும் ஆட்டுக் குட்டிக்கு நாக்கில் ஜலம் ஊறியது. ஒரு புதருக்குள் புகுந்து ஒரு பசுங்கொடியில் வாய் வைத்தது. 'ஙொய்' என்ற சத்தத்துடன் ஏராளமான தேனீக்கள் பறந்து வந்து ஆட்டுக் குட்டியின் முகம் முழுவதும் கொட்ட ஆரம்பித்தன. ஆட்டுக் குட்டி பயந்து 'மே, மே' என்று அலறிக் கொண்டு அங்கிருந்து ஓடி விட்டது.

பிறகு ஆட்டுக் குட்டி வழியில் ஒரு பாம்பைச் சந்தித்தது. "பாம்பே, உன் ஆகாரம் எது?" என்று கேட்டது.

"குருவிகளும் அவைகளின் முட்டைகளும் தான் என் ஆகாரம்!" என்றது பாம்பு.

சிறிது தூரம் சென்றதும் ஆட்டுக் குட்டி ஓர் ஓநாயைப் பார்த்தது.

"ஓநாயே, ஓநாயே! உன் ஆகாரம் எது?" என்று கேட்டது ஆட்டுக் குட்டி.

ஓநாய்க்கு ஆனந்தம் தாங்கவில்லை.

"ஆட்டுக் குட்டியே, என் குகைக்கு வந்தாயானால் சொல்லுகிறேன்!" என்றது ஓநாய்.

அசட்டு ஆட்டுக்குட்டி ஓநாயைத் தொடர்ந்து சென்றது. குகையை அடைந்ததும் ஓநாய், "ஆட்டுக் குட்டியே, என் ஆகாரம் நீதான்!" என்று கூறி அதன்மேல் பாயத் தயாராக நின்றது.



இந்தச் சமயம் ஆட்டுக்குட்டி குகையைக் கவனமாகப் பார்த்தது. அங்கே எலும்பும் மாமிசமும் நிறைந்திருந்ததனால் ஏராளமாக ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. இதைக் கண்ட ஆடு, "இங்கேயும் தேனீக்கள் போய்! கொட்டிவிடும்! நான் மாட்டேன்!" என்று சொல்லித் தாவிக் குதித்துத் துள்ளி ஓடி மறைந்தது. ஓநாய் கைக்கு எட்டின ஆகாரம் போய் விட்டதே என்று வருந்தியது.

—விஜயம்

உருவத்தின் பின்னால் நடந்து சென்றான். வழியில் உள்ள எந்தப் பொருளையும் தொடக் கூடாது என்று அந்த உருவம் தடுத்து விட்டதால் வீரசேனன் தன்னுடைய ஆசைகளை எல்லாம் அடக்கிக் கொண்டு சென்றான்.

கொஞ்ச தூரம் சென்றதும் பாதை தடைப்பட்டது. வழி ஒன்றும் தெரியவில்லை. நிழல் உருவத்தையும் காணவில்லை. வீரசேனன் திரு திருவென்று விழித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது ஒரே ஒரு ஆள் மட்டும் போகும்படியான சிறிய சந்தில் அவனை அழைத்து வந்த நிழல் உருவம் புகுந்து சென்று கொண்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் வீரசேனனும் அந்த உருவத்தைத் தொடர்ந்து சந்துக்குள் புகுந்து சென்றான். சந்து ஒரே இருட்டாக இருந்தது. எதிரில் இருக்கும் பொருள்கள் ஒன்றும் தெரியவில்லை. தட்டுத் தடுமாறி நடந்து சென்றான்.

சிறிது தூரம்தான் சென்றிருப்பான். அங்கு கொஞ்சம் வெளிச்சம் தெரிந்தது. வெளிச்சம் வந்த திசையை நோக்கி வேகமாகச் சென்றான். தங்க நாணயங்களும், ரூபாய்களும் மலை போல குவிந்து கிடந்தன. வீரசேனனுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. "இதோ! ரூபாய், இதோ, பவுன்!" என்று கத்திக் கொண்டே அவைகளை அள்ளக் கைகளை நீட்டிக் கொண்டு ஓடினான். தங்க நாணயத்தில் வீரசேனன் கை வைத்ததுதான் தாமதம், ஒரு பயங்கர சர்ப்பம் 'புஸ்' என்று சீறிக் கொண்டு கிளம்பி வந்து அவனைக் கடித்து விட்டது. "ஐயோ! அம்மா! பாம்பு கடித்து விட்டதே!" என்று அலறிக்கொண்டே கீழே விழுந்தான் வீரசேனன். அவன் கண்கள் இருண்டன. எங்கேயோ கீழே கீழே போவது போலிருந்தது. (தொடரும்)

பாப்பா மலர்

எலிக்குஞ்சுகளின் யாத்திரை

சாமா



குமார் சின்னப் பையன். அவன் வீட்டில் எலிகள் உபத்திரவம் அதிகம். ஒருநாள் எலிப் பொறியில் சேர்ந்தாற் போல் ஐந்து எலிக்குஞ்சுகள் விழுந்திருந்தன. அவைகளைக் கொண்டுபோய்ப் பூனையிடம் விட்டுவிட்டு வரும்படி குமாரின் தகப்பனார் சொல்லிவிட்டார். குமாருக்கு மனசு பொறுக்கவில்லை. எலிப்பொறியை எடுத்துக் கொண்டுபோய்க் குளத்தங் கரையில் திறந்து விட்டு, "எலிக் குஞ்சுகளே, நீங்கள் எப்படியாவது பிழைத்துத் தப்பித்துக் கொள்ளுங்கள்!" என்று சொன்னான்.

பொறியிலிருந்து வெளிப்பட்ட எலிகள் ஓடி ஒரு அன்னப் பறவையின் அருகில் சென்றன. "நல்ல யோசனை ஒன்று எனக்கு வருகிறது. இதோ இந்த அன்னப் பறவையின் மேல் எல்லோரும் ஏறிக் கொள்ளுங்கள். அன்னம் நீந்தி அக்கரைக்குப் போகும். நாமும் போய்ச் சேர்ந்து விடலாம்" என்றது கூர்மையான புத்தியுள்ள ஒரு எலிக்குஞ்சு. உடனே எல்லா எலிக் குஞ்சுகளும் அன்னத்தின் மேல் ஏறி ஜம்மென்று உட்கார்ந்தன. அன்னமும் நீந்திப் போயிற்று.

எலிக்குஞ்சுகள் தங்கள் தண்ணீர் யாத்திரையை நினைத்துச் சந்தோஷத்தில் ஒன்றையொன்று கட்டிக் கொண்டன. கொஞ்ச தூரம்தான் போயிருக்கும். திடீரென்று அன்னம் ஒரு மீனைப் பிடிப்பதற்காகத் தண்ணீரில் மூழ்கியது. அவ்வளவுதான் எலிக் குஞ்சுகளெல்லாம் தண்ணீரில் பொத், பொத்தென்று விழுந்தன.

அப்பொழுது குமார் ஒரு பலகையைக் குறி வைத்து அவைகள் மூழ்கின இடத்திற்கு விட்டெறிந்தான். பலகை மிதந்தது. எலிக் குஞ்சுகள் பலகையில் ஏறி விட்டன. குமார் கைதட்டிக் குதித்தான்.

தண்ணீரில் மூழ்கிய அன்னம் வெளியே வந்து அந்தப் பலகையின் பக்கமாக நீந்தியது. ஒரு எலிக் குஞ்சுக்கு உடனே ஒரு யோசனை தோன்றியது. "நான் அன்னத்தின் வால் சிறகைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறேன். நீங்கள் எல்லோரும் என்னைப் பிடித்துக் கொள்ளுங்கள். அன்னம் நகரும்போது பலகையும் கூடவே நகரும். எல்லோரும் அக்கரைபோய்ச் சேர்ந்துவிடலாம்" என்றது. பிறகு எலிக்குஞ்சு அன்னத்தின் வால் சிறகைப் பிடித்துக் கொண்டது. அன்னம் நீந்தி அக்கரைப் பக்கமாகப் போயிற்று. எலிகளின் பலகையும் நகர்ந்தது.

குமார் திடீரென்று "சபாஷ்! இனிமேல் எலிக் குஞ்சுகளைப் பற்றிக் கவலை இல்லை!" என்று குதித்தான். குமாரைத் தேடிக்கொண்டு வந்த தகப்பனார், "என்னடா, எலிப் பொறியைத் தூக்கிக் கொண்டு வந்தவன் இங்கு வந்து நின்று கொண்டு, நீயே பேசிக்கொண்டு குதிக்கிறாயே! வீட்டுக்கு வா!" என்றார்.

குமாருக்குச் சுய நினைவு அப்பொழுது தான் வந்தது. அப்பாவோடு வீட்டுக்குச் சென்றான். அடுத்த நிமிஷம் அவன் கண்ட காட்சி அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டது. குளத்தங் கரையில் விட்ட எலிக் குஞ்சுகள் திரும்பி அவன் வீட்டிற்குள் வந்து சேர்ந்து விட்டன. குமாருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

எலிகளைப் பிடித்து எங்கு விட்டாலும் மீண்டும் அவைகள் தங்கள் இருப்பிடத்திற்கேதான் வந்து சேரும் என்ற விஷயம் குமாருக்குத் தெரியாமல் இருக்கலாம்!

ரேடியோ வளையல்

கி. ரங்கராஜன்

பத்து வருஷங்களுக்கு முன்பு நடந்த சம்பவம் அது. ரகுநாதன் அந்த வருஷம் தான் கும்பகோணத்துக்குத் தன் தகப்பனுடன் வந்தான். பெரிய தெருவில் ஒரு மாடி வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, அவனும் அவன் தகப்பனாரும் அதில் வசித்து வந்தார்கள். ரகுவுக்குத் தாயார் இறந்து பல வருஷங்களாகி விட்டன. சமையற்காரன் மட்டும்தான் அவர்கள் குடும்பத்தோடு ஒட்டிக் கொண்டு அனுசரணையாக இருந்து வந்தான்.

புதிய வீட்டுக்கு வந்து ஒரு வாரத்துக்குப் பிறகு ஒரு நாள் காலை மாடி வராந்தாவில் நின்று கொண்டு தெருவில் காணும் வேடிக்கைகளைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான் ரகு. எதிர் சிறகில், ஒரு வீட்டு வாசலில் ஒரு பெண் நின்று கொண்டு கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். கோலம் போட்டு முடித்த பிறகு தலையைச் சற்றுத் தூக்கி நிமிர்ந்து பார்த்தாள் அவள். ரகுவின் கண்களும் அவள் கண்களும் ஒரு தடவை சந்தித்தன. அந்தப் பார்வையில் ஒரு ஆட்டம் ஆடினான் அவன். ஆனால் அந்தப் பெண் அவனைக் கொஞ்சம்கூட லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. நிதானமாக உள்ளே போய் விட்டாள்.

இரண்டு நாட்கள் சென்றன. பிறகு விவரமாக விசாரித்ததில் அவள் பெயர் அலமு என்றும், அவள் தகப்பனாருக்குப் பள்ளிக்கூடத்தில் ஹிந்தி உபாத்தியாயர் வேலை என்றும், அவளும் அதே பள்ளிக்கூடத்தில் மாணவி என்பதும் அவளுக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை என்பதும் தெரிய வந்தன.

கணவன் :—நேற்று மாதர் மகா நாட்டுக்குப் போயிருந்தாயே? என்ன விசேஷம்?

மனைவி :—விசேஷம் ஒன்றும் காணோம்! ஒருத்தியாவது புது மோஸ்தரில் புடவை கட்டிக் கொண்டு வரவேண்டுமே! ஊஹூம், கிடையாது!



ரகுவுக்குச் சுமாராக ஹிந்தி வரும். ஆனால் பரீக்ஷை ஒன்றும் கொடுக்கவில்லை. தொடர்ந்து நன்றாகப் படித்தால், ஏதாவது பரீக்ஷைக்குக் கூடப் போகலாம் என்ற அபிப்பிராயத்தில், அந்த ஹிந்தி வாத்தியாரையே தனக்கு டியூஷன் வாத்தியாராக ஏற்பாடு செய்து கொண்டான்.

வாத்தியார் இருக்கும் சமயங்களிலும் இல்லாத சமயங்களிலும் அவரைத் தேடிக் கொண்டு ரகு, அவர் வீட்டுக்குப் போவதுண்டு. அலமுவுக்கும் ரகுவின் வீட்டுக்குப் போக ஏதாவது சாக்கு அகப்பட்டுக் கொண்டுதானிருக்கும். இப்படியாக அவர்கள் "இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்" என்ற அளவுக்கு வந்து விட்டார்கள்.

கடவுள் சிருஷ்டியிலே, இப்படிக்கூட ஒரு அழகு உண்டா என்று வியப்பான். அவள் கண்களிலே ஏதோ ஒரு புதுமை இருக்கிறதே, அது என்னவாயிருக்கும் என்று எண்ணுவான் ரகு.

"இவ்வளவு புத்திசாலியாக இருக்கிறாரே! 'நான், நீ' என்று எத்தனையோ பேர், பெண்ணைக் கொடுக்க வருவார்களே! ஏன் ஒருவருமே வரவில்லை? எல்லாம் எனக்காகத் தான் அவருக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை போலிருக்கிறது" என்று குமாரி அலமு நினைக்கலானாள்.

நெடுநாள் பழகினவர்கள் போல அவர்கள் இருவரும் மனம் கலந்து பழகினார்கள். மனம் விட்டுப் பேசினார்கள். அப்படி அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது, ஒரு நாள் ஒரு சந்தர்ப்பத்தில், ரகு அவளிடம், அவளுடைய மெல்லிய கைகளுக்கு அப்போது புது மோஸ்தரான ரேடியோ வளையல் ஒரு ஜோடி தன் அன்புக் காணிக்கையாக வாங்கித் தருவதாகச் சொன்னான். நிற்க.

* * *

ரகுவுக்கு அழகிருந்தது; படிப்பு இருந்தது; பணம் மட்டும் அதிகமாக இல்லை. அலமுவின் தகப்பனாருக்கு அவர்கள் பழக்கம் பிடிக்கவில்லை. ஒருநாள் சாயங்காலம் ரகுவைக் கூப்பிட்டு அவர் "அப்பா! இன்றோடு எங்கள் வீட்டுக்கு வருவதை நீ நிறுத்திவிடு! இது நன்றாயில்லை. நாலுபேர் நாலுவிதமாகச் சொல்லுவார்கள்" என்றார்.

ரகுவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. பேசாமல் வீட்டுக்குப் போய்விட்டான்.

அலமுவின் வீட்டுக்குப் போவது அத்துடன் நின்ற போதிலும் மேன் மாடியிலிருந்து அந்த வடிவழகியைப் பார்த்துக் களிக்கும் நல்ல வழக்கத்தை மட்டும் அவன் நிறுத்தவில்லை. ஆனால் பிரயோஜனம்? அலமுவின் தகப்பனார், அவளுக்கு வேறொரு பசையுள்ள நல்ல பையனைத் தேடிப் பிடித்தார். லக்ஷத்துக்கு மேற்பட்ட சொத்துக்கு அதிகாரியும், ஒரே பிள்ளையுமான கல்யாண சுந்தரத்துக்கு அவளை மணம் முடித்து விட்டார். கல்யாணம் ஆன மறுவாரமே, அவளும் அவனும் தனிக்குடித்தனம் செய்ய எந்த ஊருக்கோ போய் விட்டார்கள்.

கல்யாண சுந்தரம் நல்ல அழகன். அவனிடம் தன் ஆசை அத்தனையும் கொட்டியிருந்தாள் அலமு. ரகுவினுடைய முகம் மெல்ல மெல்ல அவள் மனத்திரையினின்று விலகியது.

ஆனால் ரகுவுக்கு மட்டும் அளவு கடந்த மனவருத்தம். தன்னுடைய முதற் காதல் அவ்வளவு சீக்கிரம் வீணாகி விட்டதை நினைத்துப் பார்த்தபோது, அவன் நெஞ்சு வெடித்து விடும்போலிருந்தது. 'பெண்களையே நம்பக்கூடாது. கடைசி வரைக்கும் நம்பவைத்துச் சமயத்தில் கழுத்தை அறுத்து விடுவார்கள்' என்றெல்லாம் அவளை வைது தீர்த்தான்.

நாட்கள் சென்றன. பெண்களிடம் அவன் கொண்டிருந்த வெறுப்பு சிறிது சிறிதாக மாறத் தொடங்கியது. அதற்கு, சௌமியா ஓரளவு காரணம் என்றால் அது சிறிதும் மிகையாகாது.

சௌமியாவுக்கும், ரகுவுக்கும் காதல் ஏற்பட்டுப் பிறகு விவாகம் ஆகவில்லை. முதலில் கல்யாணம் பிறகுதான் காதல். பெங்களூரில் அவள் அப்பா ஒரு பெரிய மில் வைத்திருந்தார். சௌமியா அவருக்கு ஒரே பெண். ரகுவின் அதிர்ஷ்டம் சௌமியாவும், மாமனார் மில்லில் ஒரு உதவி மானேஜர் பதவியும் கிடைத்தன. சௌமியா நல்ல அழகி. அவளுடைய அபரிமிதமான அழகுக்கு ரகு அடிமையானான். ஆரம்பத்தில் அவனுக்கு ஆபீஸில் வேலையே ஓடவில்லை. சதா அவள் நினைவுதான். சௌமியா இந்தக் காலத்துப் பெண். செல்வமாக வளர்ந்தவள். ... நவநாகரிகத்தைப் பின்பற்றுபவள். சொல்லப்போனால் நாகரிகம் என்பது என்ன என்பதைப் பிறருக்குப் பாடம் சொல்லக்கூடிய திறமை அவளுக்கு உண்டு. நாழிக்கு ஒரு உடை உடுத்துவாள். கடைத் தெருவில், புது மோஸ்தரில் சேலையோ, வளையோ வந்தால், அது நிச்சயம் அம்மாளின் உடலில் இடம் பெறும். அவன் சம்பாதிக்கும் பணம், அவள் செலவுக்குக் கண்டு மிஞ்சாது. அவள் கொஞ்சிக் கொஞ்சி, முகத்தைக் குலுக்கிப் பேசும்போது, ரகு சொக்கிப் போய்விடுவான்.





ஒருநாள் மாதர் சங்கம் 'மீட்டிங்' ஒன்றுக்குப் போய்விட்டு வெகு நாழிகை கழித்து சௌமியா வீட்டுக்கு வந்தாள்.

கூடத்தில் அவள் கணவன் ரகு, அலுப்பு சலிப்புடன், சாய்மான நாற்காலியில் சாய்ந்த வண்ணம் எதையோ மனத்தில் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

"நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்? வெகு நாழிகை யாயிற்றோ? இதோ ஒரு நொடியில் வருகிறேன்" என்று உள்ளே போய் ஐந்து நிமிஷத்தில் அவனுக்குக் காப்பி தயாரித்துக் கொண்டுவந்தாள். காப்பியை வாங்கி அருந்தினான் ரகு.

"என் கையை நீங்கள் கவனிக்கவில்லையே?" என்றாள் சௌமியா.

"கவனிக்காமல் என்ன! ரோஜாபுஷ்பம் மாதிரி இருக்கிறது. உன் கையால் போட்ட இந்தக் காப்பி எப்படி இருக்கும்? தேவாமிருதம்தான்!"

"இந்தப் பரிகாசம் தான் வேண்டாம் என்கிறேனே! எனக்குப் புதிதாக ஒரு தோழி கிடைத்திருக்கிறாள். ஏதோ பேர் சொன்னாள், நெஞ்சில் இருக்கிறது வாயில் வரமாட்டேன் என்கிறது. இருக்கட்டும், நாளை தெரிந்து சொல்லுகிறேன். அவள் புக்ககத்தில் அவளுக்கு ஏதோ வளையல் போட்டார்களாம். அந்த வளையல் அவளுக்கு பிடிக்க வில்லையாம் என் வளையல்களில் இரண்டை வாங்கிக் கொண்டு, தன் கையிலுள்ளதை எனக்குப் போட்டு விட்டாள் எடைகூட அதிகமாக இருக்கும்போலிருக்கிறது. இந்த வளையல் நன்றாக இல்லை?" என்று தன் கைகளில் உள்ள வளையல்களில் ஒன்றைக் காட்டினாள்.

"இதற்கு என்ன பேர்?"

"ரேடியோ வளையலாம்."

ரகு அதைக் கூர்ந்து கவனித்தான். "ரேடியோ வளையல் என்று சொன்னாள்? எதற்காக அது பிடிக்கவில்லை அவளுக்கு? நன்றாய் இருக்கிறதே இது!" என்றான்.

"என்னமோ காரணம் சொன்னாள். நீங்கள் கேட்டால் சிரிப்பீர்கள்."

"என்னதான் சொன்னாள், சொல்லேன். அடே அப்பா! என்ன பிகுக்காரம்!" என்றான்.

"நாலைந்து வருஷங்களுக்கு முன் அவளுக்கும் வேறொருவருக்கும் பள்ளிக்கூடத்துப் பழக்கம் உண்டாம், அந்தப் பழக்கத்தினால் ஏற்பட்ட தன் காதல் நினைவாக ஒரு ரேடியோ வளையல் வாங்கித் தருவதாக அவர் சொல்லி யிருந்தாராம். அதற்குள் அவளுக்கு வேறு இடத்தில் விவாகமாகி விடவே, அவன் அன்புப் பரிசு அவளுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் கல்யாணத்தின் போது புக்ககத்தார் அவளுக்கு அதே ரேடியோ வளையலைப் பண்ணிப் போட்டு விட்டார்களாம்.

"அந்த வளையலைப் பார்க்கும் போதெல்லாம் அவர் நினைவு வருகிறதாம். தான் வேறொருவரின் மனைவியான பின்பு, முன்னவனைப் பற்றி நினைப்பது அவளுக்கு அருவருப்பாக இருக்கிறதாம். அதனால்தான் என்னிடம் கொடுத்து விட்டாள். எது எப்படி ஆனாலும் இந்த வளையல் ரொம்ப நன்றாக இருக்கிறது. நான் இதைப் போட்டுக் கொண்டு விட்டேன்" என்று சொல்லி முடித்தாள்.

"அவள் பேர் என்ன என்று சொன்னாய்?"

"அதுதான் ஞாபகம் இல்லை என்றேனே?"

"பேர் தெரியாது, ஊர் தெரியாது, வளையலை மட்டும் வாங்கி வந்து விட்டாளாம்! அவள் பேர் அலமு என்று சொன்னதாக உனக்கு ஞாபகம் வருகிறதோ?"

"ஆமாம், ஆமாம். அலமுவேதான் அவள் பேர். அவளை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள் சௌமியா. அவள் நெஞ்சு படபடத்தது.

"அவளை எனக்குத் தெரியும்" என்று கூறிவிட்டு அந்தச் சாய்மான நாற்காலியை விட்டு எழுந்து வெளியே போனான் ரகு.

விருதுநகர் ஹிந்து நாடார்கள்

செந்திக்குமார நாடார் காலேஜ் கட்டிட நிதிக்காக

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி



உதவும் சங்கீதக் கச்சேரி

○●○

ஸ்ரீ ஆர். கே. வெங்கட்ராம சாஸ்திரி ... வயலின்

கல்பாத்தி ஸ்ரீ ராமநாதன் ... மிருதங்கம்

ஆலங்குடி ஸ்ரீ ராமசந்திரன் ... கடம்

○●○

20 - 5 - 1951 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு விருதுநகர் க்ஷத்திரியப் பெண் பாடசாலையில் அமைக்கப்பட்டிருக்கும் விஸ்தாரமான பந்தலில் நடைபெறும்


டிக்கட்டுகள் : ரூ. 250/-, 100/-, 50/-, 25/- & ரூ. 10/-

வே. வ. இராமசாமி,
கரஸ்பாண்டெண்ட் & காரியதரிசி

குறிப்பு : 13-4-51ல் நடைபெற இருந்த மேற்படி கச்சேரி 20 - 5 - 51 அன்று நடைபெறுகிறது.

ப்ரூக் லாக்ஸ்

சாக்லெட்மலமிளக்கி



உட்கொள்ள சுலபமானது. உடம்புக்கு உபத்திரவமில்லாமல் வேலை செய்கிறது. ப்ரூக்லாக்ஸ் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் தீங்கற்றது.

மென்மையானது ஆனால் வேலையில் துரிதமானது. 2, 8, 24 பில்லைகள் கொண்ட வாட்டமான டின்கள். பெரிய டின் வாங்குவது மிகவும் சிக்கனமானது

ஒரே இரவில் மலச் சிக்கலை அறவே அகற்றுகிறது.

WL-1-A

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜண்டுகள் :

மெஸர்ஸ் ஓரியண்டல் மெர்கண்டைல் ஏஜன்ஸீஸ் 99-A, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்-1



ஆத்ம திருப்தி

அசூடியம்

'இது தான் உன் பகவானு? இதில் என்ன இருக்கிறது? இந்தக் கல் சிலைக்கு ஆத்ம சக்தி ஏது? கலைக் கண்ணோடு நோக்கும் பொழுது இதில் கைதேர்ந்த சிற்பியின் கைத்திறன் தெரிகிறது. ஆனால் இதில் பூஜைக்கு உகந்த சக்தி என்ன இருக்கிறது என்பது தான் எனக்குப் புரியவில்லை!' என்று கேட்டுத் தன் மன்னியை மடக்க வேண்டும் என்று அவன் மனத்தில் தீர்மானித்துக் கொண்டான்.

அன்று வெள்ளிக் கிழமை. கோவிலுக்கு ஜனங்கள் கையில் பூத்தட்டுடன் சாரி சாரியாகப் போய்க் கொண்டிருந்தனர். வனஜாவுக்கு இதெல்லாம் வேடிக்கையாக இருந்தது. 'என்ன ஜனங்கள்! என்ன குருட்டு நம்பிக்கை!' என்று மனத்துள் முணுமுணுத்துக் கொண்டான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அவனுடைய மன்னி கிரிஜா கையில் தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, புஷ்பம் முதலியவற்றை எடுத்துக் கொண்டு அர்ச்சனை செய்து வருவதற்காகக் கோவிலுக்குப் புறப்பட்டாள். அதைப் பார்த்த வனஜாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'எத்தனையோ படித்த மன்னி கிரிஜாவும் கூட அல்லவா குருட்டு நம்பிக்கையுடன் கோவிலுக்குப் போகிறாள்?' என்று எண்ணினான்.

சிறிது நேரத்துக் கெல்லாம் வனஜா என்ன எண்ணிக் கொண்டானோ, தெரியாது! அழகாக ஆடை அலங்காரம் செய்து கொண்டு கோவிலுக்குப் புறப்பட்டான். கோவிலுக்குப் போய்த் தன் மன்னிக்கு முட்டாள் பட்டம் கட்டிவிட வேண்டும் என்றும் கங்கணம் கட்டிக் கொண்டான்.

ஆனால்......

கோவிலின் கோபுரவாசலுக்குள் நுழையும் பொழுதே அவனுடைய அந்த எண்ணங்கள் எல்லாம் எங்கோ மாயமாய் மறைந்து விட்டன. அனாயாசமாக நிரந்தர சுகத்தைத் தரும் சக்தி ஒன்று அவனுடைய உள்ளத்தில் குடி புகுந்தது. ஒய்யாரமாக அன்ன நடை பயின்று வந்த அவனுடைய கால்கள் தன் சஞ்சல சுபாவத்தை உதறித் தள்ளிவிட்டு சாந்தமும் கம்பீரமும் நிறைந்த போக்கைப் பின்பற்றின. அவனையறியாமலே கால்கள் அவனைக் கோவிலுக்குள் இழுத்துச் சென்றன. உல்லாசமும் அமைதியும் ஒருங்கே ஒளி வீசக் கையில் அர்ச்சனைச் சாமான்கள் ஏந்திச் செல்லும் எண்ணற்ற ஆண் பெண்களை அவன் கண்டான். பக்தர்களின் வாயிலிருந்து வெளிவரும் பக்திப் பரவசப் பாடல்களும் கோயில் கண்டாமணியின் இனிய நாதமும் ஒன்று கூடி, யாருமே கண்டறியாத ஒருமை மனப்பான்மையையும் அமைதி வாய்ந்த சூழ்நிலையையும் உண்டு பண்ணியிருந்தன. முன்பின் அறிமுகமில்லாத ஒரு சக்தி தன் தனிக் கரங்களை

நீட்டிக் காரிருளிலிருந்து தேஜோ மயமான பிரகாசத்தின் பக்கம் தன்னை இழுத்துச் செல்வதுபோல வனஜாவுக்குத் தோன்றியது.

படிகளைத் தாண்டிக் கொண்டு வனஜா ராதாரமணன் கோவிலுக்குள் நுழைந்தாள். மனமோகன உருவம் படைத்த கிருஷ்ண விக்கிரஹத்தையும் ராதையின் விக்கிரஹத்தையும் கண்ட பொழுது பரிசுத்தமான அன்பு தான் இப்படி உருவெடுத்து வந்திருக்கிறதோ என்று எண்ணத் தோன்றியது. "வனஜா! நீ சாந்தியும் சுகமும் வேண்டும் என்று விரும்புகிறாய். சுகபோகங்களும் இன்பக் கேளிக்கைகளும் தான் வாழ்க்கையின் பிரதானக் குறிக்கோள்கள் என்று எண்ணுகிறாய். ஆனால்..." என்று யாரோ சொல்லி வருவது போலத் தோன்றியது.

அவள் மறுபடியும் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு பார்த்தாள். கடமை, உணர்ச்சி இவற்றுக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் ஸ்ரீராமரும் சீதையும் கண்களெதிரே காட்சியளித்தனர். அவர்களது பாதார விந்தங்களிலே பக்தியும் உபாஸனையுமே உருவெடுத்த அனுமன் காட்சி அளித்தான். ஆகா, இந்தச் சிலைகளில்தான் என்ன பாவம்! என்ன பாவம்! அவை உயிர்ப் பிரதிமைகளாகவே அல்லவா தோற்றுகின்றன? உயிர்க்களையுடன் உரையாடும் இந்தச் சிலைகளைக் கற்சிலை என்று எப்படிச் சொல்வது? கண்களில் தான் என்ன காந்தி! கற்சிலைக்கு எப்படித்தான் ஜீவன் வந்ததோ? இதைப் பாராத கண்கள் என்ன கண்கள்?

இம்மாதிரியான சித்திர விசித்திரமான எண்ணக் குவியல்கள் அவள் உள்ளத்தில் குடி கொண்டன. தன்னை மறந்து சிந்தனையில் லயித்து விட்ட அவளுடைய கண்களிலிருந்து எப்பொழுது இரு துளிக் கண்ணீர் பெருகிக் கன்னத்தின் வழியே ஓடிக் காய்ந்தனவோ, தெரியாது! இவ்வாறு வனஜா தன்னை மறந்து நின்று கொண்டிருந்தபொழுது பின்னாலிருந்து அவள் தோள்களைப் பிடித்து உலுக்கி, "சீ, அசடு! எதற்காக அழுகிறாய்?" என்று கேட்டாள் கிரிஜா.

"மன்னி! நான் அழவில்லையே! ஆனந்தக் கண்ணீர் அல்லவா இது! இவ்வளவு நாட்களும் சத்தியம், சிவம், சுந்தரம், உண்மை, மங்களம்



அழகு என்னும் சொற்களைப் பிறர் சொல்லத் தான் கேட்டிருக்கிறேன். இன்றோ, அவற்றைப் பற்றிய உண்மை அநுபவமே என் உள்ளத்தில் எழுந்திருக்கிறது. அதனால் தான் இந்த ஆனந்த பாஷ்பம்!" என்றாள் வனஜா.

வனஜாவின் வாயிலிருந்து இம்மாதிரியான சொற்களைக் கேட்டதும் கிரிஜாவுக்கு வியப்பாயிருந்தது. தர்க்கத்தில் சளைக்காத வனஜாவா, தர்மத்தை அலட்சியமாக மதிக்கும் வனஜாவா இப்படிப் பேசுகிறாள்? கிரிஜா அவளை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தாள். வனஜாவினால் வாய் திறந்து அதிகமாகப் பேசமுடியவில்லை. கிரிஜாவின் பார்வையில் தோய்ந்திருந்த அர்த்தம் விளங்க அவளுக்கு அதிகநேரம்பிடிக்கவில்லை. தன் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகளைப் பற்றிச் சிந்தித்தாள். 'இதைத் தன் தோல்வி என்று ஒப்புக் கொண்டு விடுவதா? அல்லது திடீரென்று உண்டான உணர்ச்சி என்று உதறித் தள்ளி விடுவதா?' என்று அவளால் ஒரு தீர்மானத்துக்கு வர முடியவில்லை.

வனஜா வாய் திறக்காமல் நிற்பதைக் கண்ட கிரிஜா, "வனஜா, வா! இந்தப் புஷ்பத்தையும் மல்லிகைச் சரத்தையும் தெய்வத்துக்குச் சாற்றச் சொல்லுவோம். இது உன் பக்திக்கு அறிகுறியாக அந்தப் பகவானின் பாதார விந்தத்துக்குப் போய்ச் சேரட்டும். தெய்வத்தின் பாதாரவிந்தங்களில் அர்ப்பிக்கப்பட்ட நம் வாழ்க்கைமலர் நம்மைப் பாவம், புண்ணியம் இவற்றினின்றும் காப்பாற்றிக் கடமையின் கண்ணே செல்லத் தூண்டும். பச்சாத்தாபத்தினால் பெருகும் கண்ணீரைக் கொண்டு உள்ளத்தின் அழுக்கை அலம்பலாம். ஆனால் அத்துடன் நம் கடமை பூர்த்தியுற்று விடுவதில்லை. வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிஷமும் விலை மதிப்பற்றது. சாத்வீகமான கடமையின் பக்கம் நம்மைத் தூண்டக் கூடியது. வா, நம் கடன் பணி செய்து கிடப்பதாகவே இருக்க வேண்டும்" என்று சொன்னாள்.

வனஜா அப்பொழுதும் வாய் திறக்கவில்லை. அவளுடைய உள்ளத்து உணர்ச்சிகள் மௌனம் சாதித்தன. ஆனால் அவள் தன் அழகிய விழிகளால் ஒருமுறை தன் மன்னி கிரிஜாவைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் அவள் எதையோ

அறிந்து கொள்ள வேண்டும் என்ற அவா கொண்டிருப்பதாகத் தோன்றியது.

அவள் கையில் பூத்தட்டு ஏந்திக் கிருஷ்ணன் கோவிலுக்குள் சென்றாள். அவளுடைய கண்களில் நீர் முட்டியது; வரவரக் கண்ணீர் அதிகரிக்கவும் செய்தது. அதைக் கண்ட கிரிஜா தன் அன்பான கரங்களினால் அவள் தலையை வருடினாள்.

வனஜாவுக்கு ஏற்பட்டது என்னவோ தோல்விதான். இருந்தாலும் அவளுக்கு உள்ளூற ஆத்ம திருப்தி ஏற்பட்டிருந்தது. கிரிஜாவின் முகத்தில் ஒருவிதப் பெருமிதம் தாண்டவமாடியது. வழி தவறியவளுக்கு வழி காட்டினோம் என்ற பெருமிதம் யாருக்குமே ஏற்படுவது இயல்புதானே? கிரிஜாவின் முகத்தில் அப்பொழுது தோன்றியிருந்த மகிழ்ச்சியைப் போன்ற மகிழ்ச்சியை உலகத்தில் வேறு எங்குமே காண முடியாது.

இருவரும் கோவிலைப் பிரதக்ஷிணம் செய்து கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். "என் வனஜா! நான் சொன்னது உண்மைதானே?" என்று கேட்டாள் கிரிஜா.

"என்ன?"

— அப்பொழுதுதான் தூங்கி விழித்தவள் போல அக்கேள்வியைக் கேட்டாள் வனஜா.

"நம்பிக்கையும் அநுபூதியும் கற்சிலையில் கூட உயிர்ச் சக்தியை உண்டாக்கி விடுகின்றன என்று நான் ஒரு நாள் உன்னிடம் சொன்னேன். நீ என்ன இருந்தாலும் 'கற்சிலை கற்சிலைதான்' என்று சொல்லி என்னை ஏளனம் செய்தாயே, நினைவிருக்கிறதா? இன்று உன் கண்களில் கூட அந்தக் கற்சிலையைப் பார்த்து நீர் சுரந்து விட்டதே! அதே கற்சிலைக்கு நீ இன்று பக்தி சிரத்தையுடன் புஷ்பம் கூடச் சாற்றச் சொன்னாயே! ஏன்?" என்று கேட்டாள் கிரிஜா.

வனஜாவுக்கு ஏதோ ஒரு உணர்ச்சி உந்தித் தள்ளித் தன்னை அப்படிச் செய்யுமாறு தூண்டி விட்டது என்று தோன்றிற்று. ஏதோ ஒரு வெறியில் ஆழ்ந்து, தான் அந்த வேலைகளைச் செய்து விட்டதாகவே அவள் எண்ணினாள். இருந்தாலும் அவள், "பக்தியும் சிரத்தையும் கட்டாயம் தேவைதான். இருந்தாலும் கற்சிலை பக்திக்கு உகந்ததுதானா என்று யோசிக்க வேண்டும். அந்தக் கற்சிலையில் பகவானின் கற்பனை உருவம் எப்படிக் குடி புகுந்தது? உருவமற்ற பகவானை ஒரு கல்லுக்குள் ஆவாகனம் செய்து விடுவது என்பது கெட்டிக்காரத்தனம் ஆகுமா? அதுதான் எனக்குப் புரியவில்லை" என்றாள்.

"நீ எண்ணுவது தவறு, வனஜா! பகவானை ஒரு கற்சிலைக்குள் ஆவாகனம் செய்து விடுவதனால் அவர் ஒரு எல்லைக்குட்பட்டவராக ஒரு நாளும் ஆகிவிட மாட்டார். ஒரே பரம்பொருளான அவருக்குப் பல உருவச் சிலைகள் உண்டாக்கப் பட்டிருப்பதே அவர் எங்கும் நிறைந்தவர் என்பதற்குப் பிரமாணம். ஒருமைப்பட்ட உள்ளத்தைப் பெறுவதற்காக நமக்கு ஒரு ஆதாரம், ஒரு பிடிப்பு, ஒரு உதவி தேவையாக இருக்கிறது. அந்தக் குறையைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்காக மனிதனுடைய கற்பனை, அருவமான கடவுளுக்கு ஒரு உருவத்தை வழங்கியிருக்கிறது. மனத்தை ஒரு நிலையில் நிறுத்த ஒரு பிடிப்பைத் தேடிக் கொண்டிருக்கிறது. இது ஒரு தவறா?" என்றாள் கிரிஜா.

"அப்படியானால் மூர்த்தி பூஜையில்லாமல் பகவானைப் பெறுவது என்பது இயலாத காரியமா? ஆமாம், நாம் வேறு கோவில்களில் குடிகொண்டுள்ள பகவானைப் பக்தி செலுத்தக் கூடாதா?" என்று கேட்டாள் வனஜா.

"செலுத்தக் கூடாது என்று யார் சொன்னார்கள்? ஆனால் அதற்கு ஒரு கடுமையான நிச்சய புத்தியும் ஆத்ம சக்தியும் வேண்டும். அது சாதாரண மனிதனிடத்தில் காணக் கிடைப்பதில்லை. நமது அன்றாட வாழ்க்கை ஒரே ஓட்டமாக ஓடுகிறது. எத்தனையோ பொருள்கள் மனிதனுக்கு அத்தியாவசியத் தேவையாக இருக்கின்றன. ஆயினும், அவை கிடைப்பது குதிரைக் கொம்பாயிருக்கின்றன. அவை மனிதனுடைய சிந்தனைக்கே எட்டாத பொருள்களாகி விடுகின்றன." என்றாள் கிரிஜா. ஆனால்



கார் ஓட்டச் சொல்லிக் கொடுப்பவர்:— பார்த்தீர்களா? இது தான் 'கியர் ஷிப்டு'. கீழே இருப்பது 'பிரேக்' அதோ அங்கே...!

மற்றவர்:—ஸார், ஒவ்வொன்றாகச் சொல்லித் தந்தால் நல்லது. முதலில் காரை ஓட்டச் சொல்லிக் கொடுங்களேன்!

அடுத்த நிமிஷமே, "இதோ பார்!" என்று சொல்லிப் பக்கத்திலிருந்த ஒரு மேஜையைக் காண்பித்தான். "இது ஒரு சாதாரண மேஜை தானே? இம்மாதிரி எத்தனையோ மேஜைகள் கிடைக்கக் கூடும். அப்படியிருந்தும் இந்த மேஜையின் மீது உனக்கு ஒரு தனிப் பற்றுதல் ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? உன்னால் சொல்ல முடியுமா?" என்று கேட்டான்.

"இதை என் அம்மா எனக்குக் கொடுத்தாள். இது எனக்கு அவளுடைய ஞாபகார்த்தமாக இருக்கிறது. இது அவள் என்னிடம் காட்டி வந்த அன்புக்கும் ஓர் அடையாளம் ஆகும் அல்லவா?" என்றாள் வனஜா.

"இந்த மேஜையின் மூலம் உனக்கு எப்படிப் பழைய நினைவுகளும் அன்பின் அநுபவமும் ஏற்படுகின்றனவோ, அதேபோலக் கோவில்களைப் பார்த்த மாத்திரத்திலேயே அந்தப் பரப் பிரும்மத்தின் நினைவும் அநுபவமும் உணர்ச்சி பெற்றெழுந்து நம் கண்களுக் கெதிரே நிற்கின்றன. வாழ்க்கையில் மற்றச் சமயங்களில் அவை நம் மனத்துக்குள் மறைந்து நிற்கின்றன."

"அது சரி, அதற்கு வீடு போதுமே! ஞாபகம் உண்டாவதற்கு ஒரு இடம்தானே முக்கியம்? அதற்கு எந்த இடமாயிருந்தால் என்ன?"

"நீ சொல்லுவது நியாயமான வார்த்தைதான். ஆனால் மனத்தைப் பரிசுத்தமாக வைத்துக் கொள்ளுவதற்கு அமைதியான ஒரு இடம் தேவை. கோலாகலம் நிறைந்த உலகத்தில் மனிதனின் மனம் ஒருமைப்பட முடியாது. ஒருமைப் பட்ட மனம் ஏற்படாமல் சாத்விக பாவனைகள் எழுவது

ஏழரை ரூபாய்...

மாதம் ஏழரை ரூபாய்ச் சம்பளத்தில் குமாஸ்தாவாக வேலை பார்த்த ஒருவர் சற்றேறக் குறைய ஏழாயிரம் ரூபாய் சம்பளத்தில் கவர்னராக வருவதென்றால், அவர் எவ்வளவு அதிர்ஷ்டசாலியாக இருக்க வேண்டும்! இப்போது தாற்காலிகமாக ஒரிஸ்ஸா கவர்னராய் நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ வி. பி. மேனன்தான் அந்த அதிர்ஷ்டசாலி. ஒரிஸ்ஸா கவர்னராக இருந்த ஸ்ரீ ஆஸப் அலி மூன்று மாதம் ரஜா எடுத்துக் கொண்டு ஐரோப்பாவுக்குச் செல்லுகிறார். அந்த ஸ்தானத்தில் இந்திய சர்க்கார் சமஸ்தான மந்திரியின் காரியதரிசியாக இருந்த ஸ்ரீ வி. பி. மேனன் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஸ்ரீ வி. பி. மேனன் அதிர்ஷ்டசாலி மாத்திரமல்ல, சாமர்த்தியசாலியும் கூட. இல்லாவிட்டால் சர்தார் பட்டேல் அவரைத் தம்முடைய காரியதரிசியாகத் தேர்ந்தெடுத்திருப்பாரா! ஸ்ரீ மேனன் இந்திய சர்க்கார் காரியாலயத்தில் பல வருஷங்களாக உத்தியோகம் வகித்தவர். கவர்னர் ஜெனரல்கள் உள்பட பல பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளின் யுக்திகளிலும் குயுக்திகளிலும் ஊறித் திளைத்தவர். அதனாலேயே சமஸ்தானங்களை இந்தியாவுடன் ஐக்கியப்படுத்தும் மகத்தான கைங்கரியத்தில் அவர் சர்தார் பட்டேலுக்கு வலது கையாக விளங்க முடிந்தது. ஐ. ஸி. எஸ். காரர்களின் கோட்டையாக இருந்த புது டில்லியிலே ஸ்ரீ வி. பி. மேனன் ஒருவர்தான் கல்லூரிப் பட்டமோ ஐ. ஸி. எஸ். பட்டமோ இல்லாமல் பதவி ஏணியின் சிகரத்தை எட்டிப் பிடித்தவர்!


வி. பி. மேனன்

இரண்டாவது பிரம்மா!

காஷ்மீரின் தலைவிதியை நிர்ணயிப்பதற்காக சர்வஜன வாக்கு எடுத்து அரசியல் நிர்ணய சபையை அமைக்கப் போவதாய்க் காஷ்மீர் யுவராஜா பிரகடனம் விடுத்துள்ளார். ஆனால் அதே சமயத்தில் ஐக்கிய நாடுகள் சபை டாக்டர் பிராங்க் பி. கிரகாம் என்பவரைக் காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்கும் மத்தியஸ்தராக நியமித்திருக்கிறது. ஏற்கெனவே அந்தச் சபை நியமித்த சர். ஓவன் டிக்ஸன் காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்க முடியாமல் வெறும் கையுடன் திரும்பிச் சென்றது எல்லோரும் அறிந்த கதை. காஷ்மீரில் உள்ள நாற்பது லட்சம் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்க அந்தச் சபை அனுப்பிய முதலாவது பிரம்மாவினால் முடியவில்லை. அதே கைங்கரியத்தை மேற்கொண்டு இப்போது இரண்டாவது பிரம்மா, டாக்டர் கிரகாம் காஷ்மீருக்கு வரப் போகிறார். இவ்விதம் காஷ்மீர் பிரச்னையை மேற்படி சபை தீர்க்க முற்பட்டிருப்பதன் விளைவாக மற்றொரு பெரிய பிரச்னை முளைத்திருக்கிறது. அந்தப் பிரச்னை இதுதான்: காஷ்மீரின் தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமை யாருக்கு உண்டு! காஷ்மீர் மக்களுக்கா அல்லது ஐ. நா. சபை நியமிக்கும் பிரம்மாவுக்கா!


டாக்டர் கிரகாம்



நண்பர் :— என்ன ஸார், நானும் ஒரு வாரமாகப் பார்க்கிறேன். ஓயாமல் அங்கேயும் இங்கேயும் ஓடி ஆடிக் கொண்டிருக்கிறீர்களே! என்ன சமாசாரம்?

மற்றவர் :— அதுவா? ஒரு 'டான்ஸ்' கச்சேரிக்கு ஏற்பாடு பண்ணிக் கொண்டிருக்கிறேன்!

சிரமம். மனம் ஒருமைப்படாமல் அடிக்கடி சிதறித்திரிய ஆரம்பித்து விடும்.

"ஆமாம், அதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். முகம்மதியர்களும் கிறிஸ்தவர்களும் மூர்த்தி பூஜை செய்வதில்லையே! அப்படியானால் அவர்களுடைய உபாசனை அரை குறையானதுதானா?"

"ஆனால் அவர்களுக்கும் ஒரு ஆதாரம் இருக்கிறது. கிறிஸ்துவர்கள் ஏசுநாதரின் சிலுவையையும் பைபிளையும் ஆதாரமாகக் கருதுகிறார்கள். முகம்மதியர்களோ?— அவர்களுக்குக் கண்ணில் படும்படியான ஒரு ஆதாரமும் இல்லை என்பது என்னவோ உண்மைதான். ஆனால் அவர்கள் காதுகளைக் கைவிரல்களால் அடைத்துக் கொண்டு, 'அல்லாஹோ அக்பர்' என்ற த்வனியினால் தங்கள் மனத்தை ஒருமைப் படுத்த முயற்சிக்கிறார்கள். ஆனால் நம் ஹிந்து கலாசாரம் மிகவும் பழமையானதால்—விஸ்தாரமானதால் தன் ஆராதனைக்கு ஒரு உருவம் கொடுத்துச் சாந்தியுற்ற மனத்துடன் ஆராதனையில் ஈடுபடுகிறது."

"என்னதான் சொன்னாலும் மூர்த்தி பூஜையின் விஷயம் எனக்குத் தெளிவாக விளங்கவில்லை."

"இதில் தெளிவாக விளங்குவதற்கு என்ன இருக்கிறது? மனத்தில் உள்ள பக்தியும் பாவனையும் சிரத்தையும் மூர்த்தி பூஜையின் உருவத்தைத் தரித்துக் கொள்ளுகின்றன. காந்திஜியை எடுத்துக் கொள்ளேன். அவர் மகா புருஷர். மாந்தருக்குள் ஒரு தெய்வம். தம் காலத்தில் ஒரு யுகத்தையே நிர்மாணித்தவர். சத்தியமும் அஹிம்சையுமே உருவானவர். இந்த எண்ணம் மட்டுமே அவரை நினைவில் இருத்திக் கொள்ளப் போதுமானதல்லவா? ஆனால் நாம் அவருடைய படத்துக்கு மாலை சூட்டுகிறோம். அவருடைய சமாதிக்குப் புஷ்பம் போடுகிறோம். அவருக்கு ஞாபகச் சின்னம் எழுப்புகிறோம். வரப்போகும் தலைமுறைகள் அவருக்குக் கோவிலே கட்டிப் பூஜித்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஆகவே, நமக்குத் தெரிவது என்ன? மூர்த்தி பூஜை தான் அவரிடமுள்ள பக்தியையும் சிரத்தையையும் நாம் காட்டுவதற்குச் சிறந்த சாதனம் என்று ஆகிறது."

"ஆமாம், அது சரி. கிருஷ்ணன், ராமன் போன்றவர்களைக் காந்தியைப் போன்ற மகா புருஷர்களும் ஆராதித்தார்களே! தெரியாமலா ஆராதித்திருப்பார்கள்? இந்த மேல் நாட்டுப் படிப்பு நம் கலாசாரத்தை மாத்திரம் தவிடு பொடியாக்கவில்லை. நம் தர்ம உணர்ச்சியையும் பிடுங்கிக் களைந்து எறிந்து நம்மை முழு நாஸ்திகர்களாக்கி விட்டது. இல்லாவிட்டால் நாம்..."

"வனஜா! மேல் நாட்டுப் படிப்பை மட்டும் குறைகூறிப் பலனில்லை. நாமும் நம்முடைய தர்மத்தைப்பற்றிப் புரிந்து கொள்ள முயற்சித்ததில்லை. அதை அலட்சியம் செய்கிறோம். நாம் நாஸ்திகர்களாவதற்கு அதையும் ஒரு முக்கிய காரணமாகச் சொல்ல வேண்டும்" என்றாள் கிரிஜா.

"உண்மைதான், மன்னி. இன்று தான் நான் முதல் தடவையாக உன்னுடன் கோவிலுக்கு வந்தேன். இவ்வளவு நாட்களும் நான் கோவிலுக்குப் போய்ப் பொழுதை வீணாக்குவது தான் மிச்சம் என்று கூட எண்ணியதுண்டு. அதைவிடச் சினிமாவுக்குப் போவது எவ்வளவோ மேலானது. கல்வியறிவு வளரும் என்று கூட நினைத்தது உண்டு. ஆனால் மன்னி, உண்மையைக் கேட்டால் இன்று கோவிலில் கிடைத்த சாந்தியும் சுகமும் இன்பமும் ஆனந்தமும் இன்றுவரை எனக்கு எந்தக் கேளிக்கையிலும் கிடைத்ததில்லை. இப்படிப் பட்ட சுகம் இருக்கிறது என்று கூட நான் கனவு கண்டதில்லை. மன்னி, நீதான் எனக்குத் தர்மகுரு. உன் தர்ம காரியங்களில் என்னையும் பங்கு எடுத்துக் கொள்ள அனுமதிப்பாயா?" என்று கேட்டவாறே வனஜா மன்னியின் மடியில் தலையைச் சாய்த்தாள்.

மறு நாள் காலை வனஜாவின் அறையில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டிருந்தது. எங்கு பார்த்தாலும் ஸினிமா நட்சத்திரங்களின் புகைப் படங்களாகவே தொங்கிக் கொண்டிருக்கும் வனஜாவின் அறையில் ராதாமணனலும், ராமனும் அழகாகப் 'பிரேம்' செய்து மாட்டப்பட்டிருந்தார்கள். எப்பொழுதும் ஸினிமா சங்கீதமாகவே காதைத் துளைத்துக் கொண்டிருந்த கிராமபோனுக்குத் தடை உத்தரவு போடப்பட்டிருந்தது. சுழன்று சுழன்று புகையை எழுப்பிக் கொண்டிருந்த ஊதுபத்தியின் வாசனை மிகவும் மனோரம்யமாகவும் சாத்வீக பாவத்தை உண்டு பண்ணக் கூடியதாகவும் இருந்தது. வாசற் புறத்தில் வனஜா ஒரு படம் மாட்டியிருந்தாள். அந்தப் படத்தில் அழகழகான எழுத்துக்களில் "அறம் வளரப் பொருள் உயரும். எண்ணிய மாத்திரத்திலே எண்ணங்கள் ஈடேறும்" என்று வனஜா தன் கைப்படவே எழுதியிருந்தாள்.

அந்த அறைக்குள்ளே உட்கார்ந்து வனஜா பாராயணம் செய்து கொண்டிருந்தாள்:

'சின்னப் புத்திக்காரர்கள் என்னைச் சிரேஷ்டன் என்றும் நாசமற்றவன் என்றும் தெரிந்து கொள்வதில்லை. மறை பொருளை மறையாப் பொருள் என்று எண்ணி விடுகிறார்கள். யோக மாயையினால் மறைக்கப் பட்டிருப்பதனால் யாரும் என்னைக் காண முடிவதில்லை. மோகத்தில் உழலும் மக்கள் நான் பிறப்பு - இறப்பு அற்றவன், அழியாதவன் என்பதையும் உணர்வதில்லை.'

இதைக் கேட்டுக் கொண்டிருந்த கிரிஜா மெதுவாகத் திரும்பினான். அவனுடைய கண்களில் ஆனந்தக் கண்ணீர் முத்துப் போலக் கோர்த்து நின்றது.

வனஜாவின் வாழ்க்கையில் வியப்பை அளிக்கும் மாறுதல் ஏற்பட்டுவிட்டது. அவள் வாழ்க்கையில் எளிமையும் சாத்வீக பாவமும் தாண்டவமாடின. முகத்தில் ஒரு இணையற்ற ஒளி வீசியது. காலையும் மாலையும் அவள் தன்னை மறந்து பாடுவாள்:

ரகுபதி ராகவ ராஜாராம்
பதித பாவன சீதாராம்
சப்கோ சன்மதி தே பகவான்
ரகுபதி ராகவ ராஜாராம்

இந்தப் பாட்டைக் கேட்போர்கள் அப்படியே அசைவற்று நின்று விடுகிறார்கள். அவர்களில் சிலர் வனஜாவை மீராவின் அவதாரம் என்றோ, ஆண்டாளின் அவதாரம் என்றோ, சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

மத்திய கேந்திரம்

ஜெயமணி

ஈராக் — 3

கடைசியாக பிரிட்டிஷாரின் தயவினால் ஈராக் தேசம் சர்வதேச சங்கத்தில் இடம் பெற்றது. அதுவும் ஒரு விதத்தில் நன்மையாகத்தான் முடிந்தது. அதன் பயனாக ஈராக்கின் கூக்குரல் மேற்படி சங்கத்துக்கு எட்டுவது சாத்தியமாயிற்று. இராணுவ சம்பந்தம் இல்லாத பொது ஜனங்களின் மீது வெடிகுண்டு வீசுவதையும் கிராமங்களை அழிப்பதையும் சங்க அங்கத்தினர்களில் பலர் கடுமையாகக் கண்டித்தார்கள். அவ்வாறு வெடிகுண்டுகளை வீசுவது காட்டுமிராண்டித்தனமான செய்கை என்று கூறினார்கள்.

எனவே, விமானங்களிலிருந்து வெடிகுண்டு வீசும் போர் முறையை அடியோடு ஒழித்து விடுவதற்கு அமெரிக்கா உள்பட எல்லா நாடுகளும் தயாராக இருந்தன. ஆனால் பிரிட்டிஷார் மாத்திரம் காலனிகளைக் "காப்பாற்றுவதற்காக" வெடிகுண்டு வீசும் போலீஸ் நடவடிக்கையைக் கைவிட முடியாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள். அதனால் அவ்விஷயமாகச் சர்வதேச சங்கத்தில் ஒப்பந்தம் எதுவும் ஏற்படாமல் போயிற்று. அப்போது மேற்படி விபந்தனைக்கு பிரிட்டன் மாத்திரம் இசைந்திருந்தால், விமானங்களிலிருந்து வெடி குண்டுகளை வீசும் கொடுமை ஒழிவதற்கு ஒரு வேளை வழிபிறந்தாலும் பிறந்திருக்கலாம். லட்சக்கணக்கான மக்கள் பலியாகாமல் தப்பியிருக்கலாம்.

ஈராக் தேசத்தின் பூரண சுயேச்சையைப் பிரிட்டிஷார் அங்கீகரித்ததாக ஏற்கெனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது அல்லவா? அதன் பின்னரும் பெய்ஸல் மன்னர் பிரிட்டனுக்குச் சாதகமாகவே இருந்து வந்தார். அவருக்குப் பிறகு அவரது குமாரர் காஜி 1933-ம் வருஷம் ஈராக் மன்னரானார். 1939-ம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு மோட்டார் விபத்திலே துரதிர்ஷ்டவசமாகக் காஜி மன்னர் மாண்டதால், அவருக்குப் பிறகு அவரது புதல்வரான இரண்டாம் பெய்ஸல் பட்டத்துக்கு வந்தார்.

இரண்டாம் பெய்ஸலுக்கு அப்போது வயது மூன்று தான். எனவே அவரது மாமன் ரீஜண்டாக இருந்து இன்றும் ஆட்சி புரிந்து வருகிறார்.

இரண்டாவது மகாயுத்தம் மூண்ட போது ஈராக் பிரிட்டனுடன் சிநேக பாவத்துடனேயே இருந்து வந்தது. மேற்படி கட்டைக் குலைக்க அப்போது சதி நடந்ததெனினும், அதன் சம்பந்தமாக நிகழ்ந்த போரில் பிரிட்டிஷாரே வெற்றி பெற்றனர். எனவே, மகா யுத்தத்தை நடத்த ஈராக்கிலிருந்து நேச நாடுகளுக்கு ஏராளமான எண்ணெய் கிடைத்தது.

அப்போது பிரிட்டிஷாருக்கு விரோதமாக ஈராக்கில் ஜெர்மன் ஒற்றர்கள் புரட்சி செய்தார்கள். ஆனால் அவர்களைப் பிரிட்டிஷார் ஈராக்கிலிருந்து விரட்டி விட்டார்கள். அதன்பின் ஈராக் நேச நாடுகளுக்கு உதவியாக ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் மீது யுத்தப் பிரகடனம் செய்து போரில் ஈடுபட்டது.

பாலஸ்தீனில் யூதர்களை எதிர்த்துப் போர் புரிவதற்காக ஈராக் மூன்று வருஷங்களுக்கு முன் அரபு நாடுகள் அடங்கிய சங்கத்தில் சேர்ந்து கொண்டது.



ஈராக் மக்கள் உபயோகிக்கும் 'படகு'

* * *

ஏற்கெனவே மெஸொபொடேமியா என்று வழங்கிவந்த பிரதேசமே இன்று ஈராக் என்று வழங்கப்படுகிறது. மெஸொபொடேமியா

என்ற வார்த்தைக்கு நதிகளின் மத்தியில் இருக்கும் பிரதேசம் என்று பொருள் கூறுகிறார்கள்.

அரபு பாஷையில் ஈராக் என்றால் இலாக்கா என்று அர்த்தம். ஏற்கெனவே அந்தப் பிரதேசம் துருக்கி சாம்ராஜ்யத்தின் ஒரு பாகமாக, இலாக்காவாக இருந்து வந்ததால் அது இப்போது ஈராக் என்று வழங்கப்படுகிறது.



யூப்ரேடீஸ் நதிக்கரையில் உள்ள ஈராக் கிராமம்

ஒரு லட்சத்து இருபதாயிரம் சதுர மைல் விஸ்தீரணம் உள்ள ஈராக் நாட்டுக்கு யூப்ரேடிஸ், டைக்ரீஸ் என்ற இரண்டு நதிகளும் ஜீவநாடிகளாக இருக்கின்றன. அந்த நதிகளை அடுத்துள்ள பிரதேசங்கள் மாத்திரம் மிகச் செழுமையாக இருப்பதால், அந்த நாட்டில் உள்ள முக்கிய பட்டணங்கள் மேற்படி நதிக் கரைகளை அடுத்தே நிர்மாணிக்கப் பட்டிருக்கின்றன.

1700 மைல் நீளம் உள்ள யூப்ரேடிஸ் நதியும் 1150 மைல் நீளம் உள்ள டைக்ரிஸ் நதியும் வட கோடியிலிருந்து தென் கோடி வரையில் ஈராக் நாட்டைச் சரி பாதியாகப் பிளந்து கொண்டு செல்லுகின்றன. பாரசீக வளைகுடாவிலிருந்து பாக்தாத் நகரம் வரையில் டைக்ரீஸ் நதியில் யந்திரப் படகுகள் செல்லுகின்றன. யூப்ரேடிஸ் நதி அதிக ஆழம் இராததால் அதில் சாதாரணமாகப் படகுகள் செல்ல முடிவதில்லை.

மேற்படி நதிகளுக்குப் பாலங்கள் இல்லாததால் பெரும்பாலான ஈராக்கியர்கள் படத்தில் காண்பதுபோல் மாட்டின் தோல்களில் காற்று அடித்து அவற்றைப் படகுகளாக உபயோகிக்கிறார்கள்.

• • •

ஈரானைப்போல் ஈராக்கும் எண்ணெய்ச் செல்வம் நிறைந்த நாடாகும். எண்ணெயை ஏற்றுமதி செய்வதற்குச் சுலபமாக அங்கிருந்து மத்தியதரைக் கடல் வரையில் ஆயிரத்து ஐந்நூறு மைல் தூரத்துக்குக் குழாய்களை அமைத்திருக்கிறார்கள். மேடும் பள்ளமும் அதிகமாக உள்ள பிரதேசங்களின் வழியாக எண்ணெயைக் கொண்டு செல்லுவது கஷ்டமாதலால், அவ்வாறு குழாய்களை அமைத்து எண்ணெய் ஏற்றுமதிப் பிரச்னையைச் சுலபமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். மேற்படி குழாய் நிர்மாணம் உலகத்திலேயே சிறந்த இஞ்ஜினீரிங் கலை என்று கூறப்படுகிறது.

ஈரானைப்போல் ஈராக்கிலும் எண்ணெய் எடுக்கும் உரிமை அன்னியர்களிடமே இருக்கிறது. எனவே, ஈரானில் எண்ணெய் எடுக்கும் உரிமையை ஈரான் சர்க்காரே எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது அல்லவா? அதுபோல ஈராக்கிலும் கிளர்ச்சி ஏற்படுவதற்கான அறிகுறிகள் இருந்து வருகின்றன.

கூர்திஸ்தானில் உள்ள மலைப் பிரதேசங்களைத் தவிர ஈரானிலே வேறெந்த இடத்திலும் மரங்களைக் காண்பது அரிது.

பேபிலோனியா சாம்ராஜ்யத்தின் செல்வாக்கு உச்ச நிலையில் இருந்த போது அந்த நாட்டிலே ஏராளமான கால்வாய்கள் இருந்தனவாம். ஆனால் பிற்காலத்திலே அந்த நாட்டின் மீது படையெடுத்தவர்கள் மேற்படி கால்வாய்களையெல்லாம் கண்மூடித்தனமாக அழித்து விட்டார்கள். இப்போது அந்த நாட்டில் கைக் கொள்ளப்பட்டுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் பண்டைய கால்வாய்களின் சிறப்புக்கு ஈடாகாது என்பதை நிபுணர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.

ஈராக்கில் பேரீச்சம் பழங்கள் அபரிமிதமாக உற்பத்தியாகின்றன. உலகத்திலே உற்பத்தியாகும் பேரீச்சம் பழங்களில் எண்பது சதவிகிதத்துக்கு மேல் ஈராக்கில் தான் உற்பத்தியாகின்றன. அதற்கு அடுத்தபடியாக அந்த நாட்டில் கோதுமையும் பார்லியும் ஏராளமாக விளைகின்றன.

இவற்றைத் தவிர, ஈராக் நதியோரப் பிரதேசங்களில் நெல்லும் மலைப்பிரதேசங்களில் புகையிலையும் உற்பத்தியாகின்றன.

ஈராக்கின் ஜனத் தொகை முப்பத்தைந்து லட்சத்துக்கு மேலாகும். பெரும்



ஈராக் ஒட்டகப் படை

பாலோரும் முஸ்லிம்கள் ஆவர். அவர்களைத் தவிர சுமார் ஒரு லட்சம் கிறிஸ்துவர்களும் ஒரு லட்சம் யூதர்களும் அந்த நாட்டில் இருக்கிறார்கள்,

நாகரிகம் வளர்ச்சி பெற்றுள்ள இந்தக் காலத்தில் கூடப் பெரும்பாலான ஈராக்கியர்களும் அவர்களுடைய மூதாதையர்களைப் போலவே வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். கூடாரங்களில் வசிப்பது, ஒட்டகங்களில் யாத்திரை செய்வது, கர்நாடகமான உடைகளை உடுத்திக் கொள்வது போன்ற வழக்கம் இன்னும் அவர்களிடையே அதிகமாக இருந்து வருகிறது.

கிராமங்கள் மாத்திரமல்ல, சில நகரங்கள் கூட நாகரிக வாழ்க்கையின் வாடையே இல்லாமல் இருக்கின்றன.

ஈராக்கில் உள்ள பெரும்பாலான நிலங்களும் ஒரு சிலருக்குச் சொந்தமாக இருக்கின்றன. எனவே பெரும்பாலான மக்கள் பரம ஏழைகளாக இருக்கிறார்கள்.

அதனால்தான் ஈராக் சுதந்திரம் பெற்றும் கூட மன்னரும் அவரைச் சேர்ந்த ஒரு சிறு குழுவினரும் தங்கள் இஷ்டப்படி அந்த நாட்டை ஆட்சி புரிகிறார்கள். அங்கு ஜனநாயகம் வளர்ச்சி பெறாததற்கும் அது தான் காரணம்.

பெரும்பாலான ஈராக்கியர்களுக்கும் விவசாயமே ஜீவனமாக இருந்துவருகிறது.

பிரயாணத்துக்கும் பண்டங்களின் போக்குவரத்துக்கும் ஈராக் நதிகள் மிகவும் வசதியாக இருக்கின்றன. ஈராக்கியர்கள் பாலை வனத்தில் போக்குவரவுக்கு ஒட்டகங்களை உபயோகிக்கிறார்கள். மற்ற இடங்களில் கழுதைகளை உபயோகிக்கிறார்கள்.

ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கும் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் செல்லும் விமானங்கள் ஈராக்கில் உள்ள முக்கிய பட்டணங்களான மோசூல், பாக்தாத், பஸ்ராவில் இறங்கி மறுபடியும் அங்கிருந்து புறப்படுகின்றன.

ஈராக் நாட்டின் தலைநகரான பாக்தாத்தில் ஐந்து லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள். பாக்தாத் சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரம் என்பதுடன், உலகப் பிரசித்தி பெற்ற அராபியக் கதைகள் பிறந்த இடமும் ஆகும்.

பாக்தாத்துக்கு அடுத்த படியாக உள்ள மோசூல் வட ஈராக்கில் இருக்கும் முக்கிய நகரமாகும். அதன் ஜனத்தொகை அறுபதினாயிரத்துக்கு மேல் இல்லை.

ஈராக்கில் எண்ணெய் கண்டு பிடிக்கப் பட்டதிலிருந்து மோசூல் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்ட பின்தான் மோசூலிலிருந்து தெற்கே பாக்தாத், பஸ்ராவுக்கும் வடக்கே துருக்கிக்கும் ஐரோப்பாவுக்கும் ரயில்பாதைகளை நிர்மாணித்தார்கள்.

அரை லட்சம் ஜனத்தொகை உள்ள பஸ்ரா நகரம் ஈராக்கின் பிரதானத்துறை முகமாக விளங்குகிறது. அந்த நகரம் பாரசீக வளைகுடாவிலிருந்து எழுபது மைல்களுக்கு வடக்கே நதிக்கரையில் இருக்கிறது. எனினும் சாதாரணமாக அது வரையில் கப்பல்கள் செல்ல முடியும்.



"டாக்டர் ஸார், போன வருஷம் எனக்கு டைபாய்டு ஜுரம் வந்தபோது ஜலத்தில் கைவைக்கக் கூடாது, குளிக்கக் கூடாது என்று சொன்னீர்களே, ஞாபகம் இருக்கிறதா?"

"ஆகா! ஞாபகம் இருக்கிறது. அதற்கு என்ன வந்தது இப்போது?"

"இனிமேல் குளிக்கலாமோ, இல்லையோ? கெடுதல் ஒன்றும் ஏற்பட்டு விடாதே!"



கற்பனையும் காரிகையும்

ரா.வீ

4

நான் டிரைவரைக் கூப்பிட்டு அங்கிருந்து வண்டியை ஓட்டிச் செல்லுமாறு உத்தர விட்டேன். பிறகு ஒரு மூலையில் மறைந்து நின்றேன். சிறிது நேரத்துக்கெல்லாம் அவள் கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்று விடுவாள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் நினைத்தபடியேதான் ஆயிற்று. பதினைந்து நிமிஷத்துக்கெல்லாம் கதவு திறந்தது. அவள் வெளியே வந்தாள். ஒரு முறை நாற்புறமும் சுற்றிப் பார்த்தாள். பிறகு கதவைச் சாத்திக் கொண்டு ஸ்டேஷன் பக்கம் சென்றாள். நானும் அவள் பின்னாலேயே சென்றேன். மாதவ ஆசிரமத்துக்கருகில் வந்ததும் அவள் நின்றாள். நாற்புறமும் மறுபடியும் ஒரு தடவை நன்றாகத் தன் கண்களை ஓட்டினாள். பிறகு உள்ளே போய் விட்டாள். அவள் பூனாவாசியில்லை என்பதும் அன்றுதான் அவள் பம்பாயிலிருந்து வந்திருக்க வேண்டும் என்பதும் எனக்குத் தெளிவாக விளங்கி விட்டது.

*

இரவு முழுவதும் எனக்குத் தூக்கம் வரவில்லை. வீடே வெறிச்சென்றிருப்பது போலத் தோன்றியது. கண்களை மூடினால் கனவுக் காட்சிகள் கண்களெதிரே காட்சி அளிக்கத் தொடங்கின. கடைசியில் எழுந்து இங்கும் அங்கும் உலாவலானேன். திடீரென்று ஒரு கதை எழுதினால் என்ன என்ற எண்ணம் என் மனத்திலே எழுந்தது.

இரவு முழுவதும் கண் விழித்து உட்கார்ந்து நான் ஒரு கதை எழுதி முடித்து விட்டேன். அந்தக் கதைக்குத் ‘திருடனின் காதல்’ என்று தலைப்பும் கொடுத்தேன். நான் எழுதிய கதையின் சாராம்சம் இதுதான் :—

“ஒரு திருடன் ஒரு அழகியைப் பண்ட் கார்டனில் சந்திக்கிறான். அந்த அழகி தன்னை ஒரு கதை எழுத்தாளனின் மனைவி என்று அறிமுகம் செய்து கொள்ளுகிறாள். கண்டதும் காதல் என்பார்களே. அப்படித் திருடன் அவளைக் காதலிக்கத் தொடங்குகிறான். ஆனால் அவள் கல்யாணம் ஆனவள் என்பதை அறிந்ததும் அவனுக்கு ஏமாற்றம் உண்டாகிறது. அதிர்ஷ்ட வசமாக அவனுக்கு அந்த அழகி பொய் சொல்கிறாள் என்பது தெரிந்து விடுகிறது. கதை எழுத்தாளனுக்கும் அந்த அழகி வெளியில் தன் மனைவி என்று சொல்லி நடிக்கிறாள் என்பது தெரிகிறது. ஆகவே, அவன் அவளைப் போய்ப் பார்க்கிறான். அதுமட்டும் அல்ல; அவளைக் காதலிக்கத் தொடங்குகிறான். திருடனுக்கு இந்தச் செய்தி தெரியவே, இருவருக்கும் பயங்கரச் சண்டை நடக்கிறது. கதை எழுத்தாளன் கொல்லப்படுகிறான். திருடன் அந்த அழகியை மணந்து கொள்ளுகிறான்.”

மறுநாள் மத்தியானத் தபாலில் பெண்ணின் கை யெழுத்தில் ஒரு கடிதம் வரவே, நான் ஆச்சரியம் உற்றேன். நான் அவசர அவசரமாக அதைப் பிரித்துப் படிக்கலானேன் :—

மாதவ ஆசிரமம், பூனா
3, செப்டம்பர் 1929

ஸ்ரீ பலவந்த தாம்லே,
28, புத்வார் பேட்டை, பூனா.

மதிப்புக்குரிய ஐயா,

நமஸ்காரம். தங்களுக்கு என்னைப்பற்றி ஒன்றும் தெரியவே தெரியாது. ஆனால் நான் உங்கள் பெயரை அல்லும் பகலும் அனவரதமும், கிளிப் பிள்ளையைப்போல் உருப்போட்டுப் ‘பொட்டை கெட்டுரு’ செய்திருக்கிறேன். இதுவரை நீங்கள் எழுதியுள்ள கதைகளை ஒன்றுகூட விடாமல் நான் படித்திருக்கிறேன். ஒரு தடவை இரண்டு தடவையல்ல; பல தடவைகள் படித்திருக்கிறேன். படிக்கப் படிக்க எனக்கு அவை தெவிட்டாதவைகளாகவே இருக்கின்றன. தாங்கள் ஏன் இன்னும் அதிகமாகக் கதைகள் எழுதக்கூடாது என்பது தான் என் கேள்வி. ஏனென்றால் நீங்கள் ஒரு வருஷ காலத்தில் எழுதும் கதைகளை நான் மாதம் நான்கைந்து தடவைகளுக்கு மேல் படித்து முடித்து விடுகிறேன்.

‘உங்களுடைய கதைகள் கதைகள்தானா அல்லது மந்திரசக்தி வாய்ந்த பிரம்பா!’ என்றே எனக்குப் புரியவில்லை. உங்கள் கதை

களைப் படிப்பதற்கென்று புத்தகத்தை எடுத்து விட்டால் அப்புறம் கீழே வைக்க எனக்கு மனம் வருவதேயில்லை. உங்களைப் புகழ்ந்து பாராட்ட நான் தகுதியுள்ளவளா என்று கூட எனக்குப் புரியவில்லை. என் உள்ளத்து உணர்ச்சிகள் எவ்வளவு தூரம் தங்கள் பால் ஈடுபட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பினால் ஒரே ஒரு வார்த்தை சொல்கிறேன். உங்களைத் தரிசித்துப் போவதற்கென்றே நான் பம்பாயிலிருந்து பூனாவுக்கு வந்திருக்கிறேன். அப்படியென்றால் என் மனத்தில் தங்கள்பால் ஏற்பட்டிருக்கும் பக்தியையும் சிரத்தையையும் எடுத்துச் சொல்ல வேண்டுமா!

நான் இம்மாதிரிக் கடிதம் எழுதி உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க விரும்பவில்லை. ஆனால் நேற்று நடந்த ஒரு சம்பவம், உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுமாறு தூண்டி விட்டது. நேற்று சாயந்திரம் நான் உலாவி வரலாம் என்று பண்ட் கார்டனுக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு திருடனைக் கண்டேன். அவன் என்னைத் தொந்தரவு செய்யலானான். ஆகவே, நான் அவனை அதட்டி, ''என்னை யாரென்று நினைத்தாய்! பலவந்த தாம்லேயின் மனைவியாக்கும்!'' என்றேன். அவன் என்னைக் கண்டு அஞ்சவேண்டும் என்று எண்ணியே, நான் இவ்வாறு பொய் சொன்னேன். ஆனால் அவன் அதற்கெல்லாம் சற்றும் பயப்படவில்லை. என்னைத் தன் வண்டியில் ஏற்றி உட்கார வைத்துக்கொண்டு உங்கள் வீட்டுவரைக்கும் கொண்டுவந்து விட்டான். கடைசியில் வேறு வழியில்லாமல் போகவே, உங்கள் வீட்டில் நுழையும்படி ஆகிவிட்டது. உங்கள் வீட்டு வாசற்கதவு சாவிகூட அவன் தான் எனக்குக் கொடுத்தான். அவன் அந்தண்டை சென்றபின்தான் நான் என் இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தேன்.

நான் இவ்விதம் அதிகப் பிரசங்கித்தனமாக நடந்து கொண்டு விட்டதற்குத் தாங்கள் என்னை அவசியம் மன்னிப்பீர்கள் என்றே



நம்புகிறேன். நான் வேறு வழியின்றி இம்மாதிரிச் செய்ய நேர்ந்ததற்கு மன்னிக்க வேண்டும் என்று தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நான் தங்களுக்கு இன்னொரு சிரமமும் அளிக்கவேண்டியிருக்கிறது. நேற்று இரவு முழுவதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. ஆகவே, ஒரு கதை எழுதிவிட்டேன். அந்தக் கதையின் பெயர் 'எழுத்தாளனின் காதல்' என்பதாகும். நான் இதுவரை கதை எழுதியதே யில்லை. இதுதான் என் முதற் கதையாகும். எனக்கு இதுவரை கதை எழுதப் 'பிளாட்'டே கிடைத்ததில்லை. மூளை வறண்டதுதான் மிச்சம். ஆனால் நேற்று என்னடாவென்றால் கதைக்குப் 'பிளாட்' மூளையைக் குழப்பிக் கொள்ளாமலே வெகு சுலபமாகக் கிடைத்துவிட்டது. நான் இந்தக் கதையை வேண்டிய சீர்திருத்தங்களுக்காகத் தங்களிடம் அனுப்பியிருக்கிறேன். இதில் உங்கள் பெயரையும் இழுக்கும்படியாகி விட்டது. கடைசியில் இது ஒரு கதைதானே! கதை எங்கேயாவது உண்மையாக இருப்பது உண்டா! ஆகவே, தாங்கள் என்னை மன்னித்து விடுவீர்கள் என்றே நம்புகிறேன்.

நான் இன்று மாலை தங்களைச் சந்திக்க வருவதாக இருக்கிறேன். என் நெடுநாளைய ஆவலைப் பூர்த்திசெய்யத் தங்கள் ஒத்துழைப்பும் கட்டாயம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

தங்கள் அடியாள்,

யமுனாபாயி

கடிதத்தைப்படித்து முடித்ததும் நான் கதையைப் பிரித்தேன். கதை பெரிதாக இல்லை. நான்கே பக்கங்கள் தான் இருந்தது. இருந்தாலும் வெகு சுவாரஸ்யமாக இருந்தது. என் கதைக்கு என்ன 'பிளாட்'டோ, அதே 'பிளாட்', தான் அவள் கதைக்கும். ஆனால் கடைசி முடிவில் மட்டும் எங்கள் இரண்டு பேருக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருந்தது. என் கதையில் கதை எழுத்தாளன் இறந்து விட்டான். திருடனுக்கு அந்த அழகி கிடைத்து விட்டாள். அவளுடைய கதையில் எழுத்தாளன் திருடனைக் கொன்று அழகியை மணந்து கொண்டிருந்தான். அதைப் படித்ததும் எனக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. எனக்கு இரண்டும் ஒன்று தானே! அவள் என்னைக் காதலித்தாள் என்பது எனக்கு நன்கு புலனாகிவிட்டது. திருடன் என்ற முறையில் அவள் காதலிக்கவில்லை. கதை எழுத்தாளன் என்ற முறையில் காதலித்தாள். அவள் எப்படிக் காதலித்தால் என்ன! என்னைத் தானே காதலித்தாள்! ஆகவே, நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைவது ஒருவிதத்தில் என்ன, பலவிதத்திலும் நியாயம் தானே! நான் அவள் கடிதத்தை ஒரு முறை படித்தேன். இருமுறை படித்தேன்; பன்முறை படித்தேன். கடிதம் முழுவதிலும் 'அவன் தான் இவன்! அவன் தான் இவன்!' என்று எழுதியிருப்பதாகவே எனக்குத் தோன்றியது. 'அவன் தான் இவன்!' என்று என் காதருகிலே யாரோ சொல்லிப் போனார்கள். காற்றும் அதை ஆமோதித்து, 'அவன் தான் இவன்! என்று

பறை சாற்றியது. இருதயம் மார்பிலே ஒரு குத்துக் குத்தி, 'அவன் தான் இவன். என்ன யோசிக்கிறாய்!' என்று கடிந்து கூறியது. இவ்வளவு நாட்களும் என் வாய், 'அவன்தான் இவன்!' என்று வாய் திறந்து சொல்லவில்லை. ஆனால் இன்று வாழ்க்கையிலேயே முதல் தடவையாக பலவந்தமாக என் வாயும், 'அவன்தான் இவன்!' என்று சொல்லி விட்டது!



5

அன்று எனக்கு ஒவ்வொரு கணம் கழிவதும் ஒவ்வொரு யுகமாகப் பட்டது. எங்கள் இருவருக்கும் அறிமுகம் ஏற்பட்டு வன்னிசாக இருபத்திநாலு மணி நேரம் கூட ஆகவில்லை. ஆனால் அவன் வருகையை நீண்ட நாள் பிரிந்திருந்த நண்பன் வருவது போன்ற அடக்க மாட்டாத ஆவலுடன் எதிர்பார்க்கலானேன். கடைசியில் என்ன இருந்தாலும் அவன், கள்வனான என் பார்வையில் கதை எழுத்தாளனான என் மனைவிதானே!

பொழுது சாய்ந்தது. மெதுவாக மாலை நேரமும் வந்தது. என் வேலைக்காரன் வந்து, "அவன் வந்து விட்டான்!" என்றான்.

"சரி, வாசற்புறத்து அறையில் உட்காரவை. அப்புறம் இன்னொரு விஷயம். நான் மணி அடிக்கும் சத்தம் கேட்டதும், இந்தப் பாக்கெட்டை வெளியிலிருந்தபடியே அறையில் போட்டுவிட்டுப் போ! புரிந்ததா?" என்றேன்.

"சரிங்க, எஜமான்!"

'நவஜீவன்' மாதப் பத்திரிகையின் அந்த மாதத்து இதழில் அட்டைப் படமாக என் புகைப்படம் வந்திருந்தது. அதைத் தான் நான் வேலைக்காரனிடம் கொடுத்து அறையில் போட்டுப் போகுமாறு சொன்னேன். நான் இது வரை என் புகைப் படத்தை எந்தப் பத்திரிகையிலுமே வெளியிட்டதில்லை. ஆனால் 'நவஜீவன்' காரியாலயத்தார் அந்த மாதம் ஒரு 'கதை மலர்' தயாரித்திருந்தார்கள். அவர்களுடைய பிடிவாதத்தின் பேரில் நான் என் புகைப்படம் ஒன்றை அவர்களுக்குக் கொடுக்கும்படி ஆகிவிட்டது.

எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்த பின்னர் நான் மெதுவாகக் கீழே இறங்கிச் சென்றேன். மாடிப்படி அந்த அறையின் வழியாகத் தான் சென்றிருந்தது. அவன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து ஏதோ யோசனை செய்து கொண்டிருந்தான். என் காலடிச் சத்தத்தைக் கேட்டதும் அவன் துணுக்குற்றான். பிறகு சட்டென்று எழுந்து மாடிப் படியைப் பார்க்கலானான். அவனுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்துக்கு ஓர் எல்லையில்லை. அவன் முகம் வெளிறி விட்டது. அவனுக்கு நான் இங்கே இருப்பேன் என்ற எண்ணம் கடுகளவாவது இருந்தால் தானே! "அட, நீயா!" என்று கேட்டான்.

"ஆமாம், நான்தான்!" என்றேன்.

"நீ இங்கே எங்கே வந்தாய்!"

"திருடர்கள் இந்த ரகசியத்தை எல்லாம் சொல்வார்களா!"

"இங்கே என்ன செய்து கொண்டிருந்தாய்!"

"உன்னைத்தான் தேடிக் கொண்டிருந்தேன். இன்னுமொரு தடவை உன்னைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருந்தது."

"அப்படியா சமாசாரம்! சரி, பார்த்து விட்டாய் அல்லவா! போய் வா!"

"என்ன! இவ்வளவு சீக்கிரமா!"

"ஆமாம், என் கணவர் இப்பொழுது இங்கே வரப் போகிறார்!"

"அவர் இங்கே வருவதற்கு இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். எனக்குத் தெரியாது என்று எண்ணாதே!"

"இல்லை, உனக்குத் தெரியாது. நாங்கள் சில முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பேசப் போகிறோம். அதனால் அவர் இப்பொழுது இங்கே கட்டாயம் வருவார்!"

"இல்லை, அவர் இப்பொழுது இங்கே வரவே மாட்டார்! கதை எழுத்தாளர்கள் என்றாலே, அவர்களுக்கு ஒருவிதமான வியாதி உண்டு. சொன்னது சொன்னபடி அவர்களுக்குச் செய்யவே தெரியாது. அவர் இப்பொழுது கதை எழுதுவதில் மூழ்கியிருக்கிறார். கதை எழுதி முடியும் வரை அவர் கீழே இறங்கி வரமாட்டார்!"

"ஆமாம், இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்!

"நான் அவரிடமிருந்துதானே வருகிறேன்!"

"என்ன! அவரிடமிருந்தா! அவரிடம் உனக்கு என்ன வேலை!"

"ஒரு கதை காண்பிக்கப் போயிருந்தேன்!"

"கதையா! உன்னுடையதா!"

"ஆமாம், நேற்று நீ சொன்னாய் அல்லவா! இரவு போனதும் ஒரு கதை எழுதி முடித்து விட்டேன்!"

"எனக்குக் காண்பிக்க மாட்டாயா!" என்று கேட்டாள் அவள்.

நான் கதையை அவள் கையில் கொடுத்து விட்டேன். அவள் அந்தக் கதையைப் படித்துவிட்டு, "இதுதானா உன் கதை! இதுதான் கதையின் முடிவோ!" என்றாள்.

"இதைத் தவிர வேறு ஒரு நல்ல முடிவும் எனக்குத் தோன்றவில்லை!"

"நானும் ராத்திரி ஒரு கதை எழுதியிருக்கிறேன்!"

"எழுத்தாளனின் காதல் என்பதுதானே!"

"உனக்கு எப்படித் தெரிந்தது!" என்று துணுக்குற்றுக் கேட்டாள் அவள்.

"உன் கணவரிடமிருந்து அந்தக் கதையைக் கவர்ந்துகொண்டு வந்து விட்டேன்!"

"நீ அதைப் படித்துவிட்டாயா!"

"இல்லை, இன்னும் படிக்கவில்லை. ஆனால் இப்பொழுதே படிக்கப் போகிறேன்!"

"வேண்டாம், வேண்டாம்! அது உனக்கு உபயோகப்படாது. என்னிடம் கொடுத்துவிடு!"

"திருடின பொருளைத் திருடன் திருப்பிக் கொடுத்தான் என்று நீ எங்கேயாவது எப்பொழுதாவது கேள்விப்பட்டது உண்டா!"

இவ்வாறு சொல்லிவிட்டு நான் கதையை எடுத்துப் பிரிக்கலானேன். அவள் என் அருகில் வந்து, "சற்று இரு!" என்றாள்.

"என்ன! ஏதாவது சொல்ல வேண்டுமோ!"

"உன்னிடம் ஒரு ரகசியம் சொல்ல வேண்டும்!"

"என்ன! ரகசியமா! சொல், கேட்கிறேன்!"

"நான் பலவந்த தாம்லேயின் மனைவியில்லை!"

"என்ன, நீ சொல்வது வாஸ்தவம்தானா!"

"ஆமாம். நேற்று நான் உன்னிடம் நடித்த நாடகம் எல்லாம் வெறும் நடிப்பு. அதில் கொஞ்சங்கூட உண்மைக் கலப்பில்லை."

"அப்படியா! ரொம்ப சந்தோஷம். உனக்குக் கல்யாணம் ஆகவில்லை என்பதை அறிந்து பரம சந்தோஷம். நானும் ஒரு ரகசியம் உன்னிடம் சொல்லட்டுமா!

"சொல்லு, சொல்லு!"

"நான் உன் கதையைப் படித்துவிட்டேன்!"

"பூ! இவ்வளவு தானா!—என்ன! நீ என் கதையைப் படித்து விட்டாயா!"

"ஆமாம்!"

"என் கதை உனக்குக் கட்டாயம் தெரியுமா!"

"கட்டாயம் தெரியும், நிஜமாகத் தெரியும், நிச்சயமாகத் தெரியும். போதுமா!"

"என்னிடம் நீ வெறும் நடிப்புத்தானே நடித்துக் கொண்டிருந்தாய்!"

"ஆமாம்!"

"அப்படி என்னிடம் எதற்காக நடித்தாய்!"

"உன் வாயால் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காகத்தான்!"

"சரி, நேரமாகிறது! நீ போய் வா. தாம்லேயுடன் நான் சில முக்கியமான விஷயங்கள் பேசவேண்டியிருக்கிறது!"

"என்னைப் போகச் சொல்கிறாயா! நேற்று நீ என்னிடம் என்ன சொன்னாய் என்பதை அதற்குள் மறந்து விட்டாயா! நீ சொன்ன தன்பேரில் தான் நான் கதை எழுதிக்கொண்டு வந்தேன். நீ வேறு யாருக்கும் மனைவி இல்லை என்பதும் இன்று எனக்குத் தெரிந்துவிட்டது! என் கதையின் முடிவு உண்மை ஆகாதா!"

"நீயும்தான் என் கதையைப் படித்திருக்கிறாயே! அதன் முடிவு உண்மையாகக் கூடாதா!"

"உன் விருப்பம் அதுதானா!"

"ஆமாம்!"

"நீ தாம்லேயைக் காதலிக்கிறாய் என்று தானே நான் எடுத்துக் கொள்ள வேண்டும்!"

"ஆமாம்!"

"சரி, இருக்கட்டும், சொல்லுகிறேன்."

இவ்வாறு சொல்லி விட்டு முகத்தைக் கம்பீரமாக வைத்துக் கொண்டு நான் அந்த அறையிலேயே இங்கும் அங்கும் நடைபோடலானேன்.

அவள் என்னைச் சமாதானப் படுத்தும் நோக்கத்துடன். "நீ யாரோ, என்னவோ! எனக்குத் தெரியாது! இருந்தாலும் நீ ரொம்ப நல்லவனாகத் தோன்றுகிறாய். ஆனால் நான் தாம்லேயின் பெயரில்தான் மோகம் கொண்டிருக்கிறேன். அவரையேதான் காதலிக்கவும் செய்கிறேன்."

"நீ எப்பொழுதாவது தாம்லேயைப் பார்த்தது உண்டா!"

"இல்லை!"

"அவருடைய படத்தையாவது பார்த்தது உண்டா!"

"இல்லை!"

"அதுவும் இல்லையா! அவர் எப்படியிருப்பார் என்பதாவது உனக்குத் தெரியுமா!"

"தெரியாது!"

"ஒன்றும் தெரியாமல் ஒருவரைக் காதலிப்பது கொஞ்சங்கூட நன்றாயில்லையே!"

"ஏன் நன்றாயில்லை!"

"நீ ஒரு தடவை அவரைப் பார்த்து விட்டால், அப்புறம் அவரை வெறுக்கத் தொடங்கி விடுவாய்!"

"அப்படி வெறுப்பதற்கு அவரிடம் என்ன குறை இருக்கிறது!"

"ஒரு விஷயம் சொல்லட்டுமா! இப்பொழுது அவருக்கு வயது ஐம்பதாகிறது. முன் பக்கத்து மூன்று பற்கள் மறைந்து எத்தனையோ காலம் ஆகிறது. மூக்கு அஷ்டக் கோணல். தலையிலே அங்கொன்றும் இங்கொன்றுமாக மயிர்—அதுவும் நரைத்த மயிர் இருக்கிறது. கொஞ்சம் சிரமம் எடுத்துக் கொண்டால் தலையில் எத்தனை மயிர் இருக்கிறது என்பதைக் கூட எண்ணி விடலாம். அதையும் தவிர இடது கையில் இரண்டு விரல்கள் ஆபரேஷன் செய்து எடுக்கப்பட்டு விட்டன."

"இன்னும் வேறு ஏதாவது குறைஉண்டா!"

"உனக்கு இத்தனை குறை போதாதா!"

"போதாது. அவருக்கு வயது நூற்றைம்பதுக்கு மேல் ஆகியிருந்தாலும் சரி, அவர் வாயில் உள்ள பற்கள் அத்தனையும் விழுந்து வாய் மணிபர்ஸாகப் போயிருந்தாலும் சரி, மூக்கு அஷ்டக்கோணல் மட்டும் அல்ல; ஆயிரம் கோணலாகப் போயிருந்தாலும் சரி, தலையில் ஒரு மயிர்கூட இல்லாமல் ஒரே வழுக்கையாக இருந்தாலும் சரி, இடது கையின் இரண்டு விரல்கள் மட்டும் என்ன! இரண்டு

கைகளில் உள்ள எல்லா விரல்களுமே துண்டிக்கப்பட்டிருந்தாலும் சரி, நான் என் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள மாட்டேன்!''

''அவரை நீ இவ்வளவு காதலிக்கிறாயா!''

''ஆமாம்!'' என்றாள் அழுத்தந் திருத்தமாக.

''என்னைப் போன்ற அதிர்ஷ்டக் கட்டை வேறு யார் இருக்க முடியும்! நான் தாம்லேயாக இருந்தால் என் உயிரையே உனக்காக அர்ப்பணம் செய்து விடுவேன். ஆனால் அந்தத் தாம்லே......'' என்று சொல்லியவாறே நான் 'காலிங் பெல்'லின் பித்தானை அழுத்தினேன். வேலைக்காரன் அடுத்த நிமிஷம் தபால்காரன் தபால்களை விட்டெறிந்து விட்டுப் போவது போலவே, 'நவஜீவன்' பத்திரிகையின் இதழை விட்டெறிந்து விட்டுப் போனான்.

நான் தரையில் குனிந்து அதை எடுத்து மேல் 'ராப்பரை'க் கிழிக்கப் போனேன். அதற்குள் அவள் இடை மறித்து, ''நீ அவருடைய கடிதத்தை எதற்காகப் பிரிக்கிறாய்!'' என்றாள்.

''கொஞ்சம் படிக்கலாம் என்று நினைத்தேன். அப்படியானால் இந்தா, நீயே உடைத்துக் கொடு. என்னைக் காட்டிலும் உனக்கு அதிக உரிமை உண்டு'' என்று சொல்லி அவளிடம் கொடுத்தேன்.

அவள் அதைப் பிரித்தாள். இடியே அந்த அறையில் விழுந்திருந்தால் கூட அவளுக்கு அவ்வளவு அதிசயமும், ஆச்சரியமும், பதற்றமும் ஏற்பட்டிருக்காது. அட்டைப் படத்தைப் பார்த்து அவள் அவ்விதம் துணுக்குற்றாள். அவள் ஒரு தடவை படத்தைப் பார்த்தாள். பிறகு என்னைப் பார்த்தாள். மறுபடியும் படத்தைப் பார்த்தாள். என்னையும் படத்தையும் மாறி மாறி அவள் பார்ப்பதைக் கண்ட நான் மெதுவாக அவளை அணுகி, ''என்ன இப்படிப் பார்க்கிறாயே, எதற்காக!'' என்று கேட்டேன்.

''அப்படியானால் நீங்கள்தான் பலவந்த தாம்லேயா!'' என்று கேட்டாள் அவள்.

இம்மாதிரி நிகழ்ச்சிகளைக் கண்டவர்கள்தான் என் நிலைமையையும் அவள் நிலைமையையும் நன்கு உணர முடியும். நான் தலை குனிந்து, ''இல்லை, யமுனா! நான் இப்பொழுதும் அதே பழைய கள்வன்தான். தாம்லேயின் சர்வத்தையும் நான் திருடிக் கொண்டு விட்டேன். அவருடைய உடல், உள்ளம், ஆத்மா அனைத்தையும் நான் கவர்ந்து விட்டேன். நான் உன்னெதிரே இப்பொழுதும் ஒரு திருடன்தான். ஏனெனில் இப்பொழுது நான் உன்னிடமிருந்து ஒரு பொருளை—அதாவது உன் அன்பைத் திருடத் திட்டமிட்டிருக்கிறேன்!'' என்றேன்.

அவள் பேசாமல் தலையைப் பிடித்துக் கொண்டு பக்கத்துச் சோபாவில் உட்கார்ந்து விட்டாள். தூரதேசத்துப் பிரயாணம் செய்து வருபவன் களைத்துப் போய் உட்காருவான் அல்லவா! அதுபோல அவள் உட்கார்ந்திருந்தாள். நான் அவள் எதிரே சென்று குனிந்து, ''யமுனா, என் முடிவில் உனக்கு மகிழ்ச்சி உண்டாக வில்லையா!'' என்று கேட்டேன்.

''மகிழ்ச்சியா! ஆமாம்...இல்லை...ஆமாம்... எனக்கு முன்பே தெரியாமல் போய் விட்டதே!'' என்று நடுங்கியவாறே சொன்னாள்.

''யமுனா! இன்று உலகத்துக்குள்ளேயே அதிக பாக்கியம் செய்த மனிதன் நான் தான். நீ என்னைப் பாராமல் கொள்ளாமல் காதலித்தாய். அதுவும் எப்படிப்பட்ட காதல்! நான் எவ்வளவோ விதமாக உன்னைப் பரீக்ஷித்தும் நீ அந்தக் காதலைக் குறைய விடவில்லை. நான் உன்னிடம் வேறு ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. நான் உன்னிடம் ஒன்றே ஒன்று கேட்க விரும்புகிறேன். உன் கதையின் முடிவு நன்றாயிருக்குமா, என் கதையின் முடிவு நன்றாயிருக்குமா! சொல்லு, பார்ப்போம்!'' என்றேன்.

''என்னுடையது தான்!'' என்றாள் அவள் நாணிக் கோணிக் கொண்டே.


''நான் உன்னிடம் ஒன்று வேண்டிக் கொள்ளுகிறேன்'' என்றேன்.

''என்ன!'' என்று கேட்டாள் அவள்.

''இன்றுவரை நான் எத்தனையோ கதைகள் எழுதியிருக்கிறேன். ஆனால் ஒன்றின் முடிவாவது உண்மையாக அமையவில்லை. 'திருடனின் காதல்' என்னும் இந்தக் கதையை உண்மைக் கதையாக்க விரும்புகிறேன். ஆகவே, யாருடைய கதையின் முடிவு நன்றாயிருக்கும் என்று யோசித்துச் சொல்லு!'' என்றேன்.

''என் உள்ளங்கவர்ந்த உங்கள் கதையின் முடிவு தான்!'' என்று சொல்லிச் சிரித்தவாறே அவள் தன் கதையைக் கிழித்து ஒரு மூலையில் விட்டெறிந்து விட்டாள். (முற்றிற்று)

[ஸ்ரீ தன்ராம் பிரேமின் ஹிந்திக் கதையைத் தழுவியது]



''அந்தப் புடவை கட்டிக் கொண்டால் நன்றாக இருக்குமா?''

''உங்களுக்கு ரொம்ப நன்றாக இருக்கும், அம்மா!''


''எனக்கு இல்லையப்பா! என் கணவருக்குத்தான் நன்றாக இருக்குமா என்று கேட்கிறேன்?''

''கணவருக்கா...... புடவையா?''


''ஆமாம், டிராமாவில் பெண் வேஷம் போட்டுக் கொள்ளப் போகிறார். அதற்குத்தான் கேட்கிறேன்!''

அதி அற்புத ரகங்கள்!

புகழ் பெற்ற ஸ்விஸ் பாக்டரிகளில் தயாரானது
ஒவ்வொன்றும் 5 வருஷ உத்திரவாத முள்ளவை



5 ஜுவல் க்ரோம்	30/-	ரோல்டுகோல்டு	33/
7 ,, க்ரோம்	35/-	உயர் ரகம்	38/-
15 ,, க்ரோம்	44/-	ரோல்டுகோல்டு	48/-



5 ஜுவல் க்ரோம்	28/-	ரோல்டுகோல்டு	38/-
7 ,, க்ரோம்	33/-	உயர் ரகம்	35/-
15 ,, க்ரோம்	42/-	ரோல்டுகோல்டு	45/-



முழுவதும் ஜுவல்	19/-	உயர் ரகம்	21/-
ரேடியத்துடன்	21/-	செக். செகண்டு	23/-
ஸ்பெஷல் உயர்ந்த		ரக மெஷின்	27/-



5 ஜுவல் க்ரோம்	26/-	ரோல்டு கோல்டு	32/-
7 ,, க்ரோம்	32/-	ரோல்டு கோல்டு	36/-
15 ,, க்ரோம்	48/-	ரோல்டு கோல்டு	58/-




5 ஜுவல் க்ரோம்	22/-	உயர் ரகம்	25/-
5 ,, ரோல்டு கோல்டு	30/-	உயர் ரகம்	33/-
15 ,, க்ரோம்	45/-	ரோல்டு கோல்டு	55/
டைம் பீஸ்	20/-	உயர் ரகம்	25/-
பாக்கெட் வாட்ச்	12/-	உயர் ரகம்	15/-

தபால் செலவு பிரத்யேகம். இரண்டு கடிகாரங்கள் ஆர்டருக்கு தபால் செலவு இனாம்

PIONEER WATCH Co
POST BOX NO 11428 CALCUTTA

உத்திரவாதமுள்ள ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் சாமான்கள்

என்றும் பிரகாசமாக இருக்கும்.
என்றும் மங்காது.



ஒவ்வொரு வீட்டுக்கும், ஹோட்டல், ஆஸ்பத்திரி, கான்டீனுக்கும் தேவையான சாமான்களும் உள்ளன.

டாம்பீகமானவை ஆனால் மலிவானவை.
சுகாதாரமானவை — நீடித்துழைப்பவை.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை



1 மண்டலம் (48 நாள்) பூஜை செய்தும் ஆயுள் பூராவும் பலன் தரும் வெள்ளி ரக்ஷை ரூ. 43-12-0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் தங்கள் நியாயமான கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். மேற்படி தொகை வெள்ளி, விளம்பரம், தபால் செலவிற்குமாகத் தேவை. மீதி ரூ. 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B. (1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளி நாட்டு பேர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) வி. பி. கிடையாது. (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

●

கோட்டமருதூர்
ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜ்யோதிஷ ஆபீஸ்
அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt.)



Edited, Printed and Published by R. Krishnamurthy at The "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD. No. M. 4392

